கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

266

புரட்டாதி
01.09.2025

100/-

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



மு.அநாதரட்சகன்

ஏ.எஸ்.சற்குணராசா

சி.ரஞ்சிதா

குப்பிளான் குமரன்

றம்ஸியா ஹம்ஸா

கிருபானந்தகுமாரன்

இ.புஷ்பா

சோ.தேவராஜா

திக்குவல்லை கமால்

செய்னுலாப்தீன் நஸீரா

கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்

பவானி சற்குணசெல்வம்

உடப்பூர் வை.இராமச்சந்திர

ஈழக்கவி

கொ.பாபு

கோகிலா மகேந்திரன்

தமிழ்க்கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2025 - புரட்டாதி(01.09.2025)

# பொருளடக்கம்

சிறுகதைகள்

ஏ.எஸ்.சற்குணராஜா - 05
தர்ஹாநகர் றம்ஸியா ஹம்ஸா - 13
இ.புஷ்பா - 18
திக்குல்லை கமால் - 22
கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் - 25

கவிதைகள்

செய்னுலாப்தீன் நஸீரா - 12
கும்பிளான் குமரன் - 20
சோ.தேவராஜா - 21
உடப்பூர் வை .இராமச்சந்திரன் - 28
ஈழக்கவி - 32



நூல் விமர்சனம்

பவானி சற்குணசெல்வம் - 23



தொடர் நாவல்

தமிழ்க்கவி - 37

உள் ஓவியங்கள்

கனிவுமதி

கட்டுரைகள்

**நவீன ஓவிய உலகில் பின்னைய மனப் பதிவு வாத ஓவியர் போல் செசான் சில குறிப்புகள்**
மு.அநாதரட்சகன் - 03



**உயிர்வெளி: ஈழப் புதுக்கவிதையில் அகம் (ஈழத்துப் பெண்களது காதல் கவிதைகளின் முதல் தொகுப்பு)**
சி.ரஞ்சிதா - 08

**பறையனாங்குள பொலீஸ்**
எஸ்.கிருபானந்தகுமாரன் - 16



**தமிழ் பண்பாடு ஊற்றுக்களும், ஓட்டங்களும் கலாநிதி ந.இரவீந்திரன்**
கொ.பாபு - 29

**ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும் - 04**
கோகிலா மகேந்திரன் - 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2025 புரட்டாதி இதழ் - 266**



**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்



**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## வாசிப்பு மாதம் வரப்போகுது...

ஐப்பசி மாதம் வாசிப்பு மாதமாக ஈழத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது. பாடசாலைகள், நூலகங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றில் "நூலக மாதம்" என்ற பதாதைகள் தொங்க விடப்பட்டு நூற் கண்காட்சிகள் நடாத்தப்பட்டு இந்நிகழ்வுகள் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஈழத்தைப் பொறுத்த வரையில் பிரதேச சபையின் கீழ் பல நூலகங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாறான நூலகங்கள் நூல்களை புதிதாக கொள்வனவு செய்வதாயின் பிரதேச சபையின் ஊடாகவே நூல்களைக் கொள்வனவு செய்து கொள்ள முடியும். ஒரு நபர் ஒரு நூலை வெளியிட்டால் அந்நூலை கொள்வனவு செய்யும் படி ஒரு கடிதத்தை முதலில் கொடுக்க வேண்டும், பின்னர் அவர்கள் சம்மதம் தெரிவித்தால்,(அது எப்போதோ தெரியாது) மறு கடிதம் கழிவு தொடர்பான பற்றுச்சீட்டுடன் கொடுக்க வேண்டும். அத்துடன் குறித்த பிரதேச சபைக்கு உட்பட்ட நூலகங்களின் எண்ணிக்கைக்கு அமைய நூல்களை வழங்க வேண்டும். சில வாரங்கள் கழித்து மீள சென்று கொடுப்பனவு தொடர்பாக விசாரித்து ஞாபகமூட்ட வேண்டும். சில சமயம் அவர்கள் கொடுப்பனவுக்கான காசோலையை எழுதி வைத்து இருப்பார்கள், இல்லாது போயின் மறுபடி இன்னொரு தடவை சென்று காசோலையைப் பெறலாம். பின்னர் வங்கியில் சென்று வைப்பு செய்யலாம். எனவே ஒரு குறித்த ஒரு நபர் ஒரு நூலை வெளியிட்டு விட்டு அவர்களது பிரதேச நூலகத்தில் ஒரு நூலை விற்பனை செய்வதற்கு படும் பாடு இது தான். பல சமயம் நிதிப் பற்றாக்குறை என நூல்கள் கொள்வனவு செய்யப்படுவதில்லை, அதனை விட குறித்த பகுதிக்கு தொடர்பான உத்தியோகத்தர் நூலைக் கொண்டு செல்லும் எழுத்தாளர்களை நடாத்தும் விதம் மிக அவமானமாக இருக்கும். எங்கடை புத்தகங்களை வாங்குவதற்கு பெரிய பந்தா காட்டும் இவர்கள் இந்தியாவில் இருந்து வெளி வரும் குமுதம், ஆனந்தவிகடன் போன்றவற்றை மாதாந்தம் வாங்கி போடுகிறார்கள்... ஈழத்தில் இருந்து இன்று வருகின்ற சஞ்சிகைகளை தமது நூலகத்திற்கு கொள்வனவு செய்து அதனை காட்சிப்படுத்துவது மிக அரிது. இவ்வாறான ஒரு நிலையில் ஆண்டு தோறும் நூலக மாதம் வருகுதெண்டவுடனை பிரதேச சபை தலைவரும், குறித்த பிரதேச சபை நூலகர்களும் நிகழ்ச்சி நடாத்துதற்கு வெளிக்கிட்டு விடுவினம்... ஆனால் அங்கு அண்மைக்கால நூல்கள் எதுவும் இருக்காது. இப்பவும் இராமாயணமும், பாரதி கவிதையும், திருக்குறளும், பொன்னியின் செல்வனும் போன்ற நூல்களையே இவர்கள் நூலகத்திற்கு உரிய நூல்களாக நினைக்கிறார்கள். இந்த நிலை மாறும் வரை ஈழத்து எழுத்தாளர்களுக்கு விமோசனம் இல்லை. எத்தனை வகையான நூல்கள் இன்று ஈழத்தில் வெளி வருகின்றன. அவற்றை வாங்கி ஊக்குவிக்க வேண்டிய முக்கிய பொறுப்புள்ளவர்கள் பிரதேச சபை நூலகங்களே... கண்துடைப்பு கொண்டாட்டங்களை விடுத்து சமூக முன்னேற்றத்திற்கான வழி வகைகளை செய்யுங்கள்... அதுவே எதிர்கால எமது சமுதாயத்தை காப்பாற்றும்.!

- க.பரணீதரன்


ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன், புத்தகப்பண்பாட்டுப் பேரவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.அநாதரட்சகன்

# நவீன ஓவிய உலகில் பின்னைய மனப்பதிவுவாத ஓவியர் போல் செசான் (Paul Cezanne) சில குறிப்புக்கள்



நவீனத்துவம் (Modernism) பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் மேற்கு ஐரோப்பிய தோன்றிய கலாச்சார இயக்கம் என்பது அறிந்ததே. இதனை அக்கால வெளியில் உருவான சிந்தனைப் போக்கு எனவும் கூறுவது வழமை.

பாரம்பரியமாக இருந்துவந்த மரபு சார்ந்த கலை, இலக்கிய, சமூகக்கோட்பாடுகளை கேள்விக்குட் படுத்திய இச்சிந்தனைப் போக்கு, புதிய கருத்தாக்கங் களை பல துறைகளிலும் புகுத்தியது. தனிநபரின் அனுபவங்கள், சுயவெளிப்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கியதுடன் அதனை கலை, இலக்கியங்களிலும் வலியுறுத்தி ஊக்குவித்தது.

இதனால் இது இலக்கியம், இசை, ஓவியம், கட்டிடக்கலை, நாடகம், சிற்பம் மற்றும் தத்துவம் எனப் பலவற்றிலும் ஏற்படுத்திய தாக்கம் அளப்பரியது. நவீனத்துவத்தின் பேறாக, மேற்கிளம்பிய கோட்பாட்டு வாதங்கள், கருத்தாக்கங்கள் குறிப்பாக ஓவியக் கலையில் ஏற்படுத்திய மாற்றங்கள் கவனத்துக்குரியன.

அத்துடன் ஓவியத்தில் புதிய மாதிரிகளை, பாணிகளை (Style) வடிவங்களை (Forms) அறிமுகம் செய்தது. "நவீன ஓவியம்" என்ற சொல்லாடலும் பிரபல்யமானது. இதில் கனவுருவாதம் (Cubism) குறியீட்டு வாதம் (Symbolism) வெளிப்பாட்டுவாதம் (Expressionism) மனப்பதிவுவாதம் (Impressionism) பின்னைய மனப்பதிவு வாதம் (Past Impressionism) என்பன நவீன ஓவியத்தின் வெளிப்படுத்தலுக்கு அடித்தளமாகின.

இவற்றில் பின்னைய மனப்பதிவு வாத ஓவியப் பாணி (Past Impressionism) என்பதும் முக்கியமானது. இவ் ஓவியப்பாணி இயக்கத்தில் முக்கியமான ஓவியர்களாக போல் செசான் (Paul Cezanne) யூகின் கார்ரே, போல் கௌகின் (Paul Gauggin) வின்சென்ற் வான்கோ (Vincent Van Gogh) ஜார்கஸ் சீராட் (Georges Serrat) வெளட்ரெக் போன்றோர் வரிசைப்படுத்தப்படுகின்றனர்.

இவர்களில் போல் செசான் என்ற பின்னைய மனப்பதிவு ஓவியர் பற்றிய குறிப்புக்களையே இக்கட்டுரை விபரிக்க முயல்கின்றது. முதலில் பின்னைய மனப்பதிவு வாதம் என்பதன் முக்கிய அம்சங்கள் யாவை எனப் பார்ப்போம். இது ஒரு கலை இயக்கமாக மனப்பதிவு வாதத்திற்கு பின்ப வந்த கலை இயக்கமாகும். மனப்பதிவு வாதத்தின் வெளிப்பாட்டுக்கூறுகளை இது ஏற்றுக் கொள்கின்றது. ஆனால் அவற்றை மேலும் வளர்த்து தனித்துவமாகவும், உணர்வுபூர்வமாகவும் வெளிப்படுத்து கின்றது. இது மனப்பதிவுவாதத்தின் தொடர்ச்சியாக பார்க்கப்படுகின்றது. இயற்கையின் இரகசியங்களை சித்தரிப்பதில் அதிக கவனஞ் செலுத்தியது. வடிவ பிரயோகத்தில் கூர்ந்த ஈடுபாடும், பிரகாசமான என வர்ணங்களைப் பயன்படுத்தலும், உணர்ச்சி வெளிப் படுத்தலும், குறியீட்டுத்தன்மையுடன் உருவச்செறிவு கொண்டவையாகவும் பின்னைய மனப்பதிவுவாத ஓவியங்கள் புதிய பாணியில் அமைந்தன. அத்துடன் இயற்கையை கனகச்சிதமாக பதிவுசெய்வது மட்டும் அல்லாது அக்காட்சி ஏற்படுத்தும் உணர்ச்சியை வெளிப் படுத்துவதே முக்கியம் என இப்பாணியினரின் கருத்தாக இருந்தது.

இத்தகைய ஓவியப்பாணியின் தந்தையாக கருதப்படுபவரே போல் செசான் (Paul Cezanne) இவர் பிரான்ஸ் தேசத்தின் தென்பகுதியில், ஐசன் பிரோ வின்சி (Aix Provinse) என்ற இடத்தில் *19.01.1839*ல் பிறந்தார். பிரதேச வங்கியின் உரிமையாளரான இவரது தந்தை மகனை சட்டத்துறையில் கல்வி பயில விரும்பினார். எனினும், போல் செசானின் கவனம் ஓவியத்தில் சென்றது. சட்டக்கல்வியை நிறுத்திவிட்டு, பாரிஸ் சென்று அங்கு மனப்பதிவு ஓவியரான பிசாரோ (Pissaro) வைச் சந்தித்தார்.

அங்கு ஏற்பட்ட மனத்தாக்கம் அவரை மீண்டும் ஐசன் பிரோவின்சிக்கு திரும்ப வைத்தது. அங்கு தன்னைச் சுற்றியுள்ள இயற்கையான நிலத்தோற்றக் காட்சிகளை ஓவியங்களாக வடிவமைத்தார். இயற்கையை நேசித்த போல் செசான் காடுகளிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைச்சரிவுகளிலும், நதிக்கதைகளிலும் தனியாக அலைந்து திரிந்தார். அக்காட்சிகளை புதிய அர்த்தத்துடன், ஓவியங்களாக வடித்தார். அவை இயற்கையைப் பல வடிவங்களாகப் பகுத்து வர்ணக் கலவைக்கு முக்கியத்துவம் அளிப்பவையாக அமைந்தன.

தெற்கு பிரான்சின் ஐசன் பிரோவின்சி (Aix Provinse) பகுதிக்கு பயணிப்பவர்கள் அங்குள்ள எட்ரோயின் குன்றுகள், மற்றும் சோங்விக்டோவர் மலைச்சரிவுகள் என்பவற்றின் காட்சிகள் அனைத்தையும் போல் செசானின் ஓவியங்களில் பார்த்த அனுபவங்களைப் பெறுவர் எனக் கூறப்படுவதுண்டு. கூடவே அக்கணம் பார்வையானர்களின் கண்ணும், மனமும் போல் செசானுடையதாய் உருமாற்றம் பெற்று விடுகின்றது. ஒரு கலைஞன் இயற்கையோடு மானசீகமாக உறவாடும்போது, அவனுள் இயற்கை விழித்தெழுகின்றது என்பதற்கு செசானின் ஓவியங்கள் சாட்சியமானவை. போல் செசான் கத்தோலிக்கர். அவரது இயற்கை மீதான நேசிப்புக்கு சமய நம்பிக்கையும் தூண்டுதலாக இருந்துள்ளது.

இதற்கு "When I Judge art, I take my painting and put it next to a god made objects like tree and flower" என்கிற அவரது கூற்று சான்று பகர்கின்றது. அத்துடன் அவரது ஓவியங்கள் இயற்கையின் அற்புதங்களை வெளிப்படுத்துவன என்பது அழகியல் விமர்சகர்களது கருத்து. பொதுவாக ஒரு மொழியில் பெயரும், உருவும், ஓவியம் எவ்வளவு முக்கியமானதோ அத்தகு முக்கியத்துவம் வாய்ந்ததாக போல் செசானின் ஓவிய மொழியில், வடிவமும், வர்ணங்களும், படைப்பாக்கத் தூண்டலும் இருந்தன.

தவிர, அழகியல் உணர்வுகள் ஓவியத்துக்கு வெளியே இல்லை. ஓவியத்துக்குள்ளேயே வர்ணங்கள், வடிவங்கள், விவரணம் என்கின்ற சேர்க்கைக்குள்ளே (Composition) நிழல் போல உள்ளது என்பதற்கு போல் செசானின் ஓவியங்கள் முன்னுதாரணங்களாகும்.

போல் செசானின் ஓவியங்கள் இயற்கையை அழகியலுடன் அணுகி அதன் புதிர்களை அவிழ்ப்பன. அவை இயற்கை குறித்து எண்ணற்ற பதிவுகளை, அனுபவங்களை, அனுமானங்களை முன்வைக் கின்றன. நாம் இயல்பியல், இயற்கையின் அரூபத்தன்மை குறித்தோ அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் அப்புதிர்களைப் போல் செசானின் படைப்புக்கள் அவற்றை உணரச்செய்கின்றன.

இன்னொரு விடயம், போல் செசான் ஓவியம் பயின்ற காலத்தில், ஐரோப்பாவில் நிர்வாணமாக நிற்கும் பெண்களைப் பார்த்து வரைவது சாதாரண விடயம் எனினும் போல் செசானிற்கு அதில் நாட்டம் இருக்கவில்லை. எனினும் பிற்காலத்தில் மனித உருவங்களை வரைவதில் ஆத்ம திருப்தியுடன் ஈடுபட்டார்.

போல் செசான் *1872* இல் வரைந்த ஓவியமே பின்னைய மனப்பதிவுவாத ஓவியத்தின் தொடக்கமாகக் கருதப்படுகின்றது. "The house of the hanged man" என்பதே அதுவாகும். மேலும் அவரது ஓவியங்களில் "Mount sait Victoria" "Still life with onions" "The bathes" "Women with the Coffeepot" "Still life with apple" "The nigro scipo" "The boy in the vest" "Still life" என இன்னும் பல பிரசித்தமானவை. போல் செசானின் இவ்வகை ஓவியங்கள் புத்தம்புதிய கலைப்பதிவுகளென இன்னும் சிலாகிக்கப்படுகின்றன.

பெண்களை வெறுத்த போல் செசானின் வாழ்வில் அபூர்வமாக கொர்டென்சா பிக்நெற் (Hortense Fignet) என்ற பெண் வந்து சேர்ந்தாள். இருவரும் *1869* இல் திருமணம் முடித்தனர். நாற்பது ஆண்டுகள் நீடித்த இல்லற வாழ்வில் அவர்கள் ஒன்றாக வாழ்ந்தது சொற்ப நாட்களே எனினும், ஒரு குழந்தைக்குத் தகப்பனாக நேர்ந்ததில் போல் செசான் அகமகிழ்ந்தார்.

பிரைன்சிய இலக்கியத்தில் நாவலாசிரியர், நாடகசிரியர் என அறியப்பட்டவர் எமிலி ஜோலா (Emile Zola). இவரும் போல் செசானும் இணைபிரியாத நீண்ட கால நண்பர்கள். இவர்கள் இருவரும் *1852* இல் சந்தித்துக் கொண்டனர். பள்ளி நாட்களில் தொடங்கிய நட்பு இறுதிவரை நீடித்தது. போல் செசான் ஓவியத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்ததில் எமிலி ஜோலாவும் தூண்டுதலாக இருந்தார். போல் செசான்



இலக்கியத்திலும் ஆர்வம் காட்டியவர். கிரீக், லத்தீன், பிரெஞ்ச் மொழி இலக்கியங்களில் மிகுந்த புலமைத்துவ ஈடுபாடு அவருக்கு இருந்தது. மனதைத் தொடும் கவிதைகளை இரசிக்க அவரால் முடிந்தது. கவிதை விடயத்தில் போல் செசான் தன்னையே வியக்க வைத்ததாக எமிலி ஜோலா ஒருமுறை கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போல் செசான் தனது ஓவியங்களை உயிர்ப்புடன் படைத்தவர். தனது படைப்புக்களின் உள்ளார்ந்த விபரணைகளைப் பார்வையாளரின் கற்பனைக்கும், சுதந்திரத்துக்கும் விட்டுவைத்தார்.

இத்தகு மேதமைமிக்கவர் மனச்சிக்கல்களிடையே வாழ்ந்து, தனது எழுபதாவது வயதில் *(22.10.1906)* இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அவர் தன்னளவில் மட்டும் ஓவியராக வாழாது பின்னைய மனப்பதிவுவாத ஓவியப் பாணிக்கு நவீன ஓவிய உலகைவிட்டுச் சென்றவர் என்பது அவரது சிறப்பு.

"Paul Cezanne is any one and only master.
He was like the Father of us all"

- Pablo Picasso-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்து பிரிதல்

ஏ.எஸ்.சற்குணராஜா




"புரூரவா நான் மீண்டும் தேவலோகம் சென்றுவிட முடிவெடுத்துள்ளேன்."

புரூரவனால் அவள் முடிவைத் தாங்க முடியவில்லை. தேங்கிய நீர் கொண்ட கண்களுடன் தேம்பிக் கொண்டிருக்கிறான். அவனைச் சுட்டெரிக்கும் வார்த்தைகளை அவளது உதடுகள் உமிழ்ந்து கொண்டன.

அவனில் காதல் அலைகள் ஓய்ந்தன. விரக்தி அலைகள் எழுந்தன.

"என்னை நொந்து நூலாகும்படி நன்றாகத் துவைத்து எடுத்து விட்டாள்."

"எனக்காய் ஏணியானவள், என்னை ஞானியாக்கியவள், எவ் அலை வரினும் எதிர்நீச்சல் போடும் தோணியாக்கியவள். சுடாத காலைச்சூரியனாக இருந்தவள், இன்றோ சுட்டெரிக்கும் மதியச் சூரியனாக.."

இல்லற முடிச்சு அவிழ்ந்து விட்டது, இன்ப ஓடம் கவிழ்ந்து விட்டது.

புரூரவனின் நினைவுகள் இப்போது பின்னோக்கிச் செல்ல...

***

இந்திரசபை நடனம். தேவேந்திரனும் பிரசன்னம். தங்கக் கிரீடத்துடன் நவரத்தினங்கள் ஒளிரும் அரியாசனத்தில் சரியாய் அமர்ந்திருக்க, ஏனைய தேவர்கள், ரிஷிகள் அவரவர் ஆசனங்களில்....

கொள்ளை அழகுடன் வெள்ளை அப்சராக்கள் ஆங்காங்கே அசைந்து நின்று அவையைச் சிறப்பிக்க இன்றோ ஊர்வசியின் நடனம்.

தேவலோக விருந்து. அனைவரும் சோமரசம் அருந்தி மெய்மறந்து கண் திறந்து ஆடலை ரசித்துக் கொண்டிருக்கின்றனர். அப்சரா ஒருத்தி இந்திரன் அருகில் பணிவுடன் நின்று கனிவுடன் குழைந்து ஜாடி சரித்து நெளிந்து வளைந்த வாயினால் சோமரசம் ஊற்றப் பருகியபடி ஆடும் ஊர்வசியையும் வெட்டாத கண்ணால் பருகிக் கொண்டிருக்கிறான்.

சபையின் ஓரத்தில் ஒருபுறம் அமர்ந்திருக்கிறான் புரூரவன். பருவ மாற்றத்தால் உருவம் மாறி வாலிபத்தை வரவேற்கும் நிலையில் அவன்.

நர்த்தனம் புரிகையில் அசைந்த அவள் மைவிழி மடல்கள் அவனின் மனதிற்குள் காதல் மதுவை ஊற்றிக் கொண்டிருந்தது. முதுமை காணாத எழிலாள், வாடா மலராள், வற்றாத அழகூற்றாள்... அவள் கண்களிலும் கூட அபிநயம்...

அவன் மனம் இப்போ கடிவாளமற்று ஓடும் குதிரையாய் நிறைந்த கற்பனைகளுடன்,

அவிழ்த்து விடப்பட்ட தளர்ந்த நெடுங்கூந்தல் முதுகில் தழுவி அலையலையாய் அசைய அவன் உள்ளத்திலும் உயர எழுந்தன காதல் அலைகள்.

வேத மந்திரங்கள் ஒலிக்கின்றன. பூலோகத்தில் புரோகிதர்கள் யாகம் புரிந்து அக்னியில் அவிர்பாகம் இட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவற்றைத் தேவலோகத்தில் அக்னி கொணர்ந்து சேர்க்க அவ்வுணவுகள், பானங்களை, செடியில் பூத்துக் குலுங்கி நிறைந் திருக்கும் பூக்கள் போல் அப்சராக்கள் குனிந்து நிமிர்ந்து குஷியாய் பரிமாறும் காட்சி, அவனுக்கோ கூட்டமாய் தென்னை மரங்கள் இளநீருடன் காற்றிற்கு குனிவதும் நிமிர்வதும் போன்ற ஓர் நினைவு. பரிமாறியவற்றைத் தேவர்கள் ஆனந்தமாக அருந்திக் கொண்டிருக் கிறார்கள். மகிழ்வுடன் மானிடர்கள் வாழ வரங்களையும் வளங்களையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

***

இப்போ நர்த்தனம் ஓய்ந்து ஒரே நிசப்தம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்தியவர்களைச் சோமரசம் அடிமையாக்கியிருந்தது.

முகத்தைத் தலைமுடிக்குள்ளும், தாடி முடிக்குள்ளும் புதைத்த நர்த்தனம் ரசித்த ரிஷிகளும் அடங்காத் தலைமுடியால் முடிந்த குடுமியைக் கோதியும் தாடியைத் தடவியபடியும் கமண்டலம் ஏந்தியபடி காலடி எடுத்து வைத்துக் கலைந்து கொண்டிருந்தனர்.

பேதை ஊற்றிய போதை தலைக்கேறிய இந்திரன் அரியாசனத்தை மஞ்சமாக்கி புரண்டு படுத்துக் கொண்டிருக்கிறான். இருந்தவர்கள் இடம் தெரியாமல் மறைய வெறிச்சோடியது சபை.

***

"அன்று என் உள்ளத்தில் பேரலை எழுந்தது. அது கனிந்தது. என் வானில் வெண்ணிலாவின் உதயம். ஊர்வசியிடம் சென்றது இதயம். எனக்குள் வசீகரம் பிறந்தது. அவள்மேனி என் மடி தவழ்ந்தது. நான்கு வருடங்கள் காற்றுக்கூடப்புகா இடைவெளியுடன் வாழ்ந்தோம். கலந்தோம், நெகிழ்ந்தோம்."

காலம் ஓடியது. இன்று எவர் கண்பட்டதோ? இப்போ அளக்கமுடியா அண்டப்பருமனாகி நிற்கிறது இடைவெளி.

ஊர்வசியே! என்னில் கோபம் கொப்பளிக்கக் கொத்தவரும் தேவலோக மயிலே, நித்தமும் உன் நிழலில்தான் சித்தம் தெளிந்து வாழ்ந்தேன். உன் பந்தம் தந்த பரிசுதான் என் வில்லிற்கு விசை கொடுத்தது. எதிரிகளின் தலை எடுத்தது. பதி என் துதிகள் உன்னைப் பரவசப்படுத்தின. நான்கு ஆண்டுகள் நாழிகைபோல் கழிந்துவிட்டன. நாம் பேசிட நேரமின்றி பகலிரவாய்க் களித்தோமே. இன்றாவது பொறுமையாய் கொஞ்சம் நில். பேசாதவற்றை, பேச நினைப்பவற்றை இப்போதாவது பேசுவோம். உரையாடி மகிழ்வோம். உறவாடி உள்ளம் களிப்போம்.

புரூரவனே! களித்த, கனிந்த காலம் கடந்து விட்டது. இனி எதைப்பேசுவது, எதைச் செய்வது? உன் பேச்சில் மயங்கி இனியும் திசைமாற நான் ஒன்றும் பூலோகப் பேதையல்ல. தேவலோகப் பாவை. உனக்காக எடுத்த மானிட உருவைத் துறந்து விட்டேன். நீ பற்ற முடியாப் பாவையாகி விட்டேன். உன்னை விட்டு நீங்கும் என்முடிவில் எந்த மாற்றமும் இல்லை. அழுது உன் கண்கள் வீங்கிவிட்டன. ஆனாலும் என் மனம் உன்னை விட்டு நீங்கி விட்டது. கவலையை விடு. உன் மனை திரும்பு. கடமையை விரும்பு.

தேவலோக சபையில் உன் அங்க அசைவுகள் என் சொப்பனங்களின் சொத்துக்களாயின. தேவலோக சோலை மலர் உன் வாச நினைவுகளில் தினமும் சொக்கி நின்றேன். உன் கன்னக் குழியில் கவிழ்ந்து வீழ்ந்தேன். இன்னமும் வெளியேற முடியாமல் தத்தளிக்கிறேன். உன் இதயத்தில் நுழைய அனுமதி வழங்கினாய். என்னைப் பற்றி உனக்குள்ளே இருப்பதென்னவோ யான் அறியேன். நீ என்மனை துறந்து முற்றத்தில் நிற்கையில் தங்கமாய் தகிக்கிறது உன்மேனி . தவிக்கிறது என் ஆவி. எனக்கு மண்ணாசை இல்லை. உன்னாசைதான். நீயோ பிரிவிலும் புன்னகை பூத்தபடியே உன்னுலகு செல்லும் உவகையில், எனக்கு இதயமே இற்றுப் போவது போல் கொல்லும் கவலையில்...

புரூரவா! தேவலோகத்தில் தேங்கிய ஜலங்களை ரிஷ்டிசேனன் புதல்வன் தேவாபி உன் பூமியில், சமவெளியில் பாயவிட்டுள்ளான், உன் தேசம் செழிக்கும். என் ஆசி பலிக்கும். உன் கண்கள் விழிக்கும். மாயங்கள் வேண்டாம். மனவமைதி கொள். காலங்கள் நகரும் உன் காயங்கள் ஆறும். விடை கொடு, படை எடு, பகைவர் தொடை நடுங்க, பதவிப் பெயர் விளங்க.

பூலோகம் செழிக்க ஆள். புகழ் நிலைத்திட வாழ். தஸ்யுக்கள் கொட்டம் பாழ். உன் கடமை இதுவே கேள்.

நான் பலத்தை இழக்கின்றேன். என்னால் பசுக்களைக் காக்க முடியாது. பகைவரைத் தாக்க முடியாது. செல்வங்களைச் சேர்க்க முடியாது. வீரத்தின் வெளிப்பாடாய் சரம் தொடுக்கும் வரமும் காலாவதியாகி விட்டது போல் உணர்கின்றேன். பகைவரைப் பற்றிப் பிடிக்கவும், செல்வம் பறிக்கவும் விரல்கள் திராணியற்றதாகி விட்டது போல் உணர்கின்றேன். வீரர்களுக்கு ஆணையிடும் எனது குரலும் சக்தியற்றதாகி விட்டது. என் புத்தியும் கெட்டு விட்டது.

***

பலத்தால் மேகங்களையே ஆட்டுவிப்பவன். இரக்கமற்றவன், இடியைக் கொடுப்பவன், சதா கோபம் கொப்பளிப்பவன். எல்லா உலகத்தினதும் தலைவன், எதிலும் தடைப்படாதவன் தேவேந்திரனின் ஆசீர்வாதத்துடன் எதிரிகளை அழிக்க, தஸ்யுக்களைத் தண்டிக்க, பூலோகத்தைச் சிறப்பாகப் பாலனம் செய்யவே தேவர்கள் உன்னைப் படைத்தனர். தேவ பத்தினிகள் சூழ்ந்திருக்கப் பிறந்தாய். நதிகள் தாலாட்ட வளர்ந்தாய். நீ பூவுலகத்தைப் பாலிக்கப் படைக்கப்பட்டவன். நான் உனக்கு விரும்பிய உணவு ஊட்டினேன், விளங்கிடச் செல்வம் தந்தேன், உன் வீரத்தை மெய்ப்பித்தேன், கடமைகளைக் கற்பித்தேன். நான் யாரின் மகளுமல்ல. மணமகளுமல்ல, தாயுமல்ல, எவர் கைக்கும் அகப்படாதவள். ஆனாலும் நீ விரும்பினாய் நான் இணங்கினேன். என்னுடன் ஆலிங்கனம் புரிந்து பகல் இரவெல்லாம் அதற்கே அடிமையாய் இருந்தாய். நீ தேசத்திற்கு மட்டுமல்ல என் தேகத்திற்கும் அரசனாய் இருந்தாய். என் மேனி நினைவை விட்டதில்லை. என் சொல்லை நீயும் கேட்டதில்லை. காதல் திளைப்பில் உன் கடமையை மறந்தாய். உன்னை விளங்கிக் கொண்டேன், என்னை விலக்கிக் கொண்டேன்.

மானிடனான நான் தேவலோகத்தில் வளர்கையில் ஆடை மறந்த அங்கம் தெரிந்த அப்சராக்களைக் கண்களால் விழுங்கினேன். என் உள்ளம் அறிந்தனர். அதிர்ந்தனர். கொடிய பாம்பைக் கண்டதுபோல் ஓடி ஒளிந்தனர்.

புரூரவா! அமிர்தம் போல அடைவதற்கரிய அழகில் மிதந்த அப்சராக்கள் உன்னில் அன்பைப் பொழிந்தனர். மகிழ்ச்சியில் திளைத்தாய். ஆனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடக்குணம் மறைவிலிருந்து வெளிப்பட அவர்களில் மயங்கினாய். கண்களால் விழுங்கினாய். உன்னை அறிந்தனர். முழுநிலாக்களான அவர்கள் வெட்கத்தில் முகிலால் முகத்தை மூடினர். விலகி ஓடினர். நான் என் கடமையில் துணிந்து நின்றேன். மனித உடலெடுத்து உனக்கு மடிகொடுத்தேன்.

ஆம் நான் அறிவேன். தேவலோகத்தில் ஸூஜூர்ணி, சிரேனி, ஸூமன, ஆபி, ஹிருதேசக்ஷி, கிரந்தினி ஆகியோர் என்னை ஆளாக்கிடத் தயங்கிய போது செந்நிறமேனி, அதை அலங்கரிக்கும் ஆபரணங்கள், மேகமாய் அலையும் நெடுங்கூந்தல், தொலை தூரத்தைக்கூடத் துளாவும் விழிகள் கொண்ட நீ துணிவாய் வந்தாய். துணையாய் நின்றாய். என் ஆயுளை நீட்டினாய். வானத்து மின்னலாய் என் வாழ்வில் பிரகாசித்தாய். இன்றோ இருளில் நான்.

நான்கு வருடம் உன்னுடன் நாளெல்லாம் திருப்திதர இணைந்தேன், இருந்தேன். இதுவே போதுமென்று போற்றிக்கொள். மனதைத் தேற்றிக் கொள், பேராசையைக் கொல்.

பகலும் இரவும் முத்தமிடும் பொன் மாலைப் பொழுதில் நாம் முத்தமிடுகையில் என் உமிழ்நீரில் உன் உதட்டுச் சாயம் கரைந்து வானம் மட்டுமல்ல உன் தேகமும் தீயின் வர்ணம் பூசியது. நீ குருதிக்குளத்தில் மலர்ந்த தாமரையாய் ஜொலித்தாய். மகிழ்ந்து குலாவினேன். வளர்ந்தது உறவு, முளைத்தது சிறகு, மலர்ந்தது என்வாழ்வு.

எதிரிகளுடன் போரிற்காய், தஸ்யுக்களின் அழிவிற்காய், பூலோகத்தின் பாலிப்பிற்காய் படைக்கப் பட்ட உன் படைப்பின் நோக்கம் நிறைவேறவில்லை. என் சகவாசம் நீ கடமைகளுடன் வனவாசம். புரிந்தது எனக்கு. பிரிவுதான் தீர்ப்பு.

***

என் மகவின் ஜனனத்தின் பின்னாவது என் மனைவிட்டு நீ நீங்கியிருக்கலாம். என் மகவானது மண்ணில் உதித்து என் சஞ்சலம் துடைக்கத் துணையாகியிருக்கலாம். பிரிவின் பின் பிறக்கும் மகவு என்னை எப்படித் தந்தை என்று அறிந்து கொள்வான். தன் பாசத்தை தந்து கொள்வான். என் சுமை தாங்கிக் கொள்வான்? உன் பிரிவால் ஒளியிழந்த என் வாழ்வில் ஒளி விளக்கேற்றுவான்? ஏக்கத்துடன் என்மனம்...

உன்னில் பாசம் பற்றிட, உன் மேல் ஆசை தொற்றிட தினமும் உன்கதை மொழிவேன். அவன் மனதில் உன்முகம் வரைவேன். மங்களதினம் ஒன்றில் மகன் வருவான் உனைத்தேடி. உறவினைக் கொண்டாடி.

மகனை நினைத்து ஏங்குவேன். மனதில் சுமையைத் தாங்குவேன். அவன் வரவு இல்லையேல் நானும் உலகை நீங்குவேன். தூரதேசம் ஒதுங்குவேன். உடலழித்து உயிர் போக்குவேன். அல்லது ஓழிந்துவாழ் ஓநாய்களுக்கு உணவாயாவது ஆகுவேன்.

சாயாதே! சாகாதே! ஓநாய்களுக்கு உணவாய் ஆகாதே. மகன் வருவான். மனதிற்கு ஆறுதல் தருவான்.

என் இதயம் அன்றே உன்னிடம். என் நெஞ்சில் இப்போ வெற்றிடம். மகனுடன் திரும்பி வருவாயாக. அதுவரை வானில் தினம் ஒளியாய் தெரிவாயாக. உன் இஷ்டப்படி உத்தமச் செயல்கள் புரிவேன். ஈகையை என்றும் மறவேன். மானிடர் வாழ்வு சிறக்க மறந்து விடாமல் உழைப்பேன். அவர்கள் மகிழ்வில் நான் திளைப்பேன்.

ஐயனே! நீயும் உன் புத்திரனும் தேவர்களைத் தினமும் அவிகளோடு யஜிப்பீர்களாக. என் துதிகளைத் துணிவாய் உரைப்பீர்களாக. யக்ஞம் வளர். அக்னியில் பலியிடு. தேவர்களை மகிழ்ச்சிப்படுத்து. உன் ஆகுதி உண்டவர் ஆசீர்வதிப்பர். முடிவில் சோதியில் கலந்து இன்புறு. தேகம் அகல வந்திடு. தேவர் உலகில் தங்கிடு.

***

வேறு வழியின்றி வழியனுப்புகிறான் புரூரவன். தன் கவலையைக் கரைக்கும் கண்ணீரை விழியால் அனுப்புகிறான். ஊர்வசி வானில் மிதந்து தேவலோகம் சென்று கொண்டிருக்கிறாள். சிறிது சிறிதாகி இறுதியில் ஓர் புள்ளியாகி அவன் பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருக்கிறாள்.

(ஆதாரம் - ரிக்வேதம், 10ஆம் மண்டலம், 932ஆம் சூக்தம்.)



அ.யேசுராசாவின் பத்தி எழுத்துத் தொகுப்பான "பனைமீன் நாடன் பக்கம்" நூல் அறிமுகமும், விமர்சனமும் 30.08.2025 அன்று எங்கட புத்தகங்கள் இல்லத்தில் வடகோவை வரதராஜன் தலைமையில் நடைபெற்றது. நூல் அறிமுகத்தை எழுத்தாளர் தி.ரமேஷ் நிகழ்த்தினார். கருத்துரைகளை பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களும் கலாநிதி தி. செல்வமனோகரன் அவர்களும் நிகழ்த்தினார்கள். ஏற்புரையை அ.யேசுராசாவும் நன்றியுரையை க.பரணீதரனும் நிகழ்த்தினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் வெளி: ஈழப் புதுக்கவிதையில் அகம் (ஈழத்துப் பெண்களது காதல் கவிதைகளில் முதல் தொகுப்பு)

சி.ரஞ்சிதா

பெண் பற்றிய பார்வையும் அவள் குறித்த புரிதலும் தமிழ்ச் சூழலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது மேலைநாட்டு கல்வித் தொடர்பின் வழியே. ஈழத்தில் 1980களில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமும் அதனால் உந்தப்பட்ட ஈழத்துத் தமிழ் மக்களும் பெண்களுக்கென அதுவரை காலமும் எல்லை வகுத்திருந்த பண்பாட்டுப் போர்வையை அகற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகியது. ஆணாதிக்க மனோபாவம் கால வெள்ளத்தால் தளர்வடைய பெண் உரிமை, பெண் சுதந்திரம், பெண் கல்வி குறித்த கருத்து நிலைகள் பெண்ணிய வாதத்துடன் முகிழ ஆரம் பித்தன. இதன் விளைவே இன்று நாம் அடையாளம் காணும் பெண்ணிய எழுத்தாளர்களும் அவர்கள் குறித்த படைப்பாக்கங்களும். 1970களின் பின்னர் ஏற்பட்ட அரசியல் சமூக மாற்றங்களால் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டங்களில் பெண்களும் கலந்து கொள்ளும் நிலை உருவாகிய போது பெண்கள் தொடர்பான எழுச்சி நிலை உருவாகியது. எழுச்சி பெற்ற பெண்கள் ஒன்றிணைந்து ஆணாதிக்கத்திற்கு எதிராகப் போராட முற்பட்டனர். இத்தகைய சூழலில் வெளிவந்த கவிதைகளில் பலவும் பெண்களின் விடுதலை தொடர் பான கருத்துக்களைப் புதிய கோணத்தில் வெளிப் படுத்துவனவாக அமைந்தன.(இரகுநாதன்.ம,2007:08)

ஈழத்தில் 1980 களின் பின் பெண்ணிய எழுத் தாளர்கள் பலர் தம் உணர்வுகளைத் தாமே பெண் மொழியில் பேச விழைந்தனர். அதன் வழி விதைக்கப்பட கவிதைகளே பின்னர் அறுவடையாகி "சொல்லாத சேதிகள்"(1986), "பெயல் மணக்கும் பொழுது"(2007), "கானல்"(1997), "உயிர் வெளி" (1999), "வெளிப்படுத்தல்" (2001), "மை"(2007), "இசை பிழியப்பட்ட வீணை"(2007), "பெயரிடப்படாத நட்சத்திரங்கள்" (2011)என்னும் கவித் தொகைகளாக வெளிவந்துள்ளன. 1992 ஆம் ஆண்டு வெளிவந்த "மறையாத மறுபாதி" கவித் தொகை புலம் பெயர் பெண் கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கிய முதல் கவித் தொகையாகும். இக் கவித் தொகைகள் அனைத்தும் அடிப்படையில் பெண் மொழியை ஊடகமாகக் கொண்டு ஆணாதிக்க மனோ நிலை மீதான எதிர்வினைகளையும், பெண் சுதந்திரத் தைத் தக்க வைப்பதில் உள்ள சிக்கல்களையும் பேசுப் பொருளாகக் கொண்டு வெவ்வேறு பெண் படைப்பாளி களினால் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், இக்கவித் தொகைகளில் இருந்து 1999 ஆம் ஆண்டு வெளிவந்த உயிர் வெளிக் கவித் தொகை ஆணாதிக்கம் என்பதற்கு அப்பால் நின்று ஆண் - பெண் இணைவிற்கு உயிர் ஊட்டும் காதலைப் பெண்ணின் நிலை நின்று அவளின் அகவுணர்வை, அதன் உணர்ச்சி ஆழங்களைப் புதுக் கவிதை வடிவில் கலை ஆக்கம் செய்துள்ளது. சித்திர லேகா மௌனகுருவினால் தொகுக்கப்பட்ட உயிர் வெளிக் கவித் தொகை 1999 இல் சூரியா பெண்கள் வெளியீட்டகத்தால் தமிழ் இலக்கிய வெளிக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

காதல் என்னும் பதம் வெவ்வேறு தளத்தில் வைத்து பொருள் கொள்ளப்பட்டாலும் எம்மவர் மத்தி யில் காதல் என்றவுடன் ஆண் - பெண் இருவருக்குமான அன்பின் வெளிப்பாடாகவும் அவர் தம் அகம் சார்ந்த உணர்வாகவுமே பொருள் கொள்ளப்படுகின்றது. காதல் இரு மனங்களின் உணர்வுக் கலப்பு என்று கூறினாலும் தமிழ் இலக்கியங்கள் காதல் குறித்து பால் பாகுபாடற்ற நிலையில் இருபாலாருக்கும் வெளிப்படையாக அவர் களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் சுதந்திரத்தை வழங்கியதா என்று கேட்டால் இல்லை என்றே சுட்ட வேண்டியுள்ளது. இதற்கு தொல்காப்பியம் தக்கதொரு சான்று.

> "தன்னுறு வேட்கை கிழவன் முதற் கிளத்தல்
> எண்ணுங்காலை கிழத்திக்கில்லை"
>
> (பொருள்:116)

என்னும் நூற்பா வழியாக காதலை வெளிப் படுத்தும் உரிமை தலைவனுக்கு மட்டுமே உரியது என்றும் பெண்ணுக்கு அது பொருத்தமற்றது என்றும் கூறக் காண்கிறோம். இன்னும் ஓர் இடத்திலும் தொல்காப்பியர்

> "சொல்லெதிர் மொழிதல் அருமைத் தாகலின்
> அல்ல கூற்று மொழி அருள்வாயின"
>
> (பொருள்:108)

என்னும் நூற்பாவில் காதலர் பேசும் போது தலைவன் கூற்றிற்குத் தலைவி நேரடியாக பதில் கூறுவது பொருத்தமற்றது என்கிறார் தொல்காப்பியர். பெண் உணர்வு ரீதியாக தன் காதலைச் சொல்வதற்கு பல கட்டுப்பாடுகளை இலக்கியம் விதைத்ததை எமக்குத் தொல்காப்பியத்தின் வழியாக அறியமுடிகின்றது.

சங்க இலக்கியங்களில் பெண்ணின் காதல் உணர்வை ஆண்பாற் புலவர்கள் மிகையாக பாடி யுள்ளதுடன் பெண்பாற் புலவர்கள் பாடிய அகம் சார்ந்த பாடல்கள் மறைக்கப்பட்டிருப்பதாகவும் திரிபுபடுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருப்பதாகவும் பெண்ணிய ஆய்வாளர்கள் எதிர் வினையாற்றியுள்ளனர். சங்கப் பெண்பாற் புலவரான ஔவையார் பாடிய சங்க கவிதைகளில் அவர் புறத்திணை சார்ந்து பாடிய மன்னர் தம் போர், கொடை பற்றிய கவிதையின் பாடு பொருளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் அகம் சார்ந்து பாடிய காதல் கவிதை களுக்கு வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் பெண்ணிய சிந்தனைவாதிகளிடம் கிளர்ந்துள்ளது. அகநானூறு, குறுந்தொகை ஆகிய சங்க இலக்கியங் களில் வழியாக உணர்ச்சி ஆழம் கொண்ட, விரக தாபத்தை வெளிப்படுத்தும் அக்கவிதைகள் திட்டமிட்ட முறையில் ஆணாதிக்கச் சக்திகளால் மறைக்கப் பட்டுள்ளது என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

காதலின் மையமாகப் பெண்களைக் கொண்டு அவர்களது வடிவழகை வர்ணித்தும், அவர்களது காதலுக்காக ஏங்கியும் அவர்கள் அளிக்கும் இன்பத்தைப் புகழ்ந்தும் பாடுவதாகப் பெரும்பாலான காதல் கவிதைகள் உள்ளன. இவ்வகையில் ஆண்கள், பெண்கள் மீதான தமது காதலுணர்வுகளைப் புலப் படுத்துவதாக இவை அமைகின்றன. இன்னோர் வகைக் கவிதைகள், பெண்கள் ஆண்களின் மீதான தமது காதலைப் புலப்படுத்துவனவாக, காதல் ஏக்கத்தையும் பிரிவுத் துயரையும் எடுத்துக் கூறுவனவாக உள்ளன. ஆண்கள், பெண்களாகத் தம்மைப் பாவித்து ஆக்கி யவை இவை. குறிப்பாகத் தமிழ் இலக்கிய மரபில் இத்தகைய இரு போக்குகளையே பெரும்பாலும் காண லாம். இத்தகைய காதல் கவிதைகளில் குறிப்பிடக்கூடிய ஒரு அம்சம் என்னவென்றால் இவை பெரும்பாலும் ஆண்களாலேயே படைப்பாக்கப்பட்டவை. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான காதலை ஆண்கள் பாடியது மாத்திரமன்றி பெண்களின் உணர்வுகளுக்கும் அவர்களே வடிவம் கொடுத்தனர். ஆண்களே பெண் களின் உணர்வுகளையும் சித்திரித்தனர். இவ்வகையில் காதல் பற்றிய ஒரு பக்கப் பார்வையே எமக்குக் கிடைத் துள்ளது. இதற்கு ஒரு காரணம் பெண்கள் தமது உணர்ச்சிகளை வெளிப்படையாகப் புலப்படுத்துவது பெண்மையின் பாற்பட்டதல்ல; அது தகுதியற்றது என்ற கருத்துப் பலமாக நிலவி வந்தமையாகும். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு கொண்ட பேசா மடந்தையாகப் பெண்ணைக் கட்டமைத்த தமிழரது ஒழுக்கவியலும், பண்பாட்டு மரபுகளும் பெண்கள் தமது இயல்பான உணர்வுகளைத் தமது குரலிலேயே வெளிப்படுத்து வதற்குக் கட்டுப்பாடு விதித்தன. இத்தகைய ஓர் ஒழுக்க, கலாசார மரபின் காரணமாகப் பெண்களது காதல் உணர்வுகள் இலக்கிய வடிவம் பெறுவது மிகவும் மட்டுப்படுத்தப்பட்டே வந்திருக்கிறது. (சித்திரலேகா மௌனகுரு,*1999:02*)

தமிழ் இலக்கிய பரப்பில் பக்தி நெறி காலத்தில் ஆண்டாளால் பாடப்பட்ட கவிதைகள் பெண் மொழியி னூடாக ஒரு பெண் தன் காதல் உணர்வை வெளிப் படுத்தும் பாடல்கள் என்ற கருத்து நிலவியபோதும் ஆண்டாள் என்பது வெறும் கற்பனையே என்ற விமர்சனக் கருத்து ஒன்றும் மேற்கிளம்பியுள்ளது. வைணவரும் பார்ப்பனர்களின் தலைவருமான ராஜாஜி என்பவர் "திருவேணி" என்னும் ஆங்கிலப் பத்திரிகை யில் *1946* ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் எழுதிய "ஆண்டாள் என்பவர் யார்" என்னும் தலைப்பிலான கட்டுரை இதனைப் பதிவு செய்துள்ளது. ஆண்டாள் உண்மையான பெண் அல்ல; அவள், பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளும் அல்ல. அது பெரியாழ்வாரின் கவித்துவ சிந்தனையில் உருவாக்கப்பட்ட கற்பனைப் பாத்திரம். தனது கற்பனையில் உருவான கவிதைகளை ஆண்டாளே பேசுகிறாள் என்று கற்பனையில் எழுதியிருக்கிறார். வழக்கமான பக்தி இலக்கியங்களில் இருந்து மாறுபட்ட ஒன்றை எழுத வேண்டும் என்று கருதிய பெரியாழ்வார் காதல் ஏக்கம் நிறைந்த ஒரு பெண்ணின் உணர்வுகளோடு பக்தியின் அனுபவங்களை இணைத்து எழுத முற்பட்டனர். காதலுக்காக ஏங்கும் ஒரு துறவியால் எப்படி எழுத முடியும் என்ற கேள்வி எழக் கூடும் என்பதால் அவர் தந்திரமாக ஒரு ஏற்பாட்டைச் செய்தார். ஒரு பெண்ணின் காதல் உணர்வைத் தாம் எழுதவில்லை என்பதைக் காட்டுவதற்காக ஆண்டாளை தனது மகளாகவே வரித்துக் கொண்டார். தனது மகள் தனது காதலையும் இதயத்தையும் ஆண்டவனுக்கா கவே அர்ப்பணித்து கடைசியில் ஆண்டவனால் அவள் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதாக எழுதினார். (இராஜாஜி,*2008*) இக்கூற்று எவ்வாறான சான்றாதாரங் களைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டது என்று கூற முடியவில்லை. ராஜாஜி முன்வைத்துள்ள ஆண்டாள் பாடல்களின் மீதான விமர்சனம் ஆய்வின் வழியானதா? அல்லது தனிப்பட்ட கருத்து நிலை சார்ந்ததா என்பது ஐயமே. எனினும் இக்கூற்று பெண்ணிலைவாத நிலை யில் நின்று நோக்கின் ஆண்டாள் பாடிய பெண்ணின் அகவுணர்வுப் பாடலைத் துணிந்து பெண் பாடியது என்று ஏற்றுக்கொள்ள முடியாத ஆணாதிக்கத்தின் விமர்சனச் சாயம் பூசப்பட்ட ஒரு கருத்தாகவே எண்ண வைக் கின்றது. ஆண்டாள் பாடல்கள் குறித்து பெண்ணிய நோக்கில் பல ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்திருப்பதை யும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இத்தகைய விமர்சனங்களைக் களைந்து ஆழமான ஆய்வுகளின் வழியாக ஆண்டாளின் பால்நிலை குறித்த ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

சமூகத்தில் பெண்கள் காலந்தோறும் ஏதோ வொரு வகையில் புறந்தள்ளப்பட்டு அடக்குமுறைக்கு உட்பட்டிருப்பினும் கால மாறுதல்களுக்கு ஏற்ப அவர்கள் தம்மை அடையாளப்படுத்தவும் தம் உள்ளத்து உணர்வுகளை அம்பலப்படுத்தவும் முயன்றுள்ளனர். அதன் ஒரு வெளிப்பாடாகத் தான் "உயிர் வெளிக் கவித் தொகை" எம் முன் தவழ்கிறது.

இக்கவித்தொகையில் விஜயலட்சுமி, சங்கரி, ஔவை, செல்வி, பெண்ணியா, ரேவதி, ஆதிரை, சுல்பிகா ஊர்வசி, மைத்ரேயி, மசூறா ஏ.மஜீட் ஆகிய பெண் படைப்பாளிகளின் கவிதைகள் கலையாக்கம் பெற்றுள்ளன. இக்கவிதைகளில் ஆணுக்கா அவனது அன்பிற்காக ஏங்கும் பெண்மையின் மென்மையும், தன் தலைவனின் பிரிவைச் சிறிதும் மனம் தாங்காது யுத்த காலத்தில் ஆண் இன்றி தாம் தனித்துவிடப்பட்ட, கைவிடப்பட்ட கையறு மனநிலையையும், ஆண்களின் அழகை வருணிக்கும் தன்மையும், பெண்ணுடலைப் பெண்களே வருணிப்பதும், தம் விரகதாபத்தை அச்ச மின்றி, கூச்சமின்றி துணிந்து பேசும் தன்மை எனப் பெண்கள் வெவ்வேறு வகையில் தம் அக உணர்வுகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கவித் தொகையில் பதிவு செய்துள்ளனர்.

ஒரு பெண் சமூகத்தில் குறிப்பிட்ட வயது வந்தவுடன் திருமண பந்தத்தில் இணைவது மிகவும் கட்டாயமானது. இத்தகைய கட்டுப்பாடுகள் கீழைத் தேய கலாசாரத்தில் தவிர்க்க முடியாத கைவிலங்கு. சிலருக்குத் திருமணம் உரிய பருவத்தில் நடைபெறுவதும் வேறு சிலருக்குக் காலம் கடந்து நடைபெறுவதும் அவரவர் தலைவிதி என்ற நம்பிக்கை எம் மத்தியில் நிலவுகின்றது. திருமணம் குறித்த தாமதம் பெரிதும் பெண்களையே விமர்சனத்திற்கு உட்படுத்துகின்றன. இதனை வெளிப்படுத்தும் பெண்ணியா என்னும் படைப்பாளியின் கவிதை ஒன்று

"எனது தகப்பனின்
நம்பிக்கையற்ற பார்வைகளினூடும்
தாயின் குமுறல்களினூடும்
உறவுகளின்
என் திருமணம் பற்றிய
சகிக்க இயலாத பேச்சுக்களினூடும்
சுதந்திரமாய் நான் வாழ்வதென்பது எவ்வாறு?"

எனப் "புத்துயிர்த்தல்" என்னும் தலைப்பில் இடம் பெறும் கவிதை ஒரு பெண்ணின் மனதை அவள் திருமணம் இன்றி சமூகத்தினால் வஞ்சிக்கப்படுவதையும் அவளது உணர்வுநிலை நின்று கவிதையாக வடித்துள்ளது.

"உதிரும் இலைக்கனவு" என்னும் கவிதையில் பெண்ணியா ஒரு பெண்ணின் உள்ளத்தைக் காதலால் நிரப்பிவிட்டு அவன் அருகில் இல்லாமல் ஏங்கும் துயரைப் பெண் மொழியில் உணர்வுபூர்வமாக வெளிப் படுத்தியுள்ளார். ஓர் ஆணுடன் நெருங்கி பழக முடியாத நிலையில் பண்பாட்டு வேலி இடப்பட்ட சமூகத்தில் ஒரு பெண் தன் மனவுணர்வுகளைச் சொல்வதாக ஔவை என்னும் பெண் படைப்பாளி எழுதிய "உணர்வுகள்" என்னும் கவிதை

"உன்னில் தெறிக்கும்
ஆயிரம் பார்வையில்
அர்த்தமுள்ள – அர்த்தமாயுள்ள பார்வை ஒன்றே
உன்னைத் துளைக்கும்
இப்படி இப்படி எத்தனையோ
ஆனாலும் –
சமூகத்தில் நடக்கும் அசிங்கங்களைப் போல்
எங்கள் உறவுகள்
ஆகிவிட வேண்டாம்
கண்கள் நோக்கும்
கால்கள் அசையும்
ஆனாலும் நான்
வருதல் கூடாது"

உணர்வை அடக்க முடியாமலும் அதனைக் கட்டுக்குள் வைக்க வேண்டிய பண்பாட்டின் பேணுகையும் வெளிப்படுவதைக் காண முடிகிறது.

மசூறா ஏ.மஜிட் படைத்த கவிதை ஒன்றில் மதம் என்னும் பேதத்தைக் காட்டி உண்மைக் காதலர்களைப் பிரித்து பெண்ணுக்கு வேறு திருமணம் செய்து வைத்த பின்னரும் தான் உண்மை அன்புடன் நேசித்து இன்று வரை அவனை மறக்க முடியாத ஒரு பெண்ணின் உணர்வுத் துயரம் கடக்க முடியாத வாழ்வின் வேதனை என்பதை வெளிப்படுத்துகின்றது. இதனை "கண்கள் சொன்ன கதை" என்னும் கவிதையில்

"நான்
இறக்கை பிடுங்கப்பட்ட
குயிற்பேடு
பறக்க முடியாமற்தான்
இந்தக் கல்யாணக் கூண்டின்
கைதியானேன் –
மனத்தோடு வளர்ந்த
நம் நேசத்தை
மதத்தோடு பறித்தார்கள்
................................"

எனத் தங்களது காதலைப் பிரித்தது மதத்தை இறுக்கமாகப் பேணும் காதலின் ஆழம் பற்றி புரியாதவர்களே என்பதை இவ்வாறு கூறியுள்ளார்.

ஈழத்தில் யுத்த காலத்தின் போது இயக்கங்களுக்கு ஆண்களும் பெண்களும் இணைந்து கொண்டனர். இதன் போதும் கூட இவர் தம் உணர்வுகள் அமுக்கப்பட்டு அக்காலச் சமூக சூழ்நிலைக்கேட்ப கேள்விக்குறியாக்கப்பட்டன. குடும்ப வாழ்க்கையில் இணைந்து இடையிலே பெண்களை விட்டுச் சென்ற ஆண் உயிரோடு இருக்கிறானா இல்லையா என்ற வலி ஒரு புறம், தனிமையில் ஆண் துணை இன்றி பெண்கள் அனுபவித்த சொல்ல முடியாத வலிகள் இன்னும் ஒரு புறம். பெண்ணின் வலியைப் பெண்ணாலேயே உணர முடியும் என்பதை உணர்த்தும் வகையில் மைத்ரேயி எழுதிய "காத்திருத்தல்" என்னும் கவிதை திருமணமாகி திடீரென காணாமல் போன (இயக்கத்திற்குச் சென்ற) கணவனின் நினைவுகளோடும் காதல் உணர்வுகளோடும் போராடும் அல்லல் நிறைந்த வேதனைப் பெண் மொழியினூடாகப் பேசுகின்றது.

"என் மன ஆழத்திற்கு
இது தெரிந்து தானிருந்தது
இருந்தும்
திருமணம் சிலவேளை
உனை மாற்றலாமென...
பல வந்தமாக
ஆம் பலவந்தமாகத்தான்
உன்னை மணந்தேன்
...................
இப்போது துக்கப்படுகிறேன்
அன்று உன்னைத்
தடை செய்ய நினைத்ததற்கு"

எனத் தன் திருமணத்தால் உள்ளம் வெறுத்துப் போன பெண்ணின் உணர்வு வெளிப்படுகின்றது. எவ்வளவு கூறியும் தன் கணவனாக தான் விரும்பியவனைக் கரம் பற்றி திருமணப் பந்தத்தில் இணைந்து மகிழ்ச்சியாக வாழ முடியாமல் எப்போதாவது வந்து விடுவான் என எண்ணி எண்ணி நொந்து போன வேதனையின் பிரதிபலிப்பாக இக்கவிதை அமைகின்றது.

உயிர் வெளிக் கவித் தொகையில் படைக்கப் பட்ட பெரும்பாலான கவிதைகள் பிரிவுத் துயரால் கருக்கொண்டவை. அந்தப் பிரிவு உள்நாட்டு யுத்தத்தின் விளைவால் ஏற்பட்டவை.

வன்முறைகள் உக்கிரம் பெற்ற எண்பதுகளில் பெண்களில் பலர் கவிதை எழுதத் தொடங்கினர். இவர்களின் கவிதைகளில் வன்முறையின் ஆறாத காயங்கள் தீவிரமாக வெளிப்பட்டன. கைதுகள், காணாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதல், வன்புணர்ச்சி, சித்திரவதை, விதவையாக்கப் படல் என நீளும் துயர்களின் வலிகளும் பெண்கள், ஆண்கள் எதிர்கொள்ளும் சமூகப் பிரச்சினைகளும் ஒழுங்கு முறைகளும் கவிதைகளின் பொருள்களாயின. நிச்சயமின்மைகளுமே பெரும்பான்மையானக் கவிதை களிலும் உள்ளோடிக் காணப்பட்டன என்னும் கருத்து இங்கு மனங்கொள்ளத்தக்கது. (நிலான் ஆகிடுதியக், 2009) சங்கரி எழுதிய "இரவுத் துயர்" என்னும் கவிதை யிலும் மேற்கூறிய யுத்த அவலங்களும் அதன் விளைவு களும் துயர் தோய்ந்த உணர்வுகளாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

"அமைதி எங்கும் கழித்து
நட்சத்திரங்களின்
மினுங்கல் ஒளி
தனியே தவழும் இன்றைய இரவில்
நான் துயருற்றேன் அன்ப,
சற்று முன்னர் தான் அச் செய்தி அறிந்தேன்
திடீரென அதிர்ந்தேன்
சிறிது சிறிதாய்ச்
சோகம் நிறைந்து
கனக்கும்
காலின் உள்ளே
புரிந்தே முள்ளாய்
துயரம்,
இடைக்கிடை இதயம் வலிக்கும்,
எந்தத் தொடர்பும் இல்லாது
எந்தச் சிறு சொல்லும் சொல்லாது
போகின்றேன் என்று எதுவும் புகலாது
போனாய்
ஏன்?
எதுவுமே நிச்சயமில்லா
நாட்கள் எம்முடைய வை
கணத்தின் பாதித்துளியினுள் கூட
கை நழுவிப் போய் விடும்
வாழ்வு
இந்த நிமிடம்
எனது தலைக்கு மேலும்
குண்டொன்று விழலாம்
......................................"

என நீளும் இக்கவிதை யுத்தத்தின் கோர விளைவு களால் காதல் வாழ்வில் இணைந்து வாழ முடியாத பெண்ணின் துயர் வெளிப்படையாக சமூக வெளிக்குள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

சுல்பிகா எழுதிய "கலங்காதே கண்ணே காத்திரு" என்னும் கவிதை போரினால் இணைய முடியாமல் தகித்துத் தவிக்கும் தன் உணர்வுகளை கவிதை மொழியில் கலையாக்கம் செய்துள்ளது. இதனை

"போர்க்காலம் கொடியது
என்னையும்
உன்னையும்
நம் காதலையும்
சுட்டெரித்து விடும்
போரின் முடிவில்
நான் உன்னிடம் வருவேன்"

எனப் பதிவு செய்யும் சுல்பிகா போரே தம் காதல் பிரிவுக்கு யமன் என்பதைத் துணிச்சலோடு சொல்கிறார்.

தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலும் பெண் உடலை ஆண்களே வருணித்துப் பாடும் பாங்கு ஒரு மரபாக பேணப்பட்டு வந்துள்ளது. இந்த மரபை உடைத்துப் பெண்களுக்கும் ஆண் உடலைப்பாடவும் இரசிக்கவும் தன் உடலைப் போற்றவும் உரிமை உண்டு என்பதை உயிர் வெளிக் கவித் தொகையில் வரும் ஒரு சில கவிதைகள் அம்பலப்படுத்துகின்றன. இதனை "கண்கள்", "உயிர் வெளி" ஆகிய கவிதைகளில் சங்கரி கலையாக்கம் செய்துள்ளார்.

"உனது கண்கள்
என்னுடன் பேசுவது அதிகம்
உனது தொடுதல்
பேசுவதை விட
கண்களை விபரிக்க முயன்று
எப்போதும் தோற்றுப் போகிறேன்
நட்சத்திரங்கள் எனவோ
கயல் எனவோ
கடல் எனவோ
என்னால் கூற முடியாது..."

எனக் "கண்கள்" என்னும் தலைப்பில் இடம் பெறும் கவிதை ஓர் ஆணின் கண்களை வருணிக்கும் பெண் மொழியின் வெளிப்பாடாகும்.

உயிர் வெளி என்னும் தலைப்பில் இடம் பெறும் கவிதையில் ஆணின் பிரிவாலும் விரகதாபத்தாலும் ஏற்பட்ட துயரைச் சங்கரி துயர் தோய்ந்த நடையில் கவிதையாக்கியுள்ளார்.

"தென்றல் தடவும்
எனது தலைமயிரில்
காதின் மடலில்
காலின் பெருவிரலில்
மார்பகத்தின் மேட்டில்
இன்பம் கொப்பளிக்கும்
எனதுயிரும்
எனதுடலும்
இவ் இரவின் தேன் பருகும்"

என வரும் கவிதை தன் காதலனோடு ஒன்றாக கலந்து இன்பம் பெற விளையும் ஒரு பெண்ணின் ஏக்கத்தைச் சொல்கின்றது. பெண்களுக்குத் தம் காதலை வெளிப் படுத்தவோ, உணர்வுகளைப் பகிரங்கப்படுத்தவோ தடை விதித்த தமிழ் இலக்கிய மரபைத் தகர்த்து பெண் தன்னை முழுமையாக வெளிப்படுத்தும் பெண் மொழியை இக்கவிதை வெளிப்படுத்துகின்றது.

உயிர் வெளிக் கவித் தொகையில் வெளிவந் துள்ள "மீண்டும் வளரும்", "காலங்கள் தோறும் நாம்...", "இடைவெளி", "எப்போது வருகிறார்", "கண்கள் சொன்ன கதை" போன்ற தலைப்புகளில் இடம் பெறும் கவிதைகள் அனைத்தும் அடிப்படையில் பெண்ணின் அக உணர்வுகளைச் சமூக வெளிக்குள் எவ்வித ஒழிவு மறைவுமின்றி கொண்டு வந்துள்ளது. இக்கவித் தொகை படைப்புகள் அனைத்தும் ஈழத்தின் போர்க்கால சூழலில் பெண்கள் ஆண் துணையின்றி எதிர்கொண்ட சவால் களைப் பெரும் வேதனையுடன் ஆவணப்படுத்தி யுள்ளது. எந்தவொரு கலைப்படைப்பையும் அதன் சமூக வரலாற்றுப் பின்னணியில் வைத்து ஆய்வுக்கு உட்படுத்துவது அவசியமானது. அப்பொழுதான் குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பையும் அதனைப் படைத்த படைப்பாளியினது உள்ளத்தையும் புரிந்து கொள்ள முடியும். படைப்புகளைப் பொருத்தவரை அவற்றை வாசகன் புரிந்து கொள்வது வெவ்வேறு புரிதலுடனேயே. ஒருவர் வாசித்த படைப்பின் அனுபத்தை இன்னும் ஒருவர் அதே அனுபவத்துடன் புரிந்து கொள்ளுதல் என்பது கடினம். ஆகவே, உயிர் வெளிக் கவித் தொகையில் இடம் பெறும் கவிதைகளை அவரவர் தனித் தனியாக வாசிக்கும் போதே அது பற்றிய புரிதலும் விமர்சனங்களும் புதிய ஆய்வுகளுக்கு வழி சமைக்கும். உயிர் வெளிக் கவித் தொகையில் இடம்பெறும் ஓரிரு கவிதைகளையே இங்குச் சான்று காட்டியுள்ளோம். “ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்” என்பது போல இக்கவித் தொகை ஆவணப்படுத்தியுள்ள அகம் சார்ந்த கவிதைகளில் பெரும்பாலானவைப் போர்க்காலச் சமூகத்தில் பெண்கள் எதிர்கொண்ட உணர்வு ரீதியான தேக்கத்தையே கலையாக்கம் செய்துள்ளன.


**உசாத்துணைப் பட்டியல்**

1. சித்திரலேகா மௌனகுரு (1999) உயிர் வெளி: மட்டக்களப்பு, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.
2. இரகுநாதன்,ம (2007) ஈழத்துத் தமிழ்க் கவிதைகளிலயம் சாதியம் பெண்ணியம் தேசியம், யாழ்ப்பாணம்: எஸ்.எஸ்.ஆர்.பிரிண்டர்ஸ்.
3. அடிகளாசிரியர் (2008), தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.
4. இராஜாஜி, 2008, இராஜியே கூறுகின்றார் ஆண்டாள் ஒரு கற்பனை, கீற்று இணையத்தளம்.
5. நிலான் ஆகிடுதியன்,2009, ஈழத்துப் பெண்களின் கவிதைப் புலத்தில் அனாரின் கவிதைகள், கீற்று இணையத்தளம்.


## குறள் வெண்பாக்கள்

1.
எளிமையாய் வாழ்வதே என்றும் சிறப்பு
தெளிவல்ல ஆடம் பரம்

2.
நல்லவன் வல்லவன் என்பதெலாம் மற்றோர்க்குத்
தொல்லை தராத வரை.

3.
பிறர்க்கு மருந்தாக நீயிரு அன்றேல்
பிறவுயிர்க்குத் தொல்லை தவிர்.

4.
கோபம் குடிகொல்லும் ஆதலில் நின்றுணர்ந்து
மௌனமே சீரெனக் காண்.

5.
தோல்வி பிழையல்ல தூண்டும் படியென
தோல்வியைத் தாங்கு துணிந்து.

6.
கண்ணில் தெரிந்திடும் காட்சிகள் பொய்யேதான்
உண்மைக் கழிவில்லை காண்.

7.
உற்றாரும் மற்றோரும் ஏற்கும் படிவாழ்வில்
பெற்றோரைப் பேணி நட.

8.
கடந்ததை எண்ணி வருந்தல் சிறப்பா?
நடப்பதை சீர்மைப் படுத்து.



## மனைவி மந்திரம்

நெஞ்சத்தில் பூத்திருந்த
நேசத்தின் பிடியில்
மஞ்சத்தில் என்னவளை
மனைவியாய் இணைத்தேன்
கொஞ்சிக் குலாவிக்
கூடியே மகிழ்ந்து
அஞ்சாமல் இன்பமதை
அள்ளியே நுகர்ந்தேன்

தஞ்சமாய் என்மடியில்
துவண்டவள் அழகில்
மிஞ்சிடும் சஞ்சலங்கள்
மீதமாய்க் களைந்தேன்
அஞ்சுகம் அவளின்
அணைப்பினில் இன்பம்
நெஞ்சினில் நிறைத்தே
நினைவினை இழந்தேன்.

கலாநிதி செய்னுலாப்தீன் நஸீரா
ஏறாவூர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயா தாரமா

- தர்ஹா நகர் றம்ஸியா ஹம்ஸா -



கடற்கரையில் எல்லோரும் ஆரவாரித்துக் கொண்டிருக்க கரீம் மட்டும் தன்னந் தனியாக அவனது நண்பனின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான். கடலின் அலைகள் எப்படிக் கடலில் எழுந்து கடலுக் குள்ளே அமிழ்ந்து போகிறதோ அப்படித் தான் கரீமின் கவலைகளும். கரீமும் அவனது கவலைகளை இவ்வளவு நாளும் அவனுக்குள்ளே அடக்கிக் கொண்டிருந்தான்.

கரீம் அவனது பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அவனுக்கு அன்பும் பாசமும் தாராளமாகக் கிடைத்தன. அவன் எள்ளென்றால் எண்ணெயாக உருகி நின்றார்கள் அவனைப் பெற்றவர்கள். அவனுக்குக் கவலை என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் கடந்த சில மாதங்களாக அவன் கவலையின் உச்சத்திற்கே சென்று விட்டான். தன் அந்தரங்கங்களை பகிர்ந்து கொள்ள, உயிர்த் தோழன் என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்கு அவனுக்குப் பெரிதாக நண்பர்கள் இல்லை. யாரையுமே நம்ப முடியாத இந்தக் காலத்தில், தன் குடும்பப் பிரச்சினைகளையும் கவலைகளையும் யாருடன் எப்படி பகிர்ந்து கொள்வதென்றே தெரியாமல் குழம்பிப்போய் யோசித்துக் கொண்டிருந்தான்.

அப்போது தன் பால்யகால நண்பன் றபீக்கை நினைத்துக் கொண்டான். அன்று தொட்டு இன்றுவரை இணைபிரியாத் தோழனாக, தன் இன்ப துன்பங்களில், கஷ்ட நஷ்டங்களில் பங்கு கொள்ளும் றபீக்கிடம் சொல்லி ஆறுதலடைய முடிவெடுத்தான். உடனே அவனுக்குக் கோல் பண்ணி, தான் அவசரமாகப் பேச வேண்டும் என்றும் தன்னை சந்திக்குப்படியும் இன்ன இடத்திற்கு வரும்படியும் கூறினான். கரீமுக்கு இருப்புக் கொள்ள முடியாமல் நேரத்துடனேயே அவ்விடத் திற்கு வந்து சேர்ந்தான்.

நண்பன் வரும்வரை தன் மனச்சுமைகளை யெல்லாம் ஒருபக்கம் வைத்துவிட்டு, எல்லையற்று பரந்து விரிந்த பூமிமாதாவைத் தாங்கிக் கொண்டி ருக்கும் வானத்தின் அழகை படைத்தவனின் அற்புதத்தை வியந்து ரசித்துக் கொண்டிருந்தான். அப்போது கைப் பேசி ரீங்......ரீங்.... என ரீங்காரமிட, கரீம் கைபேசியை ஒன் பண்ண அங்கே றபீக்கின் குரல்.

அஸ்ஸலாமு அலைக்கும் கரீம்."

"வாஅலைக்கும் ஸலாம் றபீக். நீ வந்திட்டியா?.."

"ஓஃ...நா கோல்பேஸில் வன்கோல்பேஸிற்கு ஒபஸிட்டில் இருக்கன்."

"ஓகே...ஓகே...நா சங்ரீலா ஒபஸிட்லதான் இருக்கிறன்... ஸேம் பொட் ஓகே...இங்க வா..." என்றழைத்தான் கரீம்.

"ஓகே... மச்சான்.... நா கிட்டவே வந்திட்டன்," எனக் கூறிக் கொண்டே காரை கோல்பேஸ் பார்க்கிங்கில் பார்க் பண்ணிவிட்டு கரீம் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான் றபீக்.

இருவரும் சந்தித்து, முஸாபஹா செய்து, குசலம் விசாரித்துக் கொண்டே கொபி சொப்புக்குச் சென் றார்கள். இருவரும் பலதும் பத்தும் கதைத்துக் கொண்டார்கள்.

"செல்லு மச்சான்.. இப்ப நாங்க ஸப்ஷட்டுக்கு வருவோம்" என்றான் றபீக்.

"ஓகே...நான் எப்படி சொல்வேன். எங்கிருந்து ஆரம்பிக்கிறேன் என்றே எனக்குத் தெரியலடா"

"பிரச்சனையச் சொல்லன் முதல்ல"

"ஒனக்குத் தெரியும் தானே.....நா உம்மாடையும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பாடையும் விருப்பத்திற்குத்தான் ஹஸ்னாவை மெரி பண்ணினென்டத."

"ம்ம்ம்....ஓ....அது எனக்குத் தெரியும்..."

"இப்ப அவங்களேதான் ஹஸ்னாவோட அடிக் கடி பிரச்சினைப் பட்டுக் கொள்வதும், நா அவட பக்க மென்று எனக்கு ஏசுவதும்...இப்படியேதான் என்ட காலம் போகுது."

"அது....உம்மாமார் அப்படித்தான்... ஒரே வீட்டில் எல்லோரும் ஒன்றாக இருக்கும் போது மாமி மருமக பிரச்சன என்பது சர்வ சாதாரணம் தானே".

"ம்... ம்...அது உண்மதான் என்டாலும்..."

"அதோட நீயோ அவர்களுக்கு கண்ணே மணியே என்று ஒரே பிள்ள. முழு உலகமும் நீதான் என்று இருந்த அவர்களுக்கு, உனதன்பு புதிதாக இன்னொருத் தருக்குப் பங்கு போகும் போது அவர்களால் ஸ்பெசலா தாய்மார்களுக்கு ஏற்றுக்கேலாமல் போவது நேச்சர்.."

"ம்....ம்.....ஓஃ.....ஒப்கோர்ஸ்...."

"அத நீயும் உணர்ந்து ஆரம்பத்திலேயே ஒம் மனைவியிடம் அவர்களப் பத்தி சொல்லி வைத்திருக் கனும்."

"ம்...ம்...நா...இப்படி யோசிக்கலயே...நீ ஸைகோலோஜி படிச்சிரிக்கிறதனால இப்படியெல்லாம் திங் பண்றாய்....அதுவும் ஸ்பெசலா உம்மா...இப்படி அன்டஸ்டேனிங் இல்லாம... நடப்பாவென்று நா எதிர்பாக்கல்ல..."

"இதுக்கெல்லாம் ஸைகோலோஜி படிக்கத் தேவல்ல...இதெல்லாம் கொமன்ஸென்ஸ்ல வரனும்."

"நா ஒபீஸ் ஒபாகி வந்தா உம்மாதான் ஏதாவது சொல்வா. ஆனால் ஹஸ்னா எதுவுமே சொல்ல மாட்டா. கேட்டாலும் அத விடுங்க. அவ போகப் போக என்ன புரிஞ்சி கொள்வா என்பா."

"இது உம்மாக்களின் அதீத பாசத்தால் வார பாசத்தொல்லை என்பதா சுயநலம் என்பதா என்று சில நேரங்கள்ள ஒன்றுமே விளங்குதில்லதான்."

"பாசத்தொல்லை என்பது எனக்கும் விளங்கு துடா. எனக்கு ரெண்டு பேரும் வேணும். இத நான் இப்பதான் உணர்ரன்."

"அதச்சுட்டித்தான் சாப்பாடோ, டீயோ உம்மா விடமே கேட்கொணும். உம்மா சேர்ட்டக் கழுவிப் போடுங்க, உம்மா...அயர்ன் பண்ணித்தாங்க என்று அவவிடம் உரிமையுடன் கேட்கும் போது, என் மகன் இன்னும் மாறவில்லை. என்னோட பழைய மாதிரியே பாசமாகவே இருக்கான் என சந்தோசமடைவா. அவக்கே அவட மருமக மேல அனுதாபம் வந்து அன்பு அதிகரிக்கும். அப்போதான் அவர்களும் "நீங்க இப்போ கலியாணம் முடித்தவர். ஒங்க வைபுக்கிட்ட சொல்லித் தான் செய்யணும்" என்று அவட வாயாலேயே அவ ஒனக்கு எட்வைஸ் பண்ணத் தொடங்குவா. மருமக ளோடையும் அன்பாகவும் ஆதராகவும் இருப்பா."

"ம்...நா...அத... மிஸ் பண்ணிட்டன்... றியலி....கெயாலஸ்ஸா நடந்திட்டன்டா..."

"இன்னும் ஒன்டும் லேட்டாவல்ல...இப்படிக் கொஞ்சம் ட்ரை பண்ணிப் பாத்தியென்டால் இன்ஷா அல்லாஹ் எல்லாம் சரியாகும்." என்று பெரிய உபதேசம் ஒன்றையே செய்து முடித்தான் றபீக்.

"நீ சொன்னதெல்லாம் உண்ம என்றத நானும் இப்பதான் உணர்ரன்.. இருந்தாலும்... ஹஸ்னா எங்கட ஊட்ல இருந்து கோவிச்சுக் கொண்டு பெய்ட்டு ஆறு மாதம் ஆகுதே".

"ஆஃ... என்ன?... விசயம் அந்தளவு தூரம் பெய்ட்டுதா?

"ஓஃ...அதான்...ஹஸ்னாவ அவட பேரன்ட்ஸ் என்ன தலாக் பண்ணச் சொல்லி சொல்ராங்களாம் என்ற கதையொன்றும் வந்திரிச்சி. அதனால உம்மாவும் வாப்பாவும் ஒரே கரச்சல் எனக்கு, ஹஸ்னாவுக்கு டிவோஸ் கொடுக்கச் சொல்லி..." என்று குரல் கம்ம கரீம் சொல்ல, இடியோசை கேட்ட நாகம் போல் றபீக் அதிர்ந்தே விட்டான்...

"அப்போ ஒனக்கும் ஹஸ்னாவுக்கும் பிரச் சனையா? எந்தத் தொடர்புமே இல்லையா" என வினவினான் றபீக்.

"இல்லயே. எனக்கும் அவவுக்கும் எந்தப் பிரச் சனையுமே இல்லயே. ஆனா நா கோல் எடுத்தாலும் அவ பேச மாட்டா. மகன் ஹஸீபிடம் போனக் கொடுத் துடுவா. ஹஸிப் ...டெடா... டெடா.... எப்ப எங்கிட்ட வருவீங்க.... எனக் கேட்டு அழுவான் .......என கண்கள் கசிய கரீம் சொன்னான்.

"அப்ப....ஒன்ட பேரன்ட்ஸ் சரி பெமிலியில வேறு யாரு சரியும் சமாதானம் பேசப் அங்க போகலயா"

"இல்ல.... இல்ல.....ஹஸ்னாட பெமிலியில இருந்து யாரும் வரல்ல. அதனால எங்கட ஸைட்டி லிருந்தும் யாருமே அங்க போவதற்கு உம்மா விரும்பல்ல. நான் போய் ஹஸ்னாவக் கூட்டிக் கொண்டுவரக் கேட்டா...அதற்கு விருப்பப்பட்ராவும் இல்ல."

"ம்....ம்......உனக்கு ஹஸ்னாவுடன் சேர்ந்து வாழத்தானா விருப்பம்.?"

"ம்...ம்...ஓஃ....அவக்கும் உம்மாவுக்கும் சில மனச் சிக்கல்கள் இருந்த போதும் அவ என்னிடம் ஒன்றையும் காட்டிக் கொள்ளவேயில்லையே...உம்மா சொல்லித் தான் எனக்கு எல்லாமே தெரியும். அவட உம்மா வீட்டுக்குப் போய்ட்டு வாரன் என்டு போனவவ தான் அவர்கள் திருப்பியனுப்பல்ல." என்றான் கண்களில் இருந்து வடியும் கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே நிலத்தைப் பார்த்தவனாக.

"அப்போ நான் உன் பேரன்ட்ஸூடன் கதைக்கவா...?"

"ஓஃ...மச்சான்...நீ....டீப்பாக் கதைச்சிப் பார்த்தால் அவங்கட மனசில என்ன இருக்கிறதென்பதை அறிஞ்சி கொள்ளேலும். அதே நேரம் நீ ஹஸ்னாட வீட்டுக்கும் போய் எனது மகனையும் பார்துட்டு ஹஸ்னாட டெடாவோடையும் பேசி, கவுன்ஸலிங் ஒன்றும் கொடுத்தால் நல்லமென்று நா நெனக்கிரன்."

"ம்...ம்...அது நல்ல ஐடியா. நீ யோசிக்காத... இந்தத் தொடர்கதைக்கு முற்றுப்புள்ளி வைப்போம். இன்ஷா அல்லாஹ் நா ஒம் பேரன்ஸூடன் பேசிட்டு ஹஸ்னா ஸிஸ்டரோடையும் அவ பேரன்ஸோடையும் பேசிட்டு உனக்கு குட்நிவ்ஸாத் தாரன். அதன் பிறகு நாம நேரில் குடும்பமாகச் சந்திப்பம். இன்ஷா அல்லாஹ்." என்று கரீமை ஆறுதல் படுத்தி மீண்டும் முஸாபஹா செய்து கொண்டு றபீக் விடைபெற்றான்.

தன் மனப்பாரம் அனைத்தும் குறைந்த மனவுணர்வுடன் "இன்ஷா அல்லாஹ்" என்றான் கரீமும்.

அமானிதம் ஒன்றை சுமந்த சுமைதாங்கியாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துஆ செய்" என்றான் றபீக். இருவரும் இருவேறு மன நிலையுடன் தங்கள் கார் சாவிகளைச் சுழற்றியவர்களாக இருவேறு திசைகளில் பிரிந்து சென்றார்கள்.

வீடுவந்து சேர்ந்த கரீம், தூங்குவோம் என்று கண்களை மூடினால் அவன் கண்களுக்குள் ஹஸ்னாவும் மகன் ஹஸீபும் வர, குளுகுளு என்ற அவன் அறையிலும் அவன் வியர்வையால் நனைய, நினைவுகளோ பின்னோக்கிச் சென்றன.

ஆம், கரீம் தனியார் பல்கலைக் கழகத்தில் கணனிப் பொறியியல் துறையில் தனது உயர் கல்வியை முடித்து விட்டுத் தனியார் நிறுவனம் ஒன்றில் கணனி ஸிஸ்டம் எனலைஸராகக் கைநிறைந்த ஊதியத்துடன் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு வயது 26 மட்டுமே.

ஒரு நாள் கரீம் வேலை முடிந்து வீட்டுக்கு வரும் போது, தாயும் தந்தையும், ஊரில் பெயர் போன கலியாணத் தரகருடன் அவர்களின் வீட்டுத் தோட்டத்தில் கலகலப்பாகவும் ஆரவாரமாகவும் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு, "என்னவோ இன்று வித்தியாசமாக இருப்பது போல் இருக்குதே" என மனதில் நினைத்துக் கொண்டே அஸ்ஸலாமு அலைக்கும் எனக் கூறியவனாக வீட்டின் உள்ளே நுழைந்தான்.

ஸலாத்திற்குப் பதிலளித்துக் கொண்டே மகனின் பின்னாள் வந்தாள் தாய். மகனுக்கு அவ கையாலே சோர்டீட்டும் தேநீரும் பறிமாறிக் கொண்டே, "நா எப்படி மகன்ட அனுமதியின்றி காதர் ஹாஜீயாருக்கு வாக்குக் கொடுத்தத செல்வது", என நினைத்தவள், அடுத்த நொடியே "என்ற மகன் நா கீறின கீத்தைத் தாண்ட மாட்டான். எனக்கு எம்மகன சமாதானப் படுத்திக் கொள்ளேலும்...நான் குடுத்த வாக்க அவன் காப்பாத்துவான்" என மனதில் நினைத்துக் கொண்டாள்.

"என்னும்மா.. எதப்பத்தி யோசிக்கிறீங்க...? என்னட்டயும் செல்லுங்கே"

"ஓஃ...ம்..ம்....யோசனையே ஒங்களப்பத்தித் தானே மகன்"

"அப்படியா.... எப்ப பாத்தாலும் இதத்தானே யும்மா செல்லுவீங்க இன்டெக்கி ஏதாவது புதுசா செல்லுங்களேன்."

தாய் தைரியமானாள். மகனின் பதில் தாய்க்கு பொஸிடிவாய் அமைந்து விட்டது.

"ஹ்.....ம்.... மகன்......புதிய நிவ்ஸ் இரிக்கி. இன்று எங்க வீட்டுக்குக் காதர் ஹாஜியாரும் அவரது மனைவியும் வந்தார்கள், இங்க பாருங்க மகன் இவ் வளவு... சாமான்களும் அவர்கள் கொண்டு வந்தது தான்."

"ஆ...ஹ்...அவங்க ஏன்... உம்மா இங்க வந்தாங்க"

"அவங்க வந்த நோக்கத்த மகனிடம் ஒபனாகச் சொல்லுங்களேன்"... என்றார் கரீமின் தந்தை பாயிஸ்.

"ஓஃ....அது...அவங்கட மகளப் பத்தியும், மகளின் திறமைகளைப் பத்தியும் அவரது தாய் எங்களிடம் செல்லிக் கொண்டிருந்தா. உங்களுக்கும் தெரியும்தானே காதர் ஹாஜியாரின் ரெண்டாவது மகள்".

"எனக்கொன்றுமே அவவப்பத்தித் தெரியா வும்மா"

"அழகான புள்ள மகன். நா ராசியமாக விசாரிச்சிப் பார்த்தன். நல்ல பிள்ளையாம். பணத்திமிர் துளியும் இல்லென்றுதான் அவட பிரண்ட்ஸூம் சென்ன. அவங்க ஒங்கள அவங்கட மகள் ஹஸ்னாவுக்கு மாப்புள கேட்டு வந்தாங்க. நீங்கள் என்ன செல்றீங்க என்றாள் சற்று தயக்கத்துடனே."

"நான் என்னத்த செல்ல உம்மா. எனக்கிப்ப எந்த ஐடியாவுமே இல்லும்மா"

"நீங்க... உங்கட....விருப்பத்தச் செல்லுங்க மகன்"

"எனக்கு இப்போவே கலியாணம் முடிக்கிற ஐடியாவே இல்லையென்றுதானே உம்மா நான் செல்றன்" என்றான் கரீம் சற்றுக் கோபமாகவே"

"எவ்வளவோ நல்ல நல்ல இடங்களில் இருந்து வந்ததையெல்லாம் தான் தட்டி விட்டீர்கள். இதுக்கா வது விருப்பப் படுங்க மகன். நானும் எவ்வளவு நாளைக்கித்தான் தன்னந்தனியாக இருக்க. வாப்பாவும் இதற்கு ஒத்தக்கால நிக்கிறாரு....."

"ஓஃ மகன்...காதர் ஹாஜியாரும் எங்கட எல்லா கண்டிசன்ஸூக்கும் ஒத்துக் கொண்டார். அவங்கட மகள எங்கட வீட்டுக்கு நிப்படத்துக்கு அனுப்புறத்துக்கும் அவங்க ஒத்துக்கொண்டாங்க."என்றார் தாயுடன் சேர்ந்து தந்தையும் தன் பங்களிப்பிற்கு.

நீண்ட கதைக்கும், விளக்கத்திற்கும், விவாதத் திற்கும் மௌனத்திற்கும் பின்தாயின் மனதை நோவடிக் கக் கூடாது என்பதற்காகவும் தாய் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவும் கரீம் ஹஸ்னாவைத் திருமணம் முடிப்பதற்கு ஒருமாதிரியாக ஒத்துக் கொண்டான். தாயும் தந்தையும் சேர்ந்து கரீமை மூலைச்சலவை செய்து ஒத்துக்கொள்ள வைத்தார்கள் என்றே சோல்லலாம்.

ஹஸ்னாவும் கரீமும் மிகவும் அன்பான தம்பதி களாகவே இருந்தார்கள். நாட்கள் செல்லச் செல்ல மாமிக்கு மருமகளின் கைபட்டாலும் குற்றம் கால் பட்டாலும் குற்றம் என்பது போல் மருமளுக்கும் மாமிக் கும் அடிக்கடி கருத்து முரண்பட்டுக் கொள்வது வழக்க மாகிவிட்டது. ஹஸ்னா கரீமிடம் ஒன்றையுமே சொல்ல வும் மாட்டாள். காட்டிக் கொள்ளவும் மாட்டாள். புரிந்துணர்வுடன் எல்லோரையும் அனுசரித்து நடந்து குடும்பத்தவர்கள் அனைவரினதும் நல்லபிப்பிராயத் தையும் நற்பெயரையும் பெற்றுக் கொண்டாள். "எனக்கும் ஹஸ்னாவுக்கும் இவ்வளவு இடைவெளி வரும் அளவுக்கு ஒன்றும் நடக்கலயே.

ஹஸ்னா எவ்வளவு புரிந்துணர்வுடன் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என்னுடன் நடந்து கொண்டா." தாயா மனைவியா என்று இருதலைக் கொல்லி போல் துடித்துக் கொண்டிருந்தான் கரீம். என்னைப் போல்தான் என்ட ஹஸ்னாவும் அவட உம்மாட கொன்றோல்ல இரிக்கிறா வாய்க்கும். அவள் பாவம். அல்லாஹ் எங்கள் இருவரை யும் இப்படிப் பிரித்து விட்டான். யா அல்லாஹ்வே! எம்மூவரையும் கூடிய விரைவில் ஒன்றாய் சேர்த்து, சந்தோசமாக வாழச்செய் என்று பிரார்த்தித்தவனாகவே தூங்கிப் போனான்.

அவன் எத்தனை மணிக்குத்தான் நித்திரை கொண்டான் என்பது அவனுக்கே தெரியாது. சொபூஹுக்கான அதான் சத்தம் கேட்கவும் உம்மாவின் "மகன்....மகன்...சொபூஹுக்கு பாங்கு சொல்லியாச்சி எழும்புங்கோ... மகன்...ஹஸ்னா கோல் எடுத்திருந்தா... ஸலாம் சொன்னா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறையனாளங்குள பொலீஸ்

**எஸ்.கிருபானந்தகுமாரன்**

நான் செட்டிகுளம் அரச கால்நடை வைத்திய ரான பின் அடிக்கடி பறையனாளங்குள பொலீஸ் ஸ்டேசனில் இருந்து காட்டிறைச்சி மாதிரிகளைக் கொண்டு வருவார்கள்.

"சேர் நாங்கள் பறையனாளங்குள பொலீஸ். இறைச்சி மாதிரியை கொண்டு வந்திருக்கிறோம். ரிப்போர்ட் வேணும்!" என்று கேட்பார்கள். சிங்களத்தில் தட்டச்சு செய்த கடிதமொன்றையும் தருவார்கள்.

அவர்களிடம் எடுத்தவுடன் என்ன இறைச்சி யெனக் கேட்பேன். அவர்களும் மான், மரை, உடும்பு, காட்டுப்பன்றி என சொல்வார்கள். சில இறைச்சி மாதிரிகள் வெளிப்படையாகத் தெரியும். நிறத்தைக் கொண்டும் மணத்தைக் கொண்டும் அடையாளம் காண முடியும். சிலவற்றில் இருக்கும் தோல் மற்றும் உரோமங் களைக் கொண்டு வேறுபடுத்த முடியும். ஆரம்ப காலத்தில் இந்த மாதிரிகளை வேறுபடுத்துவதில் நான் சிரமத்தை எதிர் கொண்டிருந்தேன். தொடர்ச்சியாக மாதிரிகளை பரீட்சித்ததன் விளைவாக இந்த விடயத்தில் ஒரு தேர்ச்சியை என்னால் பெற முடிந்தது. சில இறைச்சி மாதிரிகளை கண்டு பிடிப்பது சிரமம். குறிப்பாக பழுதடைந்திருக்கும் மற்றும் சமைத்திருந்த மாதிரிகளை அடையாளம் காண்பது.

பிடிபட்டவர் என்ன சொல்கிறார் என்று கேட்பேன். ஒத்துக் கொண்டதாகச் சொன்னால் பெரிதாக சிக்கல் இராது. மறுத்தால் எங்களின் அறிக்கை முக்கியத்துவம் பெறும். வழமையாக ஊர் களில் இறைச்சித் தொழில் செய்பவர்களை பொலீசுக் குத் தெரியும். இடைக்கிடை அவர்களை பிடித்து தண்டப் பணம் கட்டவும் செய்வார்கள். சில இறைச்சிப் பங்குகள் முதலில் பொலீசுக்குத்தான் போகும். புதிய பொறுப்பதி காரிகள் மாறும் போது வழமையான இறைச்சிக் காரர் கள் பிடிபடுவார்கள். காலப் போக்கில் அதிகாரிகளை அவர்கள் கைக்குள் போட்டுவிட பிறகு எதுவும் வராது.

அரசாங்க சேவைக்கு வரும்போது எனக்கு பேராதனையில் 3 மாத பயிற்சிநெறியொன்றைச் செய்திருந்தனர். அதன்போது இந்த இறைச்சி மாதிரிப் பரிசோதனை தொடர்பாகவும் சொல்லியிருந்தார்கள். சில வேளை நீதி மன்றம் செல்ல வேண்டியும் வரும் எனவும் தவறாகச் சொன்னால் நீதவானிடம் பேச்சும் வாங்க வேண்டி வரும் என சொன்ன விடயம் ஒரு பதட்டத்தையே தந்திருந்தது. உண்மையில் இறைச்சி மாதிரிகளை துல்லியமாக கணிக்க கூடிய அடிப்படை ஆய்வுகூட வசதிகள் அரச கால்நடை வைத்திய அலுவலகங்களில் கிடையாது. இது தொடர்பான அடிப் படைப் பயிற்சிகளை அரச கால்நடை வைத்தியர்கள் பெற்றிருப்பதும் கிடையாது. வனவிலங்கு திணைக் களத்தில் கால்நடை வைத்தியர்கள் உள்ள போதும் இறைச்சி மாதிரிகளை அவர்களிடம் கொண்டு செல்வதும் இல்லை. பிரதேச கால்நடை வைத்தியர் களிடம் தான் வருவார்கள். நாங்களும் அனுமானத்தின் அடிப்படையில் அறிக்கையை தருவோம். நீதிமன்ற விடயம் என்பதால் முடிந்தவரை செய்து கொடுப்போம். எமக்கு சந்தேகம் என்றால் அதனைக் குறிப்பிட்டு உறுதிப்படுத்த கண்டி பேராதனையில் உள்ள விலங்கு ஆராய்சி மையத்திற்கு கொண்டுபோய் ஆய்வு செய்யுமாறு அறிக்கையிடுவோம். நான் பணியாற்றிய காலத்தில் அப்படி பேராதனைக்கு பொலீசார் மாதிரி களைக் கொண்டு சென்றதாக அறிந்திருக்கவில்லை. என்ன செய்தார்களோ தெரியாது. பிடிபட்டவர்களுடன் சமரசமானார்களோ இல்லை இந்த அறிக்கையைத் தாக்கல் செய்து தண்டனை வாங்கிக் கொடுத்தார் களோ தெரியாது.

எனது முதல் கால்நடை வைத்திய அலுவலகம் மடு. அது மடு சரணாலய பகுதிக்குள் பாலம்பிட்டிச் சந்தி யில் அமைந்துள்ளது. அடர்ந்த காட்டுப் பகுதி. எனினும் நான் பணியாற்றிய நான்கு வருடகாலத்தில் ஒரு தடவையேனும் அந்த பிரிவு பொலீசார் இறைச்சி மாதிரிகளைக் கொண்டு வந்ததில்லை. இத்தனைக்கும் அங்கு வேட்டையாடுவதும் காட்டிறைச்சி வியாபாரம் செய்தலும் வெளிப்படையாகவே நடைபெறும் தொழில். பல புகழ் பூத்த வேட்டைக்காரர்களை எனக்குத் தெரியும். அவர்களின் வேட்டை நாய்களுக்கு சிகிச்சையும் செய்திருக்கிறேன். வேட்டைக்காரர்களின் வேட்டை முறைகளைப்பற்றி அவர்களிடம் கேட்டும் இருக்கிறேன். மடு மாதாவின் உற்சவ காலத்தில் தென்னிலங்கை பக்தர்கள் தேடும் முக்கிய வஸ்து இந்த காட்டிறைச்சி தான். மான், மரை, முயல், உக்குளான், பன்றி, அழுங்கு, உடும்பு என சகல வித காட்டிறைச்சியும் அங்கு சர்வ சாதாரணமாகவே கிடைக்கும். ஆனால் பிடிபடுவ தில்லை. பொலீசுக்கு தெரியாமல் இது நடக்க வாய்ப் பில்லைதானே.

மடுவிலிருந்து செட்டிகுளத்துக்கு மாற்றலாகி வந்த புதிதில் இங்கு வந்து குவியும் காட்டிறைச்சி மாதிரிகள் தொடர்பாக. அதும் குறித்த ஒரு பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் மாதிரிகளைக் கொண்டு வருவது எனக்கு ஆச்சரியத்தை தந்திருந்தது.எனது செட்டிகுள கால் நடை பிரிவில் செட்டிகுளம், உலுக்குளம், பூவரசங்குளம், பறையனாளங்குளம் என நான்கு பொலிஸ் பிரிவுகள் உள்ளன. நான்குமே காடுகளைக் கொண்டவை. நான்கிலுமே காட்டு வேட்டை சர்வ சாதாரணமாகவே நிகழும். ஆனால் பறையனாளங்குள பிரிவுதான் இறைச்சி மாதிரிகளைக் பெரும்பாலும் கொண்டு வருவார்கள். மற்றப் பிரிவுகளில் இருந்து கள்ள மாடு பிடித்த கேஸ், வெட்டு கேஸ் போன்றவைதான் வரும். இந்த காட்டிறைச்சி பிடிபாடு வராது. பறையனாளங்குள பொலீஸ் பிரிவு வவுனியா மன்னார் வீதியும் மதவாச்சி மன்னார் வீதியும் இணையும் பகுதியை கொண்டது. வட புறம் மடு சரணாலயமும் தென் புறம் வில்பத்து சரணாலயத்தின் ஒதுக்கு புறமும் மல்வத்து ஓயாவும் காணப்படுகிறது. பெரும்பாலும் காட்டுப் பகுதிதான். செட்டிக் குளத்தில் பணியாற்றிய 6 வருட காலத்தில் 40-50 இறைச்சி மாதிரிகளை பரிசோதித்திருப்பேன்.அவற்றில் 95 வீதம் பறையனாளங்குள மாதிரிகள்.

இது நான் செட்டிகுளத்தில் முதன் முதலில் சந்தித்த இறைச்சி மாதிரி தொடர்பான கதை. இரண்டு பொலிஸ் அதிகாரிகள் வந்திருந்தனர். ஒருவர் தமிழர். மற்றையவர் சிங்களவர். தமிழர் சீல் வைக்கப்பட்ட இறைச்சி மாதிரியை தந்தார். சிங்களவர் சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதத்தை தந்தார். அதில் இந்த இறைச்சி மாதிரியை சோதித்து அறிக்கையிடுமாறு கேட்டிருந்தது. எனக்கு சிங்களம் தெரிந்திருந்தும் தமிழில் சொல்லுமாறு தமிழ் பொலிசாரிடம் கேட்டேன்.

"கன்னாட்டி பகுதியில் ஒரு வீட்டில் மறைத்து வைத்திருந்த போது பிடிச்சது சேர்!"

என்ன இறைச்சி இது?

மான் சேர்.

இவ்வளவு தானா?

இல்ல சேர் 8 -10 கிலோ வரும். மிச்சத்த பொலீஸ்லயே வச்சிருக்கம். பிறகு அழிச்சிடுவம்.

சரி. ஆள் பிடிபட்டதா?

ஓம் சேர். அவன்தான் ஏரியாட முக்கிய ஆள். கடும் வேட்டக் காரன்.

என்ன சொல்றான்?

ஒத்துக் கொள்றான் சேர்.

என்னன்டு?

மான் இறைச்சியெண்டு.

ஓ. எப்பிடி பிடிச்சாங்களாம்?

பெரிய தம்பனைக் காட்டுக்க, ஓட்டோ கேபிள்ள தடம் வச்சு பிடிச்சிருக்காங்கள்.

இறச்சிய நீங்களா பிடிச்சிங்க.

ஓம் சேர். ஊராக்கள் ஒத்து தந்தவங்கள். இவன் அடிக்கடி பிடிபடுற "ஆள் சேர். இவனுக்கு இது சின்ன விசயம்."

இறைச்சி மாதிரியை பரிசோதித்தேன். முதல் தடவை என்பதால் சற்று பதட்ட மடைந்திருந்தாலும் இறைச்சி விடயத்தில் கைதேர்ந்த என் ஊழியர்களான பிரேமதாசாவும் பிரபாகரனும் இருப்பது ஒரு தெம்பைத் தந்திருந்தது. ஏற்கனவே மான் என பொலீசார் தெரிவித்ததும் எனக்கு சிக்கலை தந்திருக்க வில்லை. முன்னமே விடை தெரிந்த பரீட்சை வினா போன்ற நிலை. எனது ஊழியர்களைப் பார்த்து

"உங்களுக்கு ஒரு பரீட்சை.என்ன இறைச்சி என பார்த்து சொல்லுங்க பார்ப்போம்!" என வினவினேன்.

இருவரும் பார்த்து விட்டு "மான்தான் சேர். லைட் சிவப்பு இறைச்சி" என்றனர்.

மணமும் மான் இறைச்சி மணம்.

பிரபாகரன் "சேர். அங்க பாருங்க நாலஞ்சு முடியும் இருக்கு. பிறவுனும் வெள்ளையும் கலந்த முடி. மான்தான். மரைக்கு தடிச்ச மயிர். வெள்ளை இருக்காது. இறைச்சியும் கடும் சிவப்பு. மணமும் வித்தியாசம்"

எனக்கு பெரிதாக அனுபவமில்லை என்பதை நான் என் உடல் மொழி மூலம் கடைசி வரை காட்டிக் கொடுக்கவில்லை.

பொலீசிடம் "மானென்டா இதுக்கு எவ்வளவு பைன் வரும்?" என கேட்டேன்.

"25000 வரும் சேர் !."

அவன் குற்றத்த ஒப்புக் கொள்ளாட்டி...

அதெப்பிடி கையும் களவுமா சிக்கிட்டான். தப்பேலாது சேர்.

பிரேமதாசா ரகசியமாக "சேர் இவங்கள் கள்ளங்கள். முழு இறைச்சியையும் தாங்களே எடுத்துக் கொண்டு இங்க கொஞ்சத்த வந்திருக்கினம். இவங்களுக்கும் வேட்டக் காரனுக்கும் லிங் இருக்கும். இடைக்கிட வருவாங்கள். தாங்களும் வேலை செய்யுறதா காட்ட"

ம்.அதான் போல....

சேர்... கண்ணாட்டில இருக்கிற சனம் பரம ஏழைகள். 77 கலவரத்தில குடியேறிய மலையக தமிழர்கள். பெரிசா வேற தொழிலும் இல்ல.வன்செயல் காலத்தில இந்தியா போய் இப்பதான் வந்திருக்காங்கள். அவங்கள்ட்ட புடுங்கித் தின்றதுதான் இவங்கட வேலை" என்றார் பிரபாகரன்.

ஓம் சேர் கண்டும் காணாமல் விட்டிருக்கலாம். இது பிரேமதாசா.

என்ன செய்யுறது. எங்கட கடமை. ரிப்போட் குடுக்கிறது. மற்றது பிரேமதாசா இவங்கள் கொல்லுற முறையும் கொடூரமானது. வெங்காயவெடியில தலை சிதறி, இடியனால சுட்டு, கேபிள்ள இறுக்கி. மிருகத் தனமா தானே கொல்றாங்கள். சின்னத் தண்டனையாவது கிடைக்கட்டுமன்.

எங்கசேர் தண்டனை. எல்லாம் டீலிங். ஏதும் காசு கொடுக்கல் வாங்கல் பிரச்சனை போல. சரியாக எல்லாம் சரியாகும்.

அலுவலக கணனியில் தேடிய போது ஏற்கனவே இருந்த பல அறிக்கைகளை காணமுடிந்தது. எல்லாமே பறையனாளங்குள பொலீசுக்குத்தான்.மான் மரை காட்டுப் பன்றி என விதம் விதமான அறிக்கைகள்.

"எனது அறிவுக்கு எட்டிய வகையிலும், அவதானிப்பின் அடிப்படையிலும் இது மான் இறைச்சி என உறுதிப்படுத்துகிறேன் என அறிக்கை தந்தேன்."

அதுதான் ஆரம்ப புள்ளி. 6 வருடங்களில் பல மாதிரிகள். இருமுறை நீதிமன்றமும் சென்றேன் சாட்சி சொல்ல. வரும் இறைச்சி மாதிரிகள் முழுதும் பறையனாளங்குளம் பொலீசிடமிருந்து. பல பொலீஸ் பொறுப்பதிகாரிகளை எனக்கு பழக்கமாகியது. ஆனால் இந்த நடைமுறை மட்டும் கடைசி வரை மாறவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.புஷ்பா

# உச்ச விழுமியம்



வீதியின் இருமருங்கும் பச்சைப் பசேல் என்ற வயல் நிலங்கள், வானத்தில் பஞ்சுப் பொதிபோல நகர்ந்து செல்லும் முகிற் கூட்டங்கள், இடையிடையே குரல் எழுப்பியவாறு பறந்து செல்லும் பறவைகள் இவற்றை ரசித்தபடியே கவிதா சயிக்கிளில் விரைவாகப் பறக்கிறாள்.

முற்றத்தில் சயிக்கிளை விட்டு பூட்டித் திறப்பை எடுத்துக் கொண்டு, செருப்பை ஓரமாகக் கழற்றிவிடும் போது உள்ளே "கீரீச்" என்ற கட்டிலின் சத்தம் கேட்கிறது. கவிதா வருவதை ஊகித்துக்கொண்டு கட்டிலில் இருந்து எழுந்தமர்கிறார் கவிதாவின் தயார்.

"அம்மா! என்றழைத்து, "குளிச்சனீங்களோ? சாப்பிட்டனீங்களோ? என வழமைபோலக் கேட்ட போது பதிலெதுவும் பேசாது அமைதியாக இருக்கிறார் தாயார். நிலமையைப் புந்துகொண்டு "அம்மா, அக்கா தன்ரவேலையை முடிச்சுப்போட்டு வந்து கேட்கேக்க நீங்கள் ஓம் எண்டு சொல்ல வேணும் இப்ப வாக்கேலா தம்மா நேரம் ஐந்தரையாகிட்டுது. குளிர் காத்தும் வீசுது இப்ப கால் முகம் கழுவி, உடுப்பை மாத்துவம் என்ன? என்று சொல்லிவிட்டுத் திரும்பிய போது,"நில்லனை, எனக்குத்தாற தண்ணியை நல்லதாகச் சூடாத் தந்திட்டு மற்ற வேலையைப்பாரணை," எனக் கூறுகிறார்.

தாயாரின் தேவை, தான் கால் முகம் கழுவி உடுப்பை மாற்ற வேண்டிய அவசியம் இவற்றை உணர்ந்து கொண்டு, கிணற்றடிக்கு ஓடுகிறாள் விரைவாக தனது வேலையை முடித்துக் கொண்டு அம்மாவுக்கு அங்கர் பால் மாவைக் கலந்து, சுவையான தேநீரும் தயாரித்துக் கொண்டு வந்து, தயாரிடம் கொடுத்து விட்டுக் கீழேயிருந்த பலகைக் கட்டையில் அமர்கிறாள். "ஏன்? நீயும் எடுத்துக் கொண்டு வந்து குடியனடா" அக்கறையுடன் கூறுகிறார்.

"வறுமையை வரமாக கொண்டு வந்தது எங்கடை குடும்பம் அப்பா, அம்மா எங்களைக் கஷ்டப் பட்டு வளத்தவை வறுமையும் செம்மையா வளத்தவை. சகோதரிமாரைத் திருமணம் செய்து கொடுத்த பிறகு, அப்பா நோய் வாய்ப்பட்டு இறந்து போனார். அம்மா, எங்களின்ரை தோட்ட நிலத்தோடு போராடிக் குடும்பத் தைப் பார்த்துவந்தவ இப்போது இயலாமை வந்திட்டுது.

கவிதாவின் எண்ணங்கள் ஐந்து வருடங் களுக்குப் பின்னோக்கிச் செல்கிறது. பக்கத்திலூரில் உன்ன தங்கமணியம்மா சீரியஸாக இருந்தபோது, அவவைப் பார்க்கவென்று, தெரிந்தவர்கள் உறவினர்கள் எனத்தேடித் திரிந்தார்கள். அம்மாவிடம் வந்து விநய மாகக் கதைத்து அவளைக் கூட்டிப் போக விரும்பி னார்கள் முதலில் தாயார் விரும்பவில்லை. மஞ்சுளா அக்கா, அதுதான் தங்கமணியம்மாவின் கடைசி மகள் திரும்பவும் வந்து கதைத்துச் சம்மதம் பெற்றுவிட்டார்.

"தெரிந்த குடும்பம் எந்த விதமான கரைச்சல் களும் வரவாய்ப்பில்லை. வீட்டிலை நிண்டுதானே அதுவும் பகல் வேளை தானே பாக்கக் கேக்கினம். தெரிஞ்சவை உதவியாகவும் இருக்கும் ஓ.எல். லுடன் படிப்பை நிற்பாட்டின உனக்கு அவையைப் பார்த்துப் படிக்கத்தன்னும் ஆர்வம் வரும். அப்படியில்லாட்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ என்ன? வருத்தக்காரி நெடுவலும் இருக்க போறாவா? பிறகு நிண்டிடலாம்." எனப் பலதும் பத்தும் கூறி அவளைத் தங்கமணியம்மா வீட்டிற்கு அனுப்பி னவ. ஆனால் இன்று அவர்களுக்கு வாழ்வாதாரமாகி விட்ட வேலை அது.

"இப்ப மாதிரியிருக்கு ஐஞ்சு வருஷங்கள் ஓடிட்டுது. உணவு, மருந்து, பராமரிப்பு வசதியள் எல்லாம் தங்கமணியம்மாவின்ரை ஆயுளையும் கூட்டியிருக்குப்போல ஆனாலும் முதுமையும், தனிமையும் அவவை வாட்டத்தான் செய்யுது.

கடைசிப்பிள்ளை மஞ்சுளாக்கா காலையில் ஏழு நாப்பதுக்கு வெளிக்கிட்டுப் பின்னேரம் ஐஞ்சு மணிக்குத் தான் வருவா அவக்கு வேலையும் படிப்பும்தான் முக்கியம். ஆனால் அவளுக்கு எவ்விதக் கஷ்டமும் தருவதில்லை. "அம்மா கவனம். விழுந்துவிடுவா உம்மை நம்பித்தான் போய் வாறனான் சும்மா இருக்கேக்கை இதுகளை வாசியும்" எனச் சொல்லி நல்ல புத்தகங்களைக் கொடுத்து விட்டுப் போவா.

ஆரம்பத்திலை வேலை பெரிசா இருக்கேல்லை. தங்கமணியம்மாவுக்குக் குளிக்க வாத்து, உடுப்பு தோச்சு, சாப்பாடு குடுத்து, அறையையும் நீற்றா வைச்சிருக்கிறது தான் வேலை சிலவேளை வயிற்றுக்குழப்படி, நினைப்புக்கள், இயலாமை என வந்தாலும் முகம் சுழிக்காமல் கவனிச்சு, அவவின்ரை கதைகளையும் அக்கறையோடை கேட்டுச் சேவை மனப்பாங்கோடை செயற்பட்டு வந்ததாலை, தங்கமணியம்மாவுக்கும் கவிதா மேல ஒரு பாசம் நம்பிக்கை

மாதங்கள் நகர, முதலாளி, தொழிலாளி எந்த வர்க்கம் மட்டத்திலும் இருக்கும் என்பதைக் கவிதா உணரத் தவறவில்லை. பக்கத்து வீட்டிலிருக்கும் தங்கமணியம்மாவின் மூத்த மகள் பகவதியக்காதான் இவர்கள் இரண்டு பேருக்கும் மத்தியானச் சாப்பாடு கொடுப்பது, வந்து மேற்பார்வையும் செய்வா. கவிதா ஓய்வாக இருப்பதை மூத்த மகள் விரும்புவதில்லை. கவிதாவிடம் இருந்து உச்ச பயனைப் பெறவேண்டும் என்ற தீவிரம் அவவிடம் இருந்தது.

அவித்த மாவை அரிப்பது, அரிசியில் நெல்லுப் பொறுக்குவது பொண்ணாங்காணி துப்பரவாக்குவது, கொப்பறாத் தேங்காயை உடைத்துச் சீவிக்காய வைப்பது, என வேலைகள் கொடுத்துக்கொண்டே இருப்பா. இவளை வேலைக்கு ஒழுங்கு செய்தது மஞ்சுளா அக்கா. இவளிடம் வேலை வாங்குவது மூத்தமகள். என்ன செய்வது சகிப்பே யக்ஞமாம.

கடந்த சில தினங்களாகத் தங்கமணியம்மா வுக்கு உடல்நிலை சரியில்லை பெரிய வருத்தமெதுவும் இல்லை முதுமைக்குரிய வருத்தங்கள் தான். சளி, இருமல், இளைப்பு, தளர்வு, மருந்துகள் ஒழுங்காப் போட விருப்பமில்லை. எண்பத்தெட்டு வயது இவ்வளவு காலமும் ஆரோக்கியமாக இருந்திருக் கிறாவே. மற்றவர்களுக்கு மனதாலும் தீங்கு நினைக்காதவ படுத்திருக்கிறா.

ஒருமாதம் கடந்த நிலையில் தங்கமணியம்மா வுக்கு சளி கூடி மூச்சுவிடுவதற்குச் சிரமப்படுவது தெரிகிறது மஞ்சுளா அக்கா ஒரு கிழமை லீவு போட்டு விட்டு நிற்கிறா. முதுமைதானே சொல்லேலாது வெளிநாட்டிலை இருக்கும் சகோதரர்களுக்கும் லேசாகச் சொன்னா நல்லது எண்டு சகோரிகள் தங்களுக்குள் கதைத்துக் கொள்கிறார்கள் தங்கமணியம்மாவில எந்த முன்னேற்றமும் இல்லை குடும்ப வைத்தியர் வந்து பாத்திட்டு உடல்நிலை, கால அவகாசம் பற்றிச் சொல்லிப் போட்டுப் போறார். அக்கறையோடை எல்லோரும் கவனிக்கனும் உறவினர் சிலர் வந்து பாத்திட்டுப் போயினம் வெளிநாட்டில் இருக்கும் பிள்ளைகளுக்கு நிலைமையைத் தெரியப்படுத்தும் வேலைகளையும் பார்க்கினம். கால விதிப்படி வியாழக் கிழமை மூன்று மணிக்குத் தங்கமணியம்மா, பால் எதுவும் பருக்காமலே இயற்கை எய்திவிட்டா மிக நெருங்கிய உறவினர்கள் சிலர் வந்து முன்னாய்த்த வேலை களைப் பார்த்து கோலுக்க கட்டில் போட்டுத் தங்க மணியம்மாவை கிடத்திவிட்டார்கள். கூடி அழுகிறார்கள்.

அம்மம்மா, அக்கா, மாமி என்றழைத்தவர் களெல்லாம் "பொடியை எப்ப எடுக்கிறது? எத்தனை நாளைக்கு வச்சிருக்கிறது ஊசி அடிக்கிறது?" என்றெல் லாம் கதைக்கிறார்கள். "பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் வருகினமாம். நாலு நாளாகும் ஞாயிற்றுக்கிழமை தான் எடுக்கிறது" எனக் கதைக்கினம் மஞ்சுளா அக்கா, "அம்மா! உன்னை வழியனுப்பத்தானோ நான் லீவு போட்டு விட்டு நிண்டனான்? நில்லாட்டி எனக்கு மனம் ஆறாது" என்று சொல்லி அழுகிறா. தங்கமணியம்மா வுக்குத் தினமும் பக்கத்திலிருந்து சாப்பாடு தீத்திறது, தண்ணி பருக்கிறது, பேப்பர் வாசிச்சுக் காட்டுறது. அவளின் சுருங்கின தோலை விளையாட்டாக இழுத் திழுத்து வேடிக்கை பார்க்கும் போது "காவோலை விழ குருத்தோலை சிரிக்கும்" எனச் சிரிச்சுக் கொண்டு சொல்வதெல்லாம் நினைவுக்கு வர இவளுக்கும் அழுகை வருகிறது.

மூன்றாம் நாள் மாலை வன்னியில் இருந்து வயதான உறவுப் பெண்ணொருவர் வந்திருந்தார். அவ அழுது விட்டு ஒவ்வொரு அறையாக நோட்டம் விட்டுக் கொண்டு "இஞ்சை வா பகவதி" என மூத்த மகளை அழைக்கிறார். "அம்மா படுத்திருந்த அறையைக் அப்படியே விட்டிருக்கியள். கட்டில்ல கிடக்கிற எல்லாத்தையும் எடுத்து எரிச்சு விடுங்கோ" எனக் கூறுகிறார். கவிதாவுக்குத் தர்மசங்கடமான நிலை "நான் ஒழுங்கு படுத்தாமல் விட்டது பிழையோ?" என யோசிச்ச போது மீண்டும் அந்தப்பெண், "உங்கட பிள்ளையிட்ட நீங்கள் தான் சொல்ல வேணும் கெதியா எடுத்து எரிக்க சொல்லுங்கோ" பகவதியக்காக்கு பதில் எதுவும் சொல்லத் தெரியவில்லை. சைகையால் சம்மதம் தெரிவிக்கிறாள்

கவிதா கட்டிலில் இருந்த பெட்சீற்றுக்கள், தலையணைகள், துவாய், சுவெற்றர் என எல்லாவற்றை யும் எடுத்து உரப்பையில் போடுகிறாள், கட்டிலுக்கு விரித்த பெரிய விரிப்புக்கள் இரண்டையும் எடுத்து மடித்து வைத்துவிட்டு அடுத்ததாக கீழேயிருந்த மென்மையான பஞ்சு மாதிரி வெளிநாட்டில் இருந்து அனுப்பினது பாவிச்சு மூன்று மாதங்களும் இல்லை எந்தச் சந்தர்ப்பத்திலும் மலம், சலம் எனப் பாதிக்கப் பட்டதில்லை. அருமந்த மெத்தை என்று நினைக்கிறதுக் கிடையில் "யோசியாதை எல்லாந்தான். கெதியா வேலையை முடி இருளப்போகுது" எனக் குரல் கொடுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார் அந்தப்பெண் கவிதாவுக்குச் சினமாகவிருந்தது. “இந்த மனிஷிக்கென்ன இந்த நல்லதுகளைப் பார்க்கப் பொறாமையோ? எரி எரி என்று சொல்லுறா?” என மனதினுள் நினைத்துக் கொண்டு அந்த மெல்லிய மெத்தையை இரண்டாக மடித்துப் பின் உருட்டி வேறொரு உரப்பையில் வைத்துக் கட்டுகிறாள்.

கவிதாவுக்கு யோசனை தொடர்கிறது. “ஏன் எரிக்கவேணும்? கட்டிலோட இருக்கும் பெரிய மெத்தையை எரிக்க சொல்லவில்லையே?ஆருக்கேனும் குடுக்கலாம் அதுவும் இண்டைக்கு குடுக்கேலாது. நான் கொண்டுபோய் அம்மாவின் கட்டிலுக்கு போடலாந் தானே? கொண்டுபோறதும் சுகம். இருட்டியும் விட்டுது என மனதுள் நினைத்தவாறு எல்லாவற்றையும் பின்னுக்குக் கொண்டுபோய் வைத்து விட்டு மஞ்சுளா அக்காக்குச் சொல்லிப்போட்டுப் பின் பக்கக் கேற்றடிக்கு வந்து, மெத்தைப் பையைச் சயிக்கிளில் வைத்துக் கொண்டு வெளியில் வருகிறாள். இரவு ஏழுமணி யாகிறது. வாகன சந்தடிகளைக் கடந்து வீடு வந்து சேர்ந்துவிட்டாள்.

மகளை எதிர்பார்த்து முற்றத்து வெளிச்சத்தில் அமர்ந்திருந்த கவிதாவின் தாய், கூர்ந்து பார்க்கிறார். சயிக்கிளை உருட்டிக்கொண்டு வந்து ஓரமாக நிற்பாட்ட வும், “ஏன் பிந்தினது? அது என்ன சயிக்கிளில்” என்று தாய் விசாரிக்கவும் சரியாக இருந்தது. “அதம்மா தங்க மணியம்மாவின் கட்டிலுக்குப் போட்ட விரிப்புக்களுக் குக் கீழ இருந்த சொப்ரான மெத்தையொன்று எரிக்க மனமில்லை. கொண்டு வந்திட்டன்.” கவிதா சொல்லி முடிக்கவில்லை. இருந்த அம்மா எழும்பிவிட்டா. “ஆர் சொல்லித்தந்த பழக்கம் எங்கை இருந்து வந்தது. நான் கேட்டனானோ? கஷ்டமோ, நஷ்டமோ நான் ஏற்றுக் கொண்டுதானே நாளைக் கடத்துறன். இப்ப இருக்கிறது எனக்குப் போதும். ஏன் இந்த முடிவுக்கு வந்தனீ. இதைப் பற்றி என்னோட கதைச்சிருக்கலாம். அதுவுமில்லை ஒருநிமிஷம் கூட இஞ்சை வச்சிருக்க கூடாது. இப்படி நாங்கள் சீவிக்கோணுமோ ?

கவிதா, வெலவெலத்துப் போனாள். தாய்க்குச் சமாதானம் கூறவோ, தனது செய்கைக்கு விளக்கம் கூறவோ முடியாது. தடுமாறி முகத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறு தங்கமணியம்மாவின் வீட்டைநோக்கிச் சயிக்கிளைத் திருப்பி மிதிக்கிறாள்.

“ஐயோ! ஏன் எனக்கு இப்படிப் புத்திபோனது? அம்மாவின் குணம் தெரிந்திருந்தும் அவவின் கட்டிலின் நிலை என்னை நெடுகலும் உறுத்தியதாலோ? அல்லது நல்ல ஒரு பொருளை வீணாக்க கூடாது என்று நினைச்ச தாலோ?” தாயாரின் கேள்விகள் மனதைத் துளைக்கக் கவிதா சயிக்கிளை மிதிக்கிறாள்.

அம்மாவின் வயதுக்கு, நிலத்தில் பாயில் நித்திரை கொண்டுவிட்டு எழும்புவது கஷ்டம். மெல்லிய கம்பிகளை எட்டெட்ட ஒட்டிப் பொருத்தின லோக்கல் கட்டில் றோட்டால் வித்துக்கொண்டு போறவர்களிடம் வாங்கினது. கடைகளில் காசுக்கு வாங்கின காட்போட் பெட்டிகளைப் பிரித்து ஒழுங்கு படுத்திப்போட்டு அதுக்குமேல் சாக்குகளை விரித்து, மேல பாயையும் விரித்து தான் நித்திரை கொள்ளுறது. குட்டில் அமுத்தமாக இருக்கிறதில்லை என்ற நினைப்பும் எப்பவும் இவளை உறுத்திக் கொண்டிருந்ததும் காரண மாயிருக்கலாம்.

இவளை நம்பி வீட்டையே ஒப்படைத்து விட்டு போறவ மஞ்சுளா அக்கா. காசுகள் பேர்ஸ், மோதிரம், காப்பு எனச் சில வேளைகளில் மறந்து விட்டுட்டுப் போறவ நேர்மையுடனும், கன்னியத்துடனும் சலுகை களை எதிர்பாராது வேலை செய்தாள். இதற்கான பாராட்டுக்களையும் அவ்வப்போது பெற்றுக் கொண் டாள். இண்டைக்கு இப்படி முடிவெடுக்க எப்படி மனம் வந்தது?. வயசானாலும் அம்மா எப்பிடிச் சிந்தித்திருக் கிறா? சலனம் எதுவும் இல்லாது தனது முடிவை வெளிப்படுத்தியிருக்கிறா.

குற்றவுணர்வு இவளைத் துரத்த, விரைவாக ஓடித் தங்கமணியம்மாவின் வீட்டின் பின் கேற்றடிக்கு வந்து விட்டாள் கேற்பூட்டப்பட்டிருக்கிறது. பரவாயில்லை கேற்றுக்கு அப்பால் கொஞ்சம் பின்நோக்கி நகர்ந்து மதிலுக்கு மேலால் மெத்தை மூட்டையைப் போடு கிறாள். இப்போ மனதில் சுமந்து வந்த குற்றவுணர்வு என்னும் பெரும் பாரம் குறைகிற மாதிரித் தென்படுகிறது கவிதாவுக்கு. சயிக்கிளைத் திருப்பி எடுத்துக் கொண்டு மெதுவாக நிதானமாக வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாள்.

---

## தற்காப்பு உணர்வு

உயிர்கள் அனைத்திற்கும்
இயற்கை அளித்த வரம் ஒன்று
உன்னதமான தற்காப்பு உணர்வு
இது அதன் வாழ்வை நிலைநிறுத்தும்

இயற்கை தன் சமநிலையைப் பேண
உருவாக்கிய நியதிகளில் ஒன்று
பலம் வாய்ந்த உயிர்கள் எப்போதும்
பலம் குறைந்த உயிர்களை அழிப்பது

வாழ்வுக்கான பாதுகாப்பு நிச்சயமற்றபோது
வாழ துடிக்கும் உயிர்கள் யாவும்
உலகில் நிலைத்து நிற்பதற்கு உதவுவது
உண்மையில் தற்காப்பு உணர்வு ஒன்றே

மனிதர் வாழ்வில் நாம் காண்பது எப்போதும்
தற்காப்பு உணர்வு குறைந்த மனிதன்
மிதித்து நசுக்கப்படுவான் மற்றவர்களால்
ஏனென்றால் அவன் பலவீனமானவன்

— குப்பிளான் குமரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பாடல்

கடல்மேல வள்ளம் ஏறி ஏலேலோ ஏலயெலோ
வலைவீசி மீன்பிடிச்சு ஏலேலோ ஏலயெலோ
முப்பது வரிஷயுத்தம் முடிஞ்ச ஏலேலோ ஏலயெலோ
கடல் வலயப் பாதுகாப்பும் ஏலேலோ ஏலயெலோ
முடிஞ்சு போச்சு நிம்மதியாய் ஏலேலோ ஏலயெலோ
எண்டு நினைச்சு ஈழத்தமிழர் ஏலேலோ ஏலயெலோ
மீனவர் நாங்கள் படகிலேறி ஏலேலோ ஏலயெலோ
எங்கட கடல்ல மீன்பிடிக்க ஏலேலோ ஏலயெலோ
நாங்கள் கூடிப் போறோம் போறோம் ஏலேலோ ஏலயெலோ

ஒரு கட்டை தூரத்தில ஏலேலோ ஏலயெலோ
இந்தியாக்காறன் கடல்ல நிக்கிறான் நிக்கிறான் ஏலேலோ ஏலயெலோ
றோலர் படகு ஆயிரமாயிரம் ஏலேலோ ஏலயெலோ
குஞ்சுமுட்டை மீனுகளெல்லாம் ஏலேலோ ஏலயெலோ
அள்ளிக் கொண்டு போகுது போகுது ஏலேலோ ஏலயெலோ
கரைவலை விரிச்சு ஏலேலோ ஏலயெலோ
கண்ணுக்கு முன்னுக்கு ஏலேலோ ஏலயெலோ
பாத்துக் காத்து நாங்களிருக்க ஏலேலோ ஏலயெலோ
வலையறுத்து நாசப்படுத்தி ஏலேலோ ஏலயெலோ
மறைஞ்சு போறான் ஏலேலோ ஏலயெலோ

கடற்படை அவங்களைத் துரத்திப் பிடிக்க ஏலேலோ ஏலயெலோ
சிங்களவர் தமிழரை அழிக்கினம் எண்டு ஏலேலோ ஏலயெலோ
தொப்பள்கொடி உறவுமெண்டு ஏலேலோ ஏலயெலோ
துள்ளித் துள்ளிக் குதிக்கிது தமிழ்நாடு ஏலேலோ ஏலயெலோ
அள்ளி வைச்ச இந்தியாக்காறன் ஏலேலோ ஏலயெலோ
கொள்ளி வைக்க வாறான் வாறான் ஏலேலோ ஏலயெலோ

எங்கடை கடல்லை ஏலேலோ ஏலயெலோ
எங்கடை கடல்லை ஏலேலோ ஏலயெலோ
வாழவிடு வாழவிடு ஏலேலோ ஏலயெலோ
இந்திய ரோலர் முதலாளி ஏலேலோ ஏலயெலோ
இஞ்சை எதுக்கு வாறான் வாறான் ஏலேலோ ஏலயெலோ
கஷ்டப்பட்ட மீனவத் தொழிலாளரை ஏலேலோ ஏலயெலோ
ஏவிவிட்டு பலியாக்கிறான் ஏலேலோ ஏலயெலோ

நாட்டுக்கு நாடு சட்டமிருக்கு ஏலேலோ ஏலயெலோ
கேட்டுப்படியுங்கோ இந்திய அரசே ஏலேலோ ஏலயெலோ
தமிழ்நாட்டின் தமிழர் அரசே ஏலேலோ ஏலயெலோ
மோடியும் ஸ்ராலினும் கள்ளக்கூட்டு ஏலேலோ ஏலயெலோ
போராடி மடிந்த மண்ணில் ஏலேலோ ஏலயெலோ
வாடிய தமிழரை வதைக்காதே ஏலேலோ ஏலயெலோ
பெரிய அண்ணனாய் பேய்க்காட்டாதே ஏலேலோ ஏலயெலோ
தேடிய சொத்தை அழிக்காதே ஏலேலோ ஏலயெலோ

ஏழைகள் அழுதகண்ணீர் ஏலேலோ ஏலயெலோ
கூரிய வாளாய் வளரும் வளரும் ஏலேலோ ஏலயெலோ
அக்கினிக் குஞ்சுகளாய் விரிவோம் பறப்போம் ஏலேலோ ஏலயெலோ
காட்டுத் தீயாய் கடமை முடிப்போம் ஏலேலோ ஏலயெலோ
பாட்டுப் பாடி ஆடி ஆடி ஏலேலோ ஏலயெலோ
கூட்டாய் வாழ்வோம் குவலயம் மகிழ ஏலேலோ ஏலயெலோ
மீனவர் நாங்கள் மீனவர் நாங்கள் ஏலேலோ ஏலயெலோ
மீண்டும் மீண்டும் மீண்டும் துளிர்ப்போம் ஏலேலோ ஏலயெலோ



- சோ. தேவராஜா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறுசாதி

**திக்குவல்லை கமால்**

பொட்டணி வியாபாரிகள் என்று சிலர் நமது கிராமத்திலே வாழ்ந்து வந்தார்கள். பெரும்பாலும் நடுத்தர வயதுடைய குடும்பத்தவர்கள். தலையிலோ கழுத்திலோ பெரும்பொதியும் கையிலே முழக்கோலுமாய் அவர்களைக் காணலாம். காலையில் வெளிப்பட்டு மாலையாகும்போது வந்து சேர்ந்து விடுவார்கள்.

அவர்களது வியாபாரப் பிரதேசம் எங்களது ஊரைச் சுற்றியுள்ள சிங்கள மக்கள் வாழும் பகுதிகள் தான். பெரும்பாலும் பெண்கள் சார்ந்த உடுபிடவைகள் தான் வியாபாரப் பொருட்களாக இருக்கும்.சிறிய மண் பாதைகள், ஒற்றையடிப்பாதைகளுக்கூடாக வீடுகளுக்கேறி வியாபாரம் செய்வார்கள்.இடையில் யாரும் தட்டிப் பறித்துவிட மாட்டார்களா? என்று யாரும் கேட்கத் தேவையில்லாத காலம் அது.

நீண்டகால சகவாழ்வு, சகவாசம் காரணமாக பரஸ்பரம் சிநேகபூர்வமாகவே வாழ்ந்து வந்தனர். சுற்று வட்டாரத்தில் வாழும் அவர்கள் கடைகள், தபாற் கந்தோர், வைத்தியசாலை முதலான தேவைகளுக்காக பிரதான வீதிக்கு வந்தாகவேண்டும்.பஸ் பயணங்களுக்கும் அங்குதான் வரவேண்டும். திக்குவல்லை - பெலியத்தை பிரதான வீதியின் இருபக்கமாகவும் முஸ்லிம் மக்களின் வீடுகளே காணப்படுகின்றன. இதனால் ஒருவருக்கொருவர் குறைந்தபட்சம் முகப் பழக்கமாவது இருக்கும்.

பொட்டணி வியாபாரத்தை அப்படி ஒன்றும் நாம் இலேசாக நினைத்துவிட முடியாது.கண்ணியமாக வியாபாரம் செய்து காணி வாங்கி ,வீடு கட்டி , பிள்ளைகளுக்கு கல்வி புகட்டி, திருமணம் செய்துகொடுத்து வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். ஏன் சிலபேர் சவூதி அரேபியா சென்று ஹஜ் கடமையையும் நிறைவேற்றி இருக்கிறார்களென்றால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இப்படிப்பட்ட வியாபாரி ஒருவர் எதிர்பாரத விதமாக நோய்வாய்ப்படுகிறார்.இதனால் தொழிலைச் செய்துகொள்ள இயலாத இக்கட்டான நிலை.

இரண்டு வாரத்துக்கு ஒருமுறையாவது பிடவை திணிசுகளோடு வரும் "முதலாளி" இரண்டு மாதங்களாகியும் வரவில்லையே என்று அவர்கள் யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள்போலும். அதன் விளைவாக ஒருசில சிங்களச் சகோதரர்கள் வீடு தேடிவந்து நிலைமையை அறிகிறார்கள். அவர்கள் மூலம் இந்தத் தகவல் பொட்டணி வியாபாரிக்குப் பரிச்சயமான பகுதிகளில் பரவியதெனலாம்.

அதைத்தொடர்ந்து, நோய் விசாரிக்க ஒவ்வொரு நாளும் இரண்டொருவர் வர ஆரம்பித்தனர். சிலநேரம் பெண்களும் வந்தார்கள். சும்மா கைவீசிவீசி வருவார்களா என்ன! ஒரு பலாக்காயோ, இரண்டு தேங்காய்களோ, மரவெள்ளி வற்றாளைக் கிழங்கு வகையோ, பழவகைகளோ கொண்டு வந்தார்கள். அது அவர்களுக்கு செலவு போகும் காரிய மல்லவே. எல்லாம் வீட்டுத்தோட்ட உற்பத்திகள் தான்.

அவரது வாடிக்கையாளர்களான பெண்மணிகளுக்கு சில துணிமணிகள் பிடித்துவிடும். ஆனால் கையில் காசிருக்காது. கிடைக்கும் போது தாருங்கள்"-என்று சொல்லி விட்டு வந்து விடுவார். ஆனால் தப்பாமல் கிடைக்குமென்பது அவருக்கு நிச்சயம். அப்படிப்பட்ட கடனாளிகளும் வந்து நோய் விசாரித்து விட்டு, கடனையும் கொடுத்துச் செல்லலாயினர்.

தனது கணவர் சிங்கள ஊர்களுக்கு வியாபாரத்துக்குப் போவதாகத்தான் அவர் மனைவி எண்ணியிருந்தாள். கணவன் நொய்வாய்ப்பட்ட பின்புதான் அவர் உலாவும் பகுதிகளில் எவ்வளவோ பேரைச் சம்பாதித்து வைத்துள்ளதை தெரிந்துகொண்டாள்.

கணவனுக்கு வசதி வாய்ப்புள்ள உறவினர்கள் இருந்தும் இந்த இக்கட்டான கட்டத்தில் சந்தோசப் படக்கூடிய வகையில் உதவிசெய்யவில்லையே என்ற கவலையை, இந்த மாற்றுத் தரப்பினர் இடைநிரப்புகிறார்களே என்ற பெருமிதம் இப்படிப் பேரிடியாக மாறுமென மனைவி சற்றுமே நினைத்தாளில்லை.

சிலரால் சில விடயங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாதுதான். கட்டுக் கதைகளை விரித்தார்கள். "அந்த மனிதன் நோயாளி என்பது உண்மைதான். அவளது நடத்தையும் சரியில்லைபோல் தெரிகிறது." என்று கதை கசிய ஆரம்பித்துவிட்டது.

இந்த வேளையில்தான் "மாறுசாதி" கதை பிறந்தது.

****

இச்சிறுகதை...

* "மல்லிகை" - செப்டம்பர் : 1972ல் வெளி வந்தது.

*இலங்கையில் 1979 ல் நடைபெற்ற இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டை முன்னிட்டு அ.ஸ.அப்துஸ்ஸமது தொகுத்த "பிறைப் பூக்கள்" தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

* " மல்லிகைப் பந்தல் " வெளியீடான எனது ," விடை பிழைத்த கணக்கு "(1996) தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

*ஸ்ரீ.ஜீ.சரத் ஆனந்தவினால் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, அவரது "அலுத்அவிய/ புதிய ஆயுதம்"(2014) தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

* மொஹமட் ராஸூக்கினால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு , தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு வெளியிட்ட(2014) "காலீன தெமல கெடிகதா" சமகால தமிழ் சிறுகதைகள்" தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவானி சற்குணசெல்வம்
நெதர்லாந்து

# "தீதும் நன்றும்" சிறுகதைத்தொகுப்பு

## எழுதியவர்: விமல் பரம்

## திறனாய்வு

மனித வாழ்வின் ஒரு கூற்றை, யாரேனும் ஒருவரின் பண்பை அல்லது செயலை, ஏதேனும் ஒன்றன் இயக்கத்தை அல்லது செயற்பாட்டை எங்கோ ஒரு மூலையில் மறைந்து கிடக்கும் ஓர் இரகசியத்தைக் கலைச்சுவை சிறிதும் குன்றா வண்ணம் வெளிப் படுத்துவதே சிறுகதையின் நோக்கம் எனலாம்.

இந்தச்சிறுகதைத் தொகுப்பின் சிறப்பம்சம் என்னவெனில் இதில் இடம்பெற்ற பல கதைகள் மனிதவாழ்வில் நம்பிக்கை ஒளி ஏற்றுவனவாக அமைந் துள்ளன.

கதாபாத்திரங்கள் வாழ்க்கை எனும் பாதையில் செல்லும் வழியில் எதிர்ப்படும் தடைகளான பூட்டிய கதவு, எழும்பி நிற்கும் சுவர், தடுக்கி விட காத்திருக்கும் கல், திறந்திருக்கும் சாளரத்தையும் சாத்திவிடும் உள் நுழையும் பெருங்காற்று, இன்னும் இன்னும் இது போன்ற எத்தனையோ தடைகளை, அவற்றின் தன்மைக்கு ஏற்ப, இலகுவாக அல்லது தன் முழு வலிமையினால் திறந்தோ, உடைத்தோ, நகர்த்தியோ, தள்ளியோ, சுற்றிக்கொண்டோ, ஏறிநின்றோ கடந்து செல்வதாக பல கதைகள் முடிவு பெறுகின்றன.

அடுத்தது, இக்கதைகளின் ஓட்டம் எந்த இடத்திலும் தங்கு தடையின்றி போகிறது. இக்கதைகள் முறையாக எடுத்துத் தொடுத்து முடிக்கப்பட்டுள்ளன. அதற்குப் பக்கபலமாக அவருடைய எளிய சொல்லாடல் கள் வசன அமைப்புகள் அமைந்தமை சிறப்பு; வாசகன் எந்தச் சிரமமும் இன்றி கதாசிரியர் சொல்ல வந்ததைக் கிரகித்துக்கொள்ள முடிகிறது.

இந்தத் தொகுப்பில் இடம்பெற்ற பல கதைகள் "நம்பிக்கைதான் வாழ்க்கை" என்பதை வலியுறுத்தி நிற்கின்றன. இந்த நம்பிக்கை வாழ்வில் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் மற்றும் துயரங்களை கடந்து செல்ல உதவுவதுடன் எதிர்காலத்தில் நல்லது நடக்கும் என்ற எதிர்பார்ப்பையும், வாழ்க்கையை முன்னேற்றிச் செல்ல தேவையான நம்பிக்கையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

இந்த நம்பிக்கை, ஒரு நபரை செயலில் இறங்கவும், சவால்களை எதிர்கொள்ளவும், இறுதியில் வெற்றியை அடையவும் தூண்டுகிறது. இது ஒரு சக்தி வாய்ந்த உந்துதல் சக்தியாக இங்கு வெளிப்படுகிறது.




இவரின் அநேகமான கதைகளில் "காசேதான் இன்றைய உலகில் கடவுள்" என்ற கருத்து நேரடியாகவும் மறைமுகமாகவும் புலனாகிறது.

பொருள் வசதி இல்லாதபோது உறவினர்கள் உங்களைப் புறக்கணிக்கலாம் அல்லது அவமதிக்கலாம். கையில் பணம் இல்லாவிட்டால், பிள்ளைகள் அல்லது மற்றவர்கள் உங்களிடம் மரியாதை காட்ட மாட்டார்கள் என்றும், பணம் இருக்கும் வரை மட்டுமே உங்களுக்கு மதிப்பு இருக்கும் என்பதை இவர் பல இடங்களில் சொல்லாமல் சொல்லுகிறார்.

இவரின் கதைகளை வாசிக்கும்போது பணத்தை வைத்து தான் உறவுகள் தொடர்கிறது என்றால் அப்படிப்பட்ட உறவுகள் வாழ்வில் இருக்கத் தான் வேண்டுமா? அவைகள் இன்றி வாழ்வை இறுதி வரை கடக்க முடியாதா? போன்ற கேள்விகள் மனதில் எழத்தான் செய்கின்றன. இதுதான் நமது சமுதாயத்தின் இன்றையநிலை. இந்தக்கதைகள் எமது சமூகத்தின் கண்ணாடியாக இருந்த போதும் இதை வாசிக்கும் போது ஒருவகையான அச்சம் மனதில் எழச்செய்கிறது. இப்படியே போனால் எமது சமூகத்தில் மனிதநேயமே அற்றுப்போய்விடுமா என்று முதலில் வரும் கதைகளை வாசிக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத் தோன்றியது, ஆனால் பின்னால் வரும் கதைகளில் வரும் சில கதாபாத்திரங்கள் அந்த எண்ணங் களைச் சீர்செய்தன.

பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல் என்றுகூறுவார்கள். எமது சமூகத்தில் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பெற்றெடுத்தப் பிறகு, அவர் களது மனம் பாசத்தில் மூழ்கி, ஒருவித வெறித்தனமான அன்புடன் அவர்களை கவனித்துக்கொள்வார்கள். இதனால் அவர்கள் பிள்ளைகளின் தவறான செயல் களைக்கூட பொறுத்துக்கொள்ளும் மனப்பான்மை கொண்டிருப்பார்கள்.

ஆனால், பிள்ளைகள் தங்கள் மனம் கல்லின் கடினத்தன்மையைப் போல, உணர்ச்சியற்றதன்மை கொண்டோ அல்லது பெற்றோரின் தியாகத்தை உணர்ந்து கொள்ளாமலோ இருப்பார்கள். அவர்கள் பெற்றோரின் பாசத்தை ஒரு பொருட்டாகக் கருத மாட்டார்கள்.

இங்கேயுள்ள "தீதும் நன்றும்" என்ற கதையில், ஒரு தாய். இவள் தன் ஒரேயொரு மகனைப் பார்த்துப் பார்த்து பொத்திப் பொத்தி வளர்த்திருக்கிறாள். அவனுக்குத் தேவையானவற்றையெல்லாம் கொடுக் கிறாள். நல்ல பெண்ணாகப் பார்த்து ஊர் மெச்சும்படி திருமணம் செய்து வைக்கிறாள். மகனும் மருமகளும் சௌகரியமாக இருப்பதற்கு வீட்டில் வசதிசெய்து கொடுக்கப்படுகிறது. ஆனால் திருமணம் முடிந்து சில காலங்களில் அவர்கள் வெளிநாடு செல்ல முடிவெடுத்த போது தாய் உடைந்து போகிறாள்.

"விதியோடும் மதியோடும்" என்ற இன்னு மொரு கதையில் எவ்வளவோ கஷ்டப்பட்டு வளர்த்த மகன் வெளிநாடு சென்றபின் தாயுடன் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருக்கிறான். பல ஆண்டுகளின் பின் சொத்துக்காக தாயைப் பார்க்க வருகிறான். கதையின் முடிவில் வரும் தாயின் ஏக்கம் வாசகரை நிலைகுலைய வைக்கிறது.

"தூறல்கள் மழையாகலாம்" என்ற கதை தன் மகனையும் குழந்தையையும் இழந்த மருமகளின் மறுமணத்தில் அக்கறை கொள்ளும் மாமியை மிக அழகாகச் சித்தரித்து நிற்கிறது.

இளம் விதவைகளின் மறுமணம் அவசியம் என்பதற்குப் பல சமூக, நீதி மற்றும் வாழ்வாதாரக் காரணங்கள் உள்ளன. இது அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதோடு, சமூகத்தின் பாரபட்சமான பழக்க வழக்கங்களை எதிர்த்து நிற்கவும் உதவுகிறது. பண்டைய காலங்களில் விதவைகளுக்கு மறுமணம் தடை செய்யப் பட்டிருந்தாலும், தற்காலத்தில் இது அங்கீகரிக்கப் பட்டுள்ளதுடன், பல சமூகங்கள் இதைப் பலப்படுத்து கின்றன.

விதவைகள் மறுமணம் செய்ய தடை விதிப்பது பாரபட்சமானது. ஆண்கள் மறுமணம் செய்ய அனுமதிக்கும் போது, பெண்கள் மறுமணம் செய்ய தடைசெய்வது சமத்துவமானதல்ல. அத்துடன் ஆணின் தவிப்பு அடங்கிவிடுவது, பெண்ணின் தவிப்பு தொடர்ந்து விடுவது.

விதவைகள் மறுமணம் செய்யாமல் இருப்பது அவர்கள் துன்பத்தில் வாழவும், சமூகச் சீர்கேடுகளால் மாயவும் காரணமாகிறது. மறுமணம் அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்கிறது.

திருமணமான ஒரு பெண் தன் இணையை இழக்கும் போது, வாழ்வதற்கும், மகிழ்ச்சியாக இருப்ப தற்கும், மறுமணம் செய்வதற்கும் அவளுக்கு முழு உரிமை உண்டு.

இளம் விதவைகள் மறுமணம் என்பது தனிப் பட்டவர்களின் வாழ்வையும், சமூகத்தின் முன்னேற்றத் தையும் மேம்படுத்தும் ஒரு முக்கியமான அம்சமாகும். இந்தக் கதையில் வரும் மாமியார் பாத்திரம் மறுமணம் பற்றி மிகவும் முற்போக்குச் சிந்தனையுடன் அமைந் திருப்பது சிறப்பு.

இந்தச் சிறுகதைத்தொகுப்பின் கதாசிரியர் கதாபாத்திரங்களின் உணர்வுகளை விபரிப்பதை விட கதைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்பது எனது கருத்து. சிறுகதைகளில் உணர்வுகள் கதையின் மையக் கருவாக அமையும் தனிமனித உணர்ச்சிப் போராட்டங்கள், உளவியல் சிக்கல்கள், சமூகக் கட்டுப் பாடுகள், மற்றும் எதிர்பாராத சூழ்நிலைகளின் மூலம் வெளிப்படும் மனநிலைகளாகும். ஒரு சிறுகதை, வாசகர் கள் கதையின் கதாபாத்திரங்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளவும், தங்கள் சொந்த அனுபவங்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்கவும் உதவுகிறது.

உணர்வுகள் கதையின் பாத்திரங்களுடன் வாசகர்களை ஒன்றிணைக்கின்றன, கதையைப் படிக்கும் போது வாசகர்கள் அந்தக் கதாபாத்திரங்களின் நிலையில் இருந்து உணர்வுகளை உணர உதவுகிறது.

வெறும் நிகழ்வுகளை மட்டும் விவரிப்பதற்குப் பதிலாக, கதாபாத்திரங்களின் உணர்வுகளின் மூலம் கதையின் கருத்தை ஆழமாகவும், அழுத்தமாகவும் வாசகர்களுக்குக் கொண்டு சேர்க்க உதவுகிறது.

சிறுகதையில் காட்சிகள், படிமங்கள், உவமைகள் மிகவும் அவசியமானவை, ஏனெனில் அவை கதையின் உள்ளடக்கத்தை வாசகரின் மனதில் ஆழமாகப் பதியச் செய்ய உதவுகின்றன. படிமங்கள், சொற்களின் வெளிப்படையான பொருளைத் தாண்டி, வாசகரின் கற்பனைக்குச் சவால் விட்டு, பல அர்த்தங்களை உருவாக்கவும், கதையின் உணர்ச்சிபூர்வமான தாக்கத்தை அதிகரிக்கவும் துணைபுரிகின்றன என்பது எனது கருத்து. நான் சுருக்கமாகக் கூறவருவது என்னவென்றால்: கதாசிரியர் காய்ச்சிய கூழ் சுவையாகத்தான் உள்ளது. இன்னும் சிறிதளவு உப்புச் சேர்த்தால் இன்னும் நல்ல சுவையாக இருக்கும் என்பதைத்தான்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் இக்கதை களில் கதாசிரியர் எடுத்துக்கொண்ட நோக்கங்களை சரியான பாத்திரங்களின் உதவியுடன் நகர்த்தி கதை களைச் செம்மையாகப் புனைந்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். இக்கதைகள் எமது சமூகத்தின் கிழிசல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றன. பல கதைகள் நேர்மறைச் சிந்தனைகளை வாசகர்கள் மனதில் விதைப்பதில் வெற்றிபெற்றுள்ளன. இவர் இன்னும் பல அருமையான படைப்புகளை தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்து உச்சம் பெறவேண்டும் எனக் கூறி கதாசிரியருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஜ்மா நகருக்கு...

- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் -



நேற்று வந்த பயணம். பல இடங்களையும் சுற்றிப் பார்த்துக்கொண்டு பொலனறுவையில் அமைந்திருக்கும் நீர்கொழும்பு அக்ரம் ஹாஜியாரின் பங்களாவில் இரவில் தங்கினோம்.

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் பற்றிய விவாதம் சூடு பறந்து கொண்டிருந்தது. மச்சானும் நானாவும் அணி பிரிந்து விவாதிக்க நாங்கள் பார்வையாளராக இருந்து கைதட்டி ரசித்துக் கொண்டிருந்தோம். சிறுசுகள் பின் ஆசனத்தில் தம்மை மறந்து விளையாடிக் கொண்டிருந்தனர். தெரிந்த ஒருவரின் ஏற்பாட்டில் புனானி ஹிஸ்புல்லாஹ் பல்கலைக் கழகத்தைப் பார்வையிட்டுவிட்டு வந்து கொண்டிருந்த எமது வேன் பிரதான வீதியிலிருந்து திரும்பி மஜ்மா நகருக்குள் பிரவேசித்தது. எமது அடுத்த வேன் பின் தொடர்ந்து கொண்டிருந்தது. ரோட்டோடு சேர்ந்தாற் போல் போடப்பட்டிருந்த பெயர்ப்பலகை செல்ல வேண்டிய பாதையை இலகுவாக இனம் காட்டியது. உள்ளே சிறிது தூரம் வந்ததும் எல்லா வாய்களும் அடங்கிப் போய்விட்டன.

நாட்டின் சில பகுதிகளில் கடந்த பல நாட்களாகப் பரவலாக மழை பெய்தும், இந்தப் பகுதியில் அதற்கான அறிகுறிகள் எதுவும் காணப்பட வில்லை. சுள்ளென எரித்தது வெயில்.

காலைவேளை விடைபெற்று பகல் நெருங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்திலேயே கார், வேன் என நிரம்பிக் காணப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை பேருவளை முதலிய வெளியிடங்களைச் சேர்ந்தவையே. தெரிந்தவர்கள் பலரும் வந்திருந்தார்கள்.

புதிதாகக் கட்டப்பட்ட மஸ்ஜிதின் திறப்பு விழா அஸருக்குப் பிறகு இடம்பெற ஏற்பாடாகி உள்ளது. இங்கு வருவோர் போவோரின் பாவனைக்காக குறைந்த வசதிகளுடன் காணப்பட்ட சிறிய தொழுகையறைதான் இவ்வாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. உண்மையிலேயே, முன்பிருந்த கொட்டில் இங்கு வருவோரின் தேவைக்கும் எண்ணிக்கைக்குமேற்ப அமைந்திருக்க வில்லை. கொரோனா நோயாளிகளென முத்திரை குத்தப்பட்ட மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் ஜனாஸாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள மைய வாடியின் நேரெதிரே கம்பிரமாகக் காட்சியளிக்கிறது மஸ்ஜித்.

நாங்கள் வந்த வேன்களை வாகன நெருக்கடிக்கு மத்தியில் மையவாடிவரை ஓட்டி வர முடியவில்லை. கொஞ்சம் தூரத்தில் நிறுத்திவிட்டு நடந்து வர வேண்டியிருந்தது.

நான் இங்கு வந்த இரண்டாவது தடவை இது. ஒரு வருடத்திற்கு முன்னரும் இங்கு வந்திருக்கிறேன். இன்றைய நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டுமென நீண்ட நாட்களாகவே ஆசை வைத்திருந்தேன். பென்சன் காரர்களாகிய பாருக் மாஸ்டர், கமால் மாஸ்டர் ஆகியோருடன் ரயில்வே வரண்டில் வரவே திட்டம் போட்டிருந்தேன். ஆயினும், மனைவி பிள்ளைகளோடு பேரப் பிள்ளைகளும் விடாப்பிடியாக நின்றதால் திட்டத்தை மாற்றி அவர்களை அழைத்து வரவேண்டி வந்தது. சமூக ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருந்த மஸ்ஜித் திறப்பு வைபவம் தொடர்பான செய்திகள் அவர்களையும் வரத் தூண்டிவிட்டதெனலாம்.

காத்தான்குடி நூதனசாலை, அக்ஸா பள்ளி வாசல், பாசிக்குடா கடற்கரை என்பவற்றைப் பார்வையிட வெளி மாகாணங்களிலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள், இப்போதெல்லாம் மஜ்மாநகர் கொரோனா மையவாடியையும் தரிசிக்கத் தவறுவதில்லை. கடந்த அரசாங்கக் காலத்தில் கொரோனாவின் பெயரால் சமூகத்துக்கு இழைக்கப் பட்ட அடாச்சினைகள் அப்படியொரு உணர்வை மனங்களில் ஏற்படுத்திவிட்டது. அதே உணர்வுதான் எங்களுக்கும்.

வுளூ செய்துகொண்டு மஸ்ஜிதினுள் நுழைந்து தஹிய்யதுல் மஸ்ஜித் இரண்டு ரக்அத் தொழுதுவிட்டு, மையவாடிக்குள் பிரவேசிப்பதற்காக காலடியெடுத்து வைத்தோம். நிரம்பி வழியும் சனக் கூட்டத்துக்கு மத்தியில் அவ்வளவு சுலபமாக முன்னே செல்ல முடிய வில்லை. கபுறுகளைச் சுற்றிவர குர்ஆன் ஓதல், துஆ பிரார்த்தனைகளில் ஆட்கள் ஒன்றிப் போயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு முன்னரும் எத்தனையோ ஜனாஸாக் களில் கலந்து கொண்டிருக்கிறேன், எத்தனையோ அடக்கஸ்தலங்களைத் தரிசித்திருக்கிறேன், வாப்பும்மா மௌத்தாகியபோது கபுறுக்குள் இறங்கியுமிருக்கிறேன், அப்போதெல்லாம் வராத இனம்புரியாத சோகவுணர்வு இன்று. மனம் அவசரப்படுத்துகிறது. நாடி வந்த மையத் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடம் அதிக தூரத்திலு மில்லை. ஓரளவு காடு மண்டிக் கிடந்ததனாலும், அதிக சனமென்பதனாலும் நம்பரைத் தேடிக்கொண்டு செல்வ தற்கு அரை மணித்தயாலத்துக்கும் மேலாகிவிட்டது.

கபுறுக்கு அருகில் வந்ததும் பதறியது நெஞ்சம். ஐம்பது வயதைக் கடந்த எனக்கே இந்த நிலை யென்றால், கூட வந்திருக்கும் இளையவர்களின் நிலை பற்றிச் சொல்லவும் வேண்டுமா? எவ்வளவு நேரம்தான் அப்படியே இருந்தோமோ தெரியவில்லை.

●●●

குடும்பத்தை வாழ வைப்பதற்காக வாப்பாவுடன் சேர்ந்து உம்மா பட்ட வலிகளை விளக்க ஒரு புத்தகமே எழுதிவிடலாம். வாப்பாவுக்கு ஒருநாள் தொழிலிருந் தால் பலநாள் இருக்காது. அக்கம்பக்கத்துப் பெண்கள் செய்து வந்த குடிசைக் கைத்தொழிலை உம்மாவும் தேர்ந்தெடுத்துக் கொண்டார். எங்கள் வீட்டுக்குப் பின்னால் சுமார் ஐம்பது மீற்றர் தூரத்தில் கவனிப் பாரின்றி வெறுமனே கிடந்த சதுப்பு நிலத்தில் உம்மா வின் மட்டைக்குழி அமைந்திருந்தது. தென்னை மட்டை களை அதில் ஊற வைத்துப் பதமாகிய பின்னர் வெளி யெடுத்து மட்டை தட்டித் தும்பாக்கி கயிறு முறுக்கி விற்பதே அந்தத் தொழில். மட்டைகளை ஊறப் போடுவது முதல் இடைக்கிடை போய்ப் பரிசீலிப்பது, வெளியெடுப்பது வரை வாப்பாவுடன் சேர்ந்து ஆண் பிள்ளைகளாகிய நாங்களும் ஒத்துழைப்போம். மட்டைக் குழியில் இறங்கக் கிடைத்தாலே அப்போ தெல்லாம் எமக்குத் தனி இன்பம். உம்மா படும் பாட்டைப் பார்த்து இடைக்கிடை மட்டை தட்டிக் கொடுத்ததுமுண்டு. "கயிற்று முடி"களை வாங்குவதற் கென சிங்கள வியாபாரிகள் வீடுகளுக்கே வருவதனால் உடனுக்குடன் விற்றுக் காசாக்கவும் முடிந்தது. அந்த வருமானத்தில் வீட்டின் உணவுத் தேவைகள் கணிச மானளவு பூர்த்தி செய்யப்பட்டன.

அடுத்தது கோழி வளர்ப்பு. கூடமைத்து வளர்க்கவோ மேயவிட்டு வளர்க்கவோ காணியென எதுவுமில்லை. சிறிய வீட்டின் ஒரு மூலை கோழிகளுக் காக ஒதுக்கப்பட்டிருந்தது. நாட்டு முட்டைகளை விற்றுக் கிடைக்கும் பணத்தைக்கொண்டு அரிசி வாங்கிச் சமாளித்த நாட்கள் ஏராளம்.

'நல்ல வேலயெலீன்... இது எங்கட குழீட மட்ட. இதென்தேன் எங்கட மட்டயேம் சேத்து எடுத்துகொண்டு...?" இப்படியாக அடுத்தடுத்த வீட்டுப் பெண்களுடன் மட்டைக் குழிச் சண்டைகளும் வரும். வீடுகளுக்குள் கோழிகள் நுழைவதனாலும், மரம் மட்டைகளை நாசம் செய்வதனாலும் ஏற்படும் மனக் கசப்பு வேறு. அனைத்தையும் சமாளித்து எதிர்நீச்சல் போட்டவர் உம்மா. நான் சாதாரண தரப் பரீட்சை எடுக்கும் காலத்திலும் இதே நிலைமைதான்.

குடும்ப வண்டி இப்படியாக ஓடிக் கொண்டி ருக்கையில் இருதய அடைப்பு வந்து நிகழ்ந்த வாப்பாவின் திடீர் மரணம் குடும்பத்தை அப்படியே உலுக்கிப் போட்டுவிட்டது. நெருங்கிய உறவினர் யாரும் எட்டியும் பார்க்காது புறக்கணித்து நடக்கவும் தொடங்கினர். "வசதியில்லாட்டி நான தம்பி ரெண்டு பேரேம் கடயொண்டுக்கு அனுப்பியதானே! கொமருகள வெளிநாட்டுக்குசரி புடிச்சனுப்பேலுமெலீன்" என இலவச ஆலோசனைகளை மாத்திரம் வழங்கத் தவற வில்லை. ஆயினும், "புள்ளகள படிப்பிச்சியத மட்டும் எந்த கஷ்டம் வந்தாலும் ஒருநாளும் உடப் போறில்ல...." என்பதில் உம்மா உறுதியாக இருந்தார். இன்று நானொரு பாடசாலை அதிபர் தாத்தா மத்திய கல்லூரி பிரதியதிபர் தங்கச்சி முஸ்லிம் சமய கலாசார திணைக்கள சட்ட உத்தியோகஸ்தர் தம்பி பொறியியலாளர். அனைத்துச் சவால்களையும் சமாளித்து உம்மா நடத்திய போராட்ட வாழ்வின் அறுவடையே அவை.

இந்த மூன்று வருட காலத்திற்குள்தான் நாட்டில் எத்தனை எத்தனை மாற்றங்கள்! சீனாவிலிருந்து பரவியதாக நம்பப்படும் கொரோனா நோய் இலங்கை யிலும் தலைகாட்டத் தொடங்கி பலரைப் பலியெடுக்க வும் செய்தது. மரண எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க இனவாதிகளின் வாய்களுக்கு அவல் கிடைத்தது போலாகிவிட்டது.

மற்றைய நாடுகளில் கொரோனாவில் மரணித்த வர்களை தத்தமது சமய ஆசாரப்படி எரிக்கவோ அடக்கம் செய்யவோ அனுமதிக்கப்பட்ட நிலையில், நாளடைவில் இலங்கையில் கட்டாயத் தகனம் வாஜிபாக்கப்பட்டது. கொரோனாவில் மரணித்தவர்கள் புதைக்கப்பட்டால் நீர்க்கசிவு ஏற்பட்டுக் கிருமிகள் நிலத் தடி நீருடன் கலக்குமென மருத்துவத்துறை சார்ந்த முக்கியஸ்தர் சிலரே வாதிட்டனர். அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகள் சிலரும் எரிக்க வேண்டுமென்பதில் விடாப்பிடியாக நின்றனர். அவ்வாறு நீர்க்கசிவு ஏற்படா தென உலக சுகாதார நிறுவனம் எடுத்துக் கூறியும் இவர்களது பிடிவாதம் தளரவில்லை. சமய, சமூக, அரசியல் தலைவர்கள் முதல் நடுநிலையான சகோதர சமூகத்தவர்கள் விடுத்த வேண்டுகோள்களும் காற்றில் பறக்க விடப்பட்டன. பதவியை அடைவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் ஈஸ்டர் தாக்குதல் போலவே, ஒரு சமூகத்தை நோகடித்து இனவெறியர் களைத் திருப்திப்படுத்தி பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டதே இந்தக் கட்டாய எரிப்புத் தீர்மானமென்பது முழு நாட்டுக்கும் புரிந்தது. ஆயினும், ஒருசாராரைத் திருப்திப் படுத்து வதற்காக கொவிட்டை காரணம் காட்டி கச்சிதமாக இவர்கள் காய் நகர்த்தினர். இது தொடர்பாக சமூக ஊடகங்களில் சிலர் எதிர்ப்பைக் காட்டினாலும் பகிரங்க மாக கருத்துத் தெரிவிக்கப் பயந்தனர்.

"பீசீஆர் நெகடிவ் எண்டாதான் பொடி கெடச்சிய. இல்லாட்டி பத்தேச்சியதான்" - அரசாங் கத்தின் பிடிவாதம் முழு நாட்டையும் பயமுறுத்திக் கொண்டிருந்தது. இறந்தவர்களைப் புதைக்கும் சமயக் கோட்பாட்டை தம் உயிராகப் போற்றும் முஸ்லிம் சமூகமே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

நாளுக்கு நாள் சட்டங்கள் இறுக்கமாக்கப் பட்டதோடு, சில தொலைக்காட்சி சனல்களும் சம்பவங்களைப் பெரிதாக்கி முஸ்லிம்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தின. வீடுகளில் மரணிக்கும் சாதாரண நபர்களது உடல்களும் வைத்தியசாலைக்குக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பட்டு பீசீஆர் பரிசோதனையின் பின்னர் நெகடிவ்வாக இருந்தால் மட்டுமே அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

இந்தக் கெடுபிடிகளுக்குப் பயந்து சில ஊர்களில் இரகசியமாக மையத்துகள் அடக்கப்பட்டது வேறு கதை. அநீதிக்குத் தலை சாய்க்க வேண்டிய தில்லையே! ஆபத்துக்குப் பாவமில்லையே! மரண அத்தாட்சிப் பத்திரம் பெற முடியாமல் போய்விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக வலியப் போய் மாட்டிக் கொண்டவர்களும் இருக்கிறார்கள்.

இப்படியாக முந்நூறுக்கு மேற்பட்ட முஸ்லிம் ஜனாஸாக்கள் கட்டாய தகனத்திற்கு உட்படுத்தப் பட்டன. ஒரு மாதம்கூடப் பூர்த்தியாகாத பச்சிளம் குழந்தை பலியாக்கப்பட்டது அதன் உச்சக் கட்டம். " எரித்தாலும் பரவாயில்லை, சாம்பலையாவது தாருங் கள்" என பொறுப்பு வாய்ந்த சமய நிறுவனமொன்றின் தலைவர் விடுத்த வேண்டுகோள் சமூகத்தில் வெகுவாக விமர்சிக்கப்பட்டது. தாம் நல்ல பிள்ளைப் பெயர் வாங்குவதற்காக வீடுகளில் நிகழ்ந்த மரணங்களைப் போட்டுக் கொடுத்தவர்களும் இருக்கிறார்கள். மனிதாபி மான உணர்வுடன் செயற்பட்டவர்களோடு, அரசாங் கத்தின் போக்குக்கு ஏற்றாற்போல் சேர்ந்து விளையாடிய பீஎச்ஐமார் சிலரும் இருந்தனர். வேறு வழியின்றி பல்லாயிரக்கணக்கில் காசு பொத்தி மையத்துகளை விடுவித்துக் கொண்டோரும் இருக்கிறார்கள். தனிப் பட்ட கோபாதாபங்களுக்காகக் காட்டிக் கொடுத்தவர் களுடன் வேண்டுமென்றே பொஸிடிவ் ஆக்கப்பட்டவர் களும் இருந்ததாகக் கதைகள் அடிபட்டன.

இந்திய பாகிஸ்தான் அணிகளுக்கு இடை யிலான இருபதுக்கு இருபது ஆட்டம் போல் நாட்டில் கொரோனா தன் ஆட்டத்தை விறுவிறுப்பாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. நீர்கொழும்பு பலகத் துறையில் தொடங்கிய ஜனாஸா எரிப்பும் நீண்டு கொண்டிருந்தது. எப்படியும் நாளொன்றுக்கு இரண்டு மூன்று முஸ்லிம்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.

இந்தக் களேபரத்தில் உம்மாவைப் பற்றியே அதிகமாக நாங்கள் பயப்பட்டோம். காரணம் அவருக்கு வயது எழுபத்து மூன்று வருடங்கள். சாதாரண காய்ச்சல் ஏற்பட்டால் கூட கொரோனா தொற்றென யாராவது தகவல் கொடுத்து விடுவார்களோ என்ற அச்சம். இருந்தும் அவர் சாதாரணமாகத்தான் இருந்தார். ஸ்பெஷல் டாக்டர் தரும் பிரஷர், கொலஸ்ட்ரோல் மாத்திரைகளோடு சரி. வெளியிடங்களுக்குச் செல்வதை இயன்றளவு தவிர்த்து வீட்டிலேயே வைத்திருந்தோம்.

நாட்கள் இவ்வாறு நகர்ந்து கொண்டிருக்கை யில் உம்மாவின் உடல் நிலையில் திடீரென ஒரு தொய்வு ஏற்பட்டது. எல்லோரும் பதறிப் போனோம். மருத்துவப் பரிசோதனை இதயத் துடிப்பு குறைந்திருப் பதைக் காட்டியது. மூச்செடுப்பதும் கஷ்டமாக இருந்தது.

ஒருவாரமாக ஊரும் லொக்டவுனுக்குள் தனிமைப்படுத்தப்பட்டிருந்ததனால் வழமையாகச் செல்லும் டெல்மன் டாக்டரிடம் அழைத்துச் செல்ல முடியவில்லை. சிகிச்சையின்றி வீட்டில் வைத்திருப்ப தும் ஆபத்தானது. தனியார் ஆஸ்பத்திரிகளில் பாரமெடுப்பதுமில்லை. நீண்ட மசூறாவின் பின்னர் பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முடிவெடுத்தோம்.

"துவேஷத்தில நெகடிவ்வேம் பொஸிடிவ் வாக்கியாம்"

"சும்ம ஒரு நசலும் இல்லாம போனாள்களே கொரோனால மௌத்தாம். பாத்து கேட்டு செய்ங்கோ"

"பைத்தியமோ வௌாடிய? பத்தேச்சியது கெண்டே பாத்துகொண்டிருச்சிய அவனுக"

"இரும்பு மாதிரி நிண்ட ஆத்தோரத்து பாஸி நானக்கு நடந்தது, மகன்ட கண் முன்னுக்கே பச்ச பச்சயா பதறப் பதற சுட்டெனா..."

அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் சொன்னவை எல்லாமே உண்மைதான். வட்ஸ்அப் குழுமங்களில் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளும் இதனை உறுதிப்படுத்தின. பிரதேசத்திலேயே எத்தனையோ நடைமுறை உதாரணங்கள். ஆயினும் மாற்றுவழி இருப்ப தாகத் தெரியவில்லை. 1990 க்கு அழைப்பெடுத்து சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவையுடன் தொடர்பு கொண்டு அரை மனதுடன் உம்மாவை அட்மிட் பண்ணினோம்.

இதே காலப் பகுதியில்தான் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இலங்கைக்குத் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டதும். முஸ்லிம் சமூகத்தின் உள்ளக் கிடக்கை பற்றியே அரசாங்கத்துடன் பேச வருகிறா ரெனப் பரவலாகக் கதை அடிபட்டது. அவரது வருகை யின் பிரதிபலனோ என்னவோ, கொரோனாவில் மரணிப்போரை அடக்கம் செய்ய அனுமதிப்பதாக அரசாங்கம் கொஞ்சம் இறங்கி வந்தது. மக்கள் நடமாட்டம் இல்லாத இடமொன்றை அதற்காகத் தெரிவு செய்ய வேண்டியுள்ளதாகவும் கூறப்பட்டது. மாலைதீவு, மன்னார்ப் பகுதியில் ஓரிடம் எனத் தொடங்கி இறுதியில் ஓட்டமாவடி என முடிவாகியது. பரோபகாரி ஒருவர் அதற்காகக் காணி வழங்குவதற்கு முன்வரவே மஜ்மா நகரெனத் தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலைக்கு மத்தியில், பாணந்துறையி லிருந்து கொழும்பு ஐ.டீ.எச். (தொற்று நோய் வைத்திய சாலை)சுக்கு மாற்றப்பட்ட உம்மா ஒரு வாரத்தில் மௌத்தாகிவிட்டார். கட்டாயத் தகனம் நடைமுறையி லிருந்த காலத்தில் மௌத்தாகாதது அல்லாஹ்வின் நாட்டம் போலும்.

உம்மாவுக்கு கொரோனா தொற்றியதோ இல்லையோ அது படைத்தவனுக்கே வெளிச்சம். ஆனால், ஆட்சியாளர்களைப் பீடித்திருந்த சிறுபான்மை யினர் மீதான கொரோனாவே மஜ்மா நகரில் உம்மா அடக்கப்பட அடிப்படைக் காரணம் என மனதுக்குள் கூறி சமாதானம் செய்து கொண்டோம்.

ஊரும் தொடர்ந்து லொக்டவுனில். மரணித்து அரை மணித்தயாலம் ஆக முன்னரே சுகாதாரப் பகுதியினர் வந்து வீட்டைச் சீல் பண்ணி விட்டார்கள். வீட்டுச் சுற்றுப் புறங்களுக்குக் காவலும் போடப் பட்டது. உள்ளேயிருந்த "குற்றத்துக்காக" தங்கச்சி குடும்பத்தோடு நானும் வீட்டினுள் கொரண்டைன் வைக்கப்பட்டேன். தம்பி மாத்திரம் மையத்து விடய மாக ஓட்டமாவடிக்குப் போயிருந்தான்.

பெற்று வளர்த்து ஆளாக்கிய உம்மாவின் முகத்தை இறுதியாக ஒரு தடவை பார்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஒருபுறம்... மனதின் வேதனை களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியாத "சிறைத் தண்டனை" இன்னொரு புறம் ... இரண்டு வாரங்களுக்கு வீட்டினுள்ளேயே அடைந்து கிடக்க வேண்டி வந்தது.

●●●

பொலனறுவையில் ஓரிடத்தில் ஓடர் கொடுத்து எடுத்து வந்திருந்த சோற்றுப் பார்சல்களைக் கொண்டு நேரகாலத்துடன் பகல் சாப்பாட்டைப் பூர்த்தி செய்து கொண்டோம். நாறிப் போய்விட்டால் அவ்வளவுதான்.

திறப்பு விழா நெருங்க நெருங்க சனம் இன்னும் கூடியது. நெருங்கிய உறவுகளைப் பறிகொடுத்தவர் களாகவே பெரும்பாலும் அவர்கள் இருக்க வேண்டும். தூர இடங்களிலிருந்து வந்தவர்களில் பேருவளையைச் சேர்ந்தவர்களே அதிகம். கொழும்பிலிருந்து முன்னணி உலமாக்களும் வந்திருந்தார்கள். பயான், துஆ எல்லாமே மனதைத் தொடும்படியாக அமைந்திருந்தன.

வாப்பா மற்றும் சிறு வயதிலேயே மௌத்தாகிய பூநானா ஆகியோர் அடக்கம் செய்யப்பட்டுள்ள ஊர்ப் பள்ளிவாசல் மையவாடியில் தானும் அடக்கப்பட வேண்டுமென உம்மா கொண்டிருந்த கனவு கனவாகவே ஆகிவிட்டது. கடைசி நேரத்தில் உம்மாவின் முகத்தைப் பார்க்கவிடாது தடுத்து இழைக்கப்பட்ட அநீதி... சமூகத் தின் மீது திணிக்கப்பட்ட ஓரவஞ்சனை.... நினைத்துப் பார்த்தால் நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறது.

எம்மைப் போலவே மௌனமாக மனதுக்குள் அழுவதும், தாங்க முடியாது சத்தமிட்டே அழுவதுமான காட்சிகள் எந்த இரும்பு நெஞ்சத்தையும் உருகச் செய்யும்.

"சுருக்கா சொகமாகி வாரன் நான் ...." - வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது பேரப் பிள்ளைகளைப் பார்த்து உம்மா சொன்ன அந்தக் கடைசி வார்த்தைகள் மீண்டும் மீண்டும் காதுகளில் வந்து ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

அத்தனை பொருளாதார நெருக்கடிக்கு மத்தி யிலும் உம்மா இடைக்கிடை சுட்டுத் தந்த வடைகள், அரிசியை வறுத்து இடித்து தேங்காய்த் துருவலிட்டு சீனி கலந்து செய்து தந்த அந்த உருண்டைகளின் தனிச்சுவை என்பன நினைவில் வந்து நெஞ்சை நெகிழச் செய்கின்றன.

பெண்கள் கபுறடிக்குச் செல்வது மார்க்கத்தில் அனுமதிக்கப்படாததனால் மனைவி மற்றும் மருமக்கள் கொஞ்சம் தூரத்திலிருந்து நிகழ்வுகளை அவதானித்துக் கொண்டிருக்க, உம்மாவின் ஆண்மக்களும் மரு மக்களும் வெளிக்கிட மனமின்றி கபுறடிக்குப் போவதும் வருவதுமாக இருந்தனர். அதிலும் மூத்த மச்சான் மிகவும் வாடிப் போய்க் கிடந்தார். மாமியார் - மருமகன் உறவை விடவும் ஜோக் அடித்து அன்பைப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்கு அன்னியோன்னிய உறவு இருவருக்கும்.

"போறில்லயோ? பாசிக்குடா பீச்ல குளிச் சோணுமெண்டு புள்ளக ஒரே புடீல நிச்சிய..." மனைவியின் தொலைபேசி அழைப்பு வெளிக்கிடு வதைத் துரிதப்படுத்தியது. என்னதான் உம்மும்மா, வாப்பும்மா உறவென்றாலும் கடற்கரையென்றால் சிறுவர்களுக்கு தனியின்பம் தானே!

அங்கிருந்து வெளிக்கிடும்போது ஐந்து மணியாகி விட்டது. அந்தி மயங்கும் அந்த நேரத்திலும் ஒரு பக்கத்தால் மக்கள் வெளியேற இன்னொரு பக்கத்தால் வந்து கொண்டிருந்தனர்.

பார்வையை விட்டும் படிப்படியாக மறைந்து கொண்டிருந்தது உம்மாவின் கபுறு.

---

# மானுட நேயம்

தன்னுயிரைப் போல் நீ என்றும் மன்னுயிரையும் நேசி
தரணியில் வாழ்ந்திடு நீ என்றும் இன்சொல் பேசி
உன் பார்வையால் நீ என்றும் பகைவரை வென்றிடு
உன்பாச அழைப்பால் நீ என்றும் நேசக்கரம் நீட்டிடு.

மதங்களுக்கடையே ஒற்றுமையே மாண்புற நாமும் வளர்த்திடுவோம்.
ஒருதாய் மக்கள் நாம் எனவே ஒன்றுகூடி மகிழ்ந்திடுவோம்.
ஊரில் நல்ல மானிடராய் உணர்ந்து நாமும் வாழ்ந்திடுவோம்.
பாரில் மாந்தர் பகைமைதனை பாங்காய் நாமும் மறந்திடுவோம்.



மதத்தின் பெயரால் மானிடரை அழிக்கும் செயலும் இனி வேண்டாம்.
எல்லா மதமும் உயர்ந்ததென எண்ணும் உள்ளம் இனி வேண்டும்.
இனம், மதம், மொழி என்னும் பேதங்கள் எமக்குள் இனி வேண்டாம்.
மனித மனங்களை வெல்லும் மாந்தர் பண்பு இனி வேண்டும்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் என்றும் வேண்டும் நம்நாட்டில்
மனங்களுக்கிடையே புரிந்துணர்வு மலர்ந்திட வேண்டும் நம்நாட்டில்
சாதிச் சண்டைகளை நாமும் சாய்த்துவிடுவோம் வேரோடு
சமாதானமாய் நாமும் வாழ்ந்திடுவோம் நம் ஊரோடு.

கல்லுக்குள் ஈரம் உண்டென்பதைக் கருத்துடன் நாமும் கற்றிடுவோம்.
மனித உள்ளத்தில் மனிதத்தை நாமும் விதைத்திடுவோம்.
பிரிந்து நாமும் வாழ்ந்திருந்தால் பெற்ற நன்மை ஏதுமில்லை.
மனித நேயம் நமக்கிருந்தால், மாண்புறும் என்றும் நம்தேசம்.

உடப்பூர், வை. இராமச்சந்திரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பண்பாடு

# ஊற்றுக்களும், ஓட்டங்களும்

# கலாநிதி ந. இரவீந்திரன்



கொ.பாபு
வவுனியா

இந்த நூல் மீதான விமர்சனக்களம், கடந்த 13.09.2025 சனிக்கிழமை மறுமலர்ச்சி மன்றம் காலையடி பண்டத்தரிப்பில் காலை 9.30 மணி தொடக்கம்,மாலை 4.30 மணி வரை, விமர்சன உரைகளும் கருத்தாடல்களும் இடம்பெற்றது. இதே போன்று இதற்கு முன்னதாக 19.07.2025 சனி 20.07.2025 ஞாயிறு ஆகிய இரு தினங்களில் இவ் நூலாசிரியர் எழுதிய 18 நூல்கள் விமர்சனத்திற்கும் கருத்தாடல்களுக்கும் உட்பட்டது. இந்த நிகழ்வுகளில் நூலாசிரியரது பல நூல்கள் வாசித்து முன்னர், விமர்சனம் செய்து கொண்ட அனுபவக்கண்ணோட்டங்களையும் நிலை நிறுத்தி, இவ் ஆக்கத்தை வெளிப்படுத்திக்கொள்ள எண்ணு கின்றேன்.

குறிப்பாகச் சொல்லப் போனால் இக்களச் சூழலில், தற்போதைய இவ் விமர்சனக் கருத்துரைகள், கருத்தாடல்கள், நோக்கம் மீள் மதிப்பீட்டுக்கும், செயற்பாட்டுக்கும் உரித்தானவை. சமயம், இலக்கியம், வரலாறு, பொருளியல், அரசின் தோற்றுவாய், நாகரீகங் களின் மோதுகை, இனக்குழுமக் கலப்புருவாக்கம், தமிழ் பண்பாட்டு மரபுகள், பின் நவீனத்துவத்தின் பாட்டாளி வர்கத்துக்கான பாதக நிலைமகள். தமிழ் தேசிய இனக்குழுமத்தின், தேசிய இன உட்கூறுகள், திணை அரசியல் வாயிலாக பரிணமிக்கும், சாதிய சமூக அரசியல் போன்ற இன்னும், குறிப்பிடாத விரிந்த பரப்பை சுட்டிக்காட்டுவது, கலாநிதி ந. இரவீந்திரன் அவர்களது நூல்களின் விரிவு நிலைகளாகும்.

தற்காலத்தில புதிய களச்சூழலில், சமூகத்தின் அவசிய தேவையை கருவாகக் கொண்டு, நிகழ்ந்து கொண்ட நூல்களின் மதிப்பீட்டுப் பகிர்வாக இதனைக்கொள்ளலாம். இவற்றுக்கான ஒருங் கிணைப்பில் தோழர் சோ. தேவராஜா போன்றோரின் எண்ணக்கோலங்களும் முன்கையெடுப்பும் இங்கு மிக முக்கியம் குறிப்பிடுதல் பொருத்தமானது.

தத்தம் கற்கைப்புலகத்துக்கு, அறிவை திரட்டிக் கொள்ளும், ஓர் களமாக இதனை எண்ணாது சமூக அக்கறையும் தமக்கே உரித்தான பங்களிப்பாகவும் உணர்ந்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருவதனை யும் இச் சமூக மீட்டுருவாக்க நினைவிலி மனவோட்டத் தில் நின்று தமது உடன்பாடான, முரண்பாடான, புரிந்து கொள்ள விரும்பும் சந்தேகத்தை வெளிப்படுத்திய கருத்துரைகள் முன்வைத்தன்மை ஆரோக்கியம் தரக்தக்கது.

தமிழ்ப் பண்பாட்டின் அசைவியக்கம் எவ்வாறு நிகழ்ந்து வந்தது? என்பதே இதன் பிரதான பேசு பொருளாக காணப்பட்டது. இவை இம் மண்ணில் தோன்றிய சமயங்கள் சார்ந்தும், இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், பயணக்கட்டுரைகள் நாட்டாரியல் பண்பாட்டின் குறியீடுகள், சித்த தத்தவம், திருக்குறள் இதிகாசங்கள், புராணங்கள் உற்பத்தி முறைமை, நில அமைப்பு வேறுபாடு அதன் வளங்கள் தனி இயல்புகள் என்ற இன்னும் பல்வேறு அகப்புறக்காரணிகள் தமிழ்ப் பண்பாட்டின் ஊற்றுக்களும் ஓட்டங்களும் ஊடு பாய்வதை யாபேரும் அவதானிக்கதக்க தருணம் ஆகும்.

பாரதியின் மெய்ஞானம் தமிழ்ப்பண்பாட்டுக்குள் ஊற்றெடுத்த ஓர் புதிய தெறிப்புச் சிந்தனையகசும்:. தமிழ்ப்பண்பாட்டின் பிற்போக்குத்தனங்கள் அத்தனை யும் விசிறியெறிந்து தமிழ்மொழி மூலமே வல்லமையும் சக்தியும், பகுத்தறிவும் கொடுத்து முன்னேறிய சிந்தனை யோட்டமாகும். இங்கிருந்தே இரவீந்திரன் அவர்களது எழுத்தின் அலை வீச்சு அடியெடுக்கிறது எனக் கொள்ளலாம்.

தற்காலத்தில் பல்வகை மாறுதல்களுக்கு உட்பட்ட தளக்களச் சூழலில் புதிய தலைமுறைக்கு உட்படும் நபர்கள் பழைய தலைமுறை சாந்தவர்களுடன் ஐக்கியப்பட்டு பேசிக்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் மேற்கிளம்பியுள்ளது. இதன் தேவைப்பாட்டையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் உந்திவிட்டுள்ளது. இவற்றின் பிரதிபலிப்பாக சம காலத்தில் இவ்வாறான கருத்தாடல்கள் நிகழ்வதினை புற நிலையில் நோக்கலாம்.

தொழில் விருத்திக்கான அறிவுத்தேடலாக, பகிர்வாக இல்லாமல் ஓர் சமூகத்தேவையை உணர்ந்து அக்கறையோடு கருக்கொள்ளும் கருத்தாடல்களமாக இவற்றை ஓர் பொதுமைக்குள் உள்ளடக்கலாம். குறிப்பாக என்னென்ன பேசினார்கள்? யார் யார் பேசினார்கள்? எவற்றைப்பேசினார்கள்? எழுப்பட்ட கேள்விகள் என்ன? அளிக்கப்பட்ட பதில்கள் என்ன? கற்க வேண்டிய, கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் என்ன? என்பது போன்று ஓர் பத்திரிகை நிருபர் போன்று இக்கட்டுரை அமையாமைக்கு வருந்துகின்றேன். எனது பொதுப்பார்வையின், அவதானிப்பின் கற்றலின் கணிப்பீடே இவ் ஆக்கம்.

அறிவுத்தேட்டம் சமகாலத்தில் ஊறி வருகிறது. அவை பேசப்படுகிறது. வாசிக்கப்படுகிறது. யோசிக்கப்படுகிறது. மதிப்பிடமுடிகிறது. முரண்படத்தக்க விடயங்கள் சுட்டிக்காணபிக்கப்படுகிறது. உடன்படும் விடயங்கள் ஒரு நேர்கோட்டைக் தொடுகிறது என்பன இவ்வாறான மதிப்பீட்டு ஓட்டங்களில் அவதானிக்க முடிந்தது.

இதன் பேறான கூற்றாக அண்மைக்கால மறுமலர்ச்சி மன்றத்துள் நடந்த பகிர்வின் தொனியாக நோக்கும்போது இருவகையாக நோக்கலாம்

ந.இரவீந்திரன் அவர்களது,

*01.* அணைத்துப் புத்தகங்கள் தொடர்பில் புதிய தலைமுறைசார் புத்தி ஜீவிகள் மூலம் எழுகின்ற பார்வைப்பரப்பு

*02.* எழுநாவுக்கு எழுதப்பட்ட கட்டுரைகள் உள்ளடங்கிய தமிழ்பண்பாடு ஊற்றுக்களும், ஓட்டங்களும் என்ற நூல்

இந்த மதிப்பீட்டு உரசலின் களப்பரிமானம் யாது? ஒரு கோட்பாட்டு உருவாக்கத்தின் அழுத்தம் திருத்தமான வரைபுகளுக்கான படிக்கட்டுகளாக அமைகின்றன. தர்க்கித்து வெளிப்பட வேண்டிய கருத்துக்கள் இருப்பின் அவை செழிமை பெற விவாத முறைமை எதிர்காலத்திலும் தேவைப்படும்.

பன்முகமான விடயங்களைத் தொட்டு, பெரும் பரப்பில் எழுதும் போது முரண்தகு விடயங்கள் பலவும் முட்டிமோதவே செய்யும். முரண்படும் விடயங்களை தர்க்கிக்கும் போது காலப்பார்வை, தளப்பார்வை, வரலாற்றுப்பார்வை, புற நிலை தகவல் திரட்சிப்பார்வை போன்றன மேலோங்கும், சார்பு நிலைக்கோணங்களும் முடிவு காணாப் பொருளாய் மேலோங்கக் காணலாம். இவற்றை குறித்த நாட்குறிப்பில், நாட்களில் முழு நிறைவாக்கி விட முடியாது. உடன்பட்டுக் கொள்ளும் பொதுக்கருத்தில் ஐக்கியமாகி ஒரு செயற்பாட்டு நடைமுறையில் தொடர்ந்தும் திறந்த கருத்துப்பறிமாறல், தெளிந்த ஞானம், நேர்மை குணாம்சம், சுய மதிப்பீடு என்பன இவற்றினைத் தீர்த்துகொள்ளும் மூலதனமாக காணப்படும்.

இரவீந்திரன் அவர்களது நூல்கள் பொதுவாக தொடக்கத்திலிருந்து.

*01.* செழிமை மிக்க கோட்பாட்டை இம் மண்ணில் உற்பத்தி செய்யும் இலக்கை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவைகள்

*02.* அவ்வவ் காலகட்டங்களில் முட்டிமோதி வந்த கருத்துக்களில் ஒரு தெளிநிலை உண்டாக்கும் சமூகத்தேவையாக எழுந்தவை என எண்ணிக் கொள்கின்றேன்.

அவருடைய நூல்கள் என்பன தேடலுடன் அவர் வாசித்த பல நூறு நூல்களின் கருத்துக்களையும் தமது வாழ்வியல் அனுபவங்களையும் சுமந்து வருகின்றன. ஈழத்து இடதுசாரி மரபின் ஓட்டமாகவும், வடிகாலாகவும் இவ் நீண்ட பயணத்தை நோக்கி அடி வைக்கின்றது. இவர் எழுதிய நூல்கள் யாவும், குவி மையப்படுத்திச் சொல்லும் சமூகச் செய்தி யாது? என்னும் பெருங் கதையாடல் ஒன்று இவற்றுள் தொக்கி நிற்கின்றது. சமூக செயற்பாட்டாளர்கள் தத்தமது வாழ்வியல் அனுபவங்களோடு, தாம் கற்றுக்கொண்ட, பெற்றுக்கொண்ட, அறிவியல் ஞானத்தோடு ஒப்பு நோக்கி, இதன் முழுப் பரிமாணத்தையும் அலசி ஆராய்ந்து, ஊற்றுக்களுக்கும் ஓட்டங்களுக்குமான திசையை விமர்சன, சுய விமர்சன அடிப்படையில் மதிப்பீட்டுத் தமிழ்பண்பாட்டை கட்டியெழுப்புதல் சாலச்சிறந்தது.

பூகோளச் சூழலில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பெருங்கதையாடல்கள் தோல்வியுற்று வீழ்ச்சி கண்டன. எழுச்சி மிக்க தத்துவங்கள் பொய்த்துபோயின. புதிய தொழில் நுட்ப அறிவும்

தகவல் பரிமாற்றமும் மேலெழும் போது அறிவும் ஒரு மூலதனமாக மாறுகின்றது. வீறுகொள்ளத்தக்க பல போராட்டங்கள் மூளைச்சலவை செய்தல் மூலம் சமூகச் சிந்தனை கட்டமைக்கப்படாது. வரலாற்று எழுத்துக்கள் திரிபாக்கப்பட்டு, வருவதன் நிமிர்த்தம் அறிவியல் கோட்பாடுகளும் அதற்கே உரித்தான தத்துவ தரிசனங்களும் ஆழமான விவாதப்பொருளாக மாறாமல் தன்னெழுச்சியும் அனுபவ வாதமும் மேலோங்கி வருவது இன்றைய பெரும் வீழ்ச்சி நிலைகளுக்குப் பெருங்காரணம் என்னும் பாடங்களை நமது நிலத்துள் புகுத்தியுள்ளது.

தமிழர் வாழ்வுக்குள் நிகழ்ந்த அரசுருவாக்கம் பற்றிய கண்டுபிடிப்பு தேவைப்படுகின்றது. இச்சமுதாயவியலின் அசைவியக்கத்தை அறிதலும் முன்நகர்த்தலும் இங்கு அவசியப்படுகின்றன. அறிவு, மருத்துவம், கண்டுபிடிப்பு, போக்குவரத்து, கணக்கு, இலக்கணம், கலை நுட்பம் போன்ற அம்சங்களும் சோதிடம், சாஸ்திரம், மரபுகள், வழக்காறு, நம்பிக்கை, ஐதீகம் போன்றனவும் பிணைந்து இணைந்து வந்த, வளர்ந்த பண்பாடே தமிழர் பண்பாடு ஒவ்வருவருக்குள்ளும் வெவ்வேறு விதமான உணர்வலைகளையும், ஆர்வங்களையும் ஆர்வ இன்மைகளையும், அருவெருப்புக்களையும் தந்து நிற்கின்றன தமிழர் பண்பாடு.

இந்த முடக்குச் சந்தை நாம் எப்படிக்கடப்பது? தமிழரின் பண்பாட்டு நிலைபேறுக்கு காரணம் என்ன? புதியன பல உள்வாங்கப்பட்டும் பழையன கழியாது அவை இறுகி நிற்பதற்கும் வேறுபட்ட வடிவநிலையில் சாதியம் போன்றவை இறுகிற்பதன் சூட்சுமம் எங்கிருந்து தோன்றுகின்றது? என்பன பற்றியும் அலசலுக்கு இடம் வகிக்கின்றது. இவரது சாதி, தேசம்,பண்பாடு, இரட்டைத்தேசியம், திணைக்கோட்பாடு போன்ற பல நூல்கள் ஆய்வுத்துறையில் நமது மண்ணோடு ஒட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்கள் தர்க்க முறைக்கு உயிர்ப்பூட்டி வெளித் தள்ளக்கூடிய பகுப்பாய்வு நூல்கள் குன்றி வருவ தாகவே எண்ணத்தோன்றுகிறது. எழுந்து வரும் பலருடைய நூல்கள் தாம் வலிந்து தரித்துக்கொண்ட ஒரு கொள்கை, கோட்பாட்டை, நியாயப் படுத்தும் முகமாக அவற்றுக்குத் தேவைப்படும் கூண்டுக்குள் நின்று குதர்க்கம் பேசும் மக்களது வெற்றுணர்ச்சிகளுக்கு தீனி போட்டு வளர்க்கும் நூல்களாக காணலாம். அறிவுத் துறையில் பரந்து, ஆழ்ந்து உயர்ந்து சிறகு விரிக்கத்தக்க கால மும், கற்கைப்புலமும் அனுபவங் களும் நிரம்பியுள்ள வாய்ப்பான காலம் இது போலித்தனங்கள், பொய்மைகள், விலக்கி தெளிவு நிலை பெறும் புதிய அறிவுவொளிக்காலம் இது வாகும்.



இங்கு சிலரால் மட்டுமே ஒரு ஆழ்நிலை எழுத்தை எழுத முடிகின்றது. எதிர்கால சந்ததி இதற்கு இணையாக ஆய்வியல் போக்குடன் கற்று ஒப்பு நோக்குதல் நிகழ வேண்டும். உடன்பாட்டு விடயங் களுடன் ஒன்றிணைந்து, உடன்பாடற்ற விடயங்களை, அவற்றுக்கான நியதிகளையும் நோக்கிய தேடுதல் செய்வோம். நியாயப்பரிமாணங்களும் சமூக யாதார்த மும், சமூகத்தேவையும், அறிவின் சுடரொளியும் மிக்க நூல்கள் காலத்தால் பின்னடைந்து விடுவதில்லை. அவை மீண்டும் மீண்டும் புதிய தளங்களின் வாசிப்புக் களுக்கு உட்படும். நடைமுறைச் செயற்பாட்டுக்கும் விசையூட்டும்.

அண்மையில் இடம்பெற்ற, இரண்டு சந்தர்ப்பங களில் எழுந்த கருத்தாடல்கள் மிகவும் வரவேற்கத் தக்கது. தமிழர் பண்பாடு வாசிக்கப்பட்டு, கருத்துரை வழங்கப்பட்ட செய்தி தலைதூக்கி நின்றது.

*01.* பொதுப்புத்தி நோக்கில் ஊகமாக நூல்கள் பயனுள்ளவை என்று முகஸ்துதிக் குரலும் கேடானது.

*02.* தமது அகமன எண்ணக்கோலங்களுக்கு ஏற்ப கண்டனம் செய்தல் தவறானது.

*03.*இவற்றைக் கடந்து உள் நுளைந்து, ஒரு தலை முறை வாசித்து உடன்பாடான, முரன்பாடான கருத்துக் களுடன் கருத்தாடுகின்றது என்பது இம்மண்ணுக்குள் சமூகத்தேவையோடு கூடிய வாசிப்பு அறிவு ஜீவி களிடையே வேர்கொள்கிறது என அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். தொடர்ந்தும் கருத்தாடல்களுக்கு உட் படும் ஆசியரது நூல்கள் பலவும் கருத்தாடும் ஒவ்வொரு வருடைய தர்க்க கண்ணோட்டமாக வெயிவரும் முயற்சி வரவேற்க்கதக்கது. சமூகத்தின் மத்தியில் அதன் நிலையை மதிப்பீடக்கூடியதாகவுள்ளது. உள்ளது.

சூனியம் பொருந்திய இருட் சூழலில், ஒரு மின்மினியை பறக்கவிட்டது போன்று இம் மண்ணில் மீண்டும் தத்துவார்த்த வெளிச்சத்துக்கான குறி காட்டிகள் திசைகாட்ட ஆரம்பிக்கின்ற உணர்வு மேலிடுகின்றது.

தேர்ந்தெழுதப்பட்ட நூல்கள் தேர்ந்தெடுக்கப் பட்ட பல்துறை விமர்சர்களால் விமர்சிக்கப்பட்டு, கருத்தாடப்பட்டு எழுத்துருவாக்கப்படுதல் என்பது எல்லா வகையிலும் வரவேற்புமிக்கவை. வரலாற்றின முன்னோக்கிய பயணத்திற்கு புள்ளிகளும், கோடுகளும் இடப்படும். வரலாற்றை திருத்திப்பார்க்க வேண்டியவர் களாக உள்ளோம். பன்முக ஆளுமைகளின் திரட்சிக் களமாக, சுயாதீனமாக கருத்துக்கள் வெளியிடும் களமாகவும் நூலாய்வுக்களம் அமைந்தது என்பது உற்சாகமானது.

மார்க்சிஸ் தத்துவ வெளிச்சத்தில் நின்றே பொது வாக இவரது நூல்கள் அமைக்கப்பட்டன. இத்தத்து வத்தை படித்தலும், புரிதலும், நடைமுறைப்படுத்தலும் மிகமுக்கியமான விடயமாகும். தமிழ்பண்பாட்டுச் சூழலில் மட்டுமன்றி முழுத்தேசத்தையும் மையப் படுத்திய ஆசிரியது வெளிப்படுத்துகைக்கு தமிழ் பண்பாட்டுச் சூழலின் தேடுகை அவசியப்படுகின்றது. உற்பத்தி முறைமை, உற்பத்திச் சக்தி ,உபரி, உற்பத்தி உறவு என்பவற்றை வர்க்க வரலாற்றுப் போக்கில் பார்ப்பதை திணை அரசியலாக, சாதிய வரலாறாக வர்க்க சாதிய பிணைப்பாக சமகாலத்துள் சடுதியாக நோக்குவதில் பல சிரமங்கள் உள்ளது. திணைக் கோட்பாட்டை இப்பரிமாணத்தில் நோக்கும் நூல்கள் தமிழ் சூழலில் குன்றியிருப்பது அல்லது இல்லாமல் இருப்பது இதற்குக காரணமாகக் கொள்ளலாம். நூலாசிரியரது பார்வை என்பது, புத்தாக்கமாக தோற்றம் பெற்றதாகவே எண்ண வேண்டும் ஆகவே இத்திசை மார்க்கமான திறவுகோல் திறக்கப்பட்டள்ளது. எதிர்கால கருத்தியல் போக்குகளின் முட்டி மோதல்களே சுடர்களை மேலும் மேலும் உண்டுபண்ணும்.

கருத்துரைகள்.கருத்தாடல்கள் என்னும் இவ் அவைக்களத்தை சாரமிடுகின்ற போது சகலரதும் ஆர்வ மேலீட்டுடன் நிகழ்வுகள் உற்சாகமாக நடந்தேறியது. துறைசார் முரண்பட்ட விடயங்கள் மயக்க மற்றும் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளன. பதிலுரைகள் தெளிவுரை களாக வழங்கப்பட்டன. நூல்களின் நுளைபுலத்துள் உள்ள பன்முகப்பரப்புகள் பொறுப்புணர்வுடன் வாசிக்கப் பட்டுள்ளது. மீண்டும் மீண்டும் கருத்து மோதல்கள், பன்முக புறப்பார்வைகளின் அலசல்கள், சார்பு நிலைக் கருத்தோட்டங்களின் வீச்சங்களுடன் எதிர்வரும் காலங் களில் புடம் போடப்பட்டு, கோட்பாட்டு வெளிச்சத்தை நோக்கி, நமது மண்பரப்புக்கும் அவ் இயல்பின் அசைவியக்கத்துக்குமான தத்துவார்த்த தெளிவும் நடைமுறையும் உயர்வாய் ஓங்க வாழ்த்தி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழக்கவியின் நவீன கவிதைகள்

### காலம் ஒரு கண்ணாடி

காலத்தால் கிழிக்கப்பட்ட
பழைய நிழற்படம் ஒன்று
பின்புறத்தில் எழுதப்பட்ட எழுத்து
"நாளை காண்போம்."

நாளை வந்தது
ஆனால் அந்த முகங்கள்
படத்தின் வெளிச்சத்தில் இருந்ததல்ல
அவை கண்ணாடிக்குப் பின்னே இருந்தன
அரைகுறை நினைவுகளாக

"நாம் வாழ்வது காலத்தில் அல்ல,
நமக்குள் செதுக்கிய எதிர்பார்ப்பில்"

### உரையாடாத இரவு

இரவு என்னை அணைத்தது
பேசவில்லை
பசுமை மரங்கள் கூட
மௌனத்தில் சுழன்றன

அழகு, பசி
பொய் வாக்குறுதிகள்
எல்லாம் அந்த இரவின் வெளிச்சமற்ற
சந்தனத் தடத்தில் வாசித்தேன்.

"மௌனம் பேசுகிறது,
நாம் அதை தவிர்த்து ஓடுகிறோம்"

### காகிதத்தின் புனிதம்

ஒரு வெறும் பக்கத்தில்
எழுதாமல் விட்டது ஓர் உண்மை.
அதில் நான் என்னை வாசித்தேன்.

மெய்யான உணர்வுகள்
எப்போதும் எழுத்தின் இடைவெளியில் பிறக்கின்றன.
மூச்சு விடும் இடங்கள்தான்
பாடலின் உயிர்.

"எழுத்து, எதையாவது சொல்லும்போது,
அதன் சொல்லாததில்தான்
நாம் வாழ்ந்திருக்கிறோம்"

### மௌனம் மற்றும் எதிரொலி"

ஒரு கேள்வி கேட்டேன்,
அது சுவரில் எதிரொலிக்கவில்லை.
அது என் உள்ளத்தில் நின்றது
ஒரு சிறு கறையாக.

மௌனம் கொடுக்கும் பதில்கள்
ஒவ்வொன்றும் பச்சை விஷமாய் உருகுகின்றன.
"ஏன்?" என்ற சத்தம்
உலகின் ஒலிப்பதிவில் இடம் பெறாது.

"நாம் கேட்ட கேள்விகளின் பதில்,
எப்போதும் உள்ளத்துக்குள்ளேயே புதைகிறது"

### நகரங்கள் சொல்வதை யார் கேட்கிறார்?

பஸ்கள் ஓடுகின்றன
அவை எதையும் நினைவில்
வைத்துக் கொள்ளாது
சாலை ஓர் நூல் போல
கதைகள் பின்னிக் கொண்டு செல்கிறது

மரம் ஒரு மூச்சு விட்டது
பாதாளக் குழாய்கள் அதை தின்றுவிட்டன
நகரம் தூக்கமின்றி வாழும் சாகரம்

"நகரங்கள் ஒருபோதும் தூங்காது,
அவை கனவு காண பயப்படுகின்றன"

### ஒரு பழைய மின் விளக்கின் நினைவுகள்

எத்தனை முறை மின்னல் விழுந்தது
ஆனாலும் எரிந்து நின்றது
அதில் விழுந்த ஒரே ஒரு புழுவும்
அதனுள் வாழ்ந்தது ஒளியின்றி

தெருவில் விளக்கேற்றும்
அந்த சாதனத்தின் கீழ்
ஒரு பையன் அச்சம் எழுதினான்,
"தெரியும் வரை வாழுவேன்."

"ஒளி என்பதோ,
பேச்சில்லாத சாட்சி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாயை பேசும் போது

சதுரங்கத்தில் குதிரை ஓடும் சத்தம்
காற்றை வெட்டியது.
அந்த ஓசையில் ஒரு பெண் அழுதாள்
அவளது கண்கள் மாயையின் பிம்பம்.

மெய் என்பதெங்கு முடிகிறது?
மாயை எங்கு துவங்குகிறது?
என் நிழல் என்னை பார்த்து சிரிக்கிறது,
அது எனக்குப் பயமாக இருக்கிறது.

“இறுதியில், நம்மை நாமே புரிந்து கொள்வது
மாயையின் கடைசி சோதனை.”

## காலத்தின் மரபணு

ஒரு நொடிக்கு ஆயிரம் நினைவுகள்,
நினைவுகளுக்குள் பாசிப்பட்ட ஓர் உறுதி.
அவள் சொன்ன ஒரு வார்த்தை
நாடிகளின் மரபணுவில் பதிக்கப்பட்டது.

"நீ யாரோ?" என்ற கேள்வி
காலத்தின் நுயே-வில் பதியப்பட்டிருக்கும்.
நாம் எல்லோரும் அவ்வாறு பிறக்கிறோம்,
தானே அழிந்து விட...
“நமது நினைவுகள் வாழும் இடம்
நாம் மறந்துவிட்ட முந்தைய காலங்கள்”

## வீணை மேல் விழுந்த கண்ணீர்

ஒரு வீணையின் சுரங்களில்
ஒரு பெண்ணின் கண்ணீர் விழுகிறது.
அந்த சுரம் இசையைப் பெறவில்லை,
அதற்குப் பெயர் இடைவெளி.

சத்தம் இல்லாத ஒரு இசை
நம்மை அழைக்கிறது.
நம்மை அடையாத குரல்

## நிழலில் பழகும் குழந்தைகள்

அவர்கள் விளையாடுகிறார்கள்
ஒரு சாம்பல் வீதியின் ஓரத்தில்
ஒளி வராத இடங்களில்
நிழல்கள் தான் நண்பர்கள்.

ஒரு பிள்ளை,
வானத்தை சுவற்றில் வரைந்து,
அதைத் தாண்டிப் பறக்கிறது
தன் கற்பனைக்குள் மட்டுமே.



“வெளிச்சம் இல்லாத இடத்தில்
சிறகு வளர்கிறது”

## மாற்றங்களுக்கு பயந்து கூசும் கனாக்கள்

கனவு ஒன்று துடிக்கிறது,
மாறிய முகம்,
மாறாத கோபம்,
மாறிக் கொண்டிருக்கும் நான்.

கண்ணாடியில் என்னைப் பார்த்தேன்
அது நான் அல்ல,
நாளை தோன்றும் யாரோ.

“மாற்றம் எனும் ஆழ்கடலில்
மூச்சுத்திணறும் நம் அடையாளங்கள்”

## மண்ணின் மௌன உரைகள்

வீழ்ந்த ஒரு இலை
மண்ணின் மீது கையெழுத்தாகும்.
மௌனமாகப் பேசும் நிலம்
பல்லாயிரம் மொழிகளை மறக்கிறது.

ஓர் ஏக்கத்தால் கண்ணீர் விடும் மண்
புகழுக்கு உரிமை கொண்டதில்லை.
அதில் புதையப்பட்ட ஒரு கூச்சல்
இன்னும் உயிரோடு இருக்கிறது.

“மண்ணை வாசித்தால்
இது தெரியும் உயிர் குரலற்றதல்ல”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

4



# ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும்

மதுரைக் கூடலூர்க் கிழார் என்ற புலவர் முதுமொழிக் காஞ்சி என்ற நூலை எழுதினார். அதன் இரண்டாம் அத்தியாயமாகிய அறிவுப்பத்திலே, "சீருடை ஆண்மை செய்கையின் அறிப" என்றொரு வரி வரும். "ஒருவரது சிறப்பான ஆளுமைத்தன்மையை அவர் செய்யும் செயல் திறமையைக் கொண்டு அறியலாம்" என்று அதற்கு உரை எழுதினார் சுந்தர சண்முகனார்.

திருக்குறள் மனிதரது ஆளுமையை மேம்படுத்தத்தக்க வழிகாட்டியாக இருக்கக் கூடிய நூல் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. மிகச் சிறந்த இந்திய ஆளுமை எனப் போற்றப்படும் மகாத்மா காந்தியின் குரு டால்ஸ்டாய். அவரது குரு வள்ளுவர்.

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி

என்பது குறள்.

நல்ல விதி இல்லாதிருத்தல் என்பது குற்றம் ஆகாது. அறியவேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாதிருப்பதே ஒருவனுக்குப் பழி ஆகும் என்று வள்ளுவர் சொல்லுகிறபோது நல்ல ஆளுமையின் மற்றோர் பக்கத்தைத் தெளிவுறக் காட்டுகிறார். ஆளுமை என்பது திடீரெனத் தோன்றி விடுகிற ஒரு விடயம் இல்லை. திடீரென மறைந்து போகிற ஒரு விடயமும் இல்லை. அதன் வளர்ச்சி தாயின் கருப்பையில் ஆரம்பித்து - இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் பலோப்பியக் குழாயில் நடைபெறும் கருக்கட்டலில் ஆரம்பித்து - பிறப்பு, குழந்தைப்பருவம், பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவம் ஆகியவற்றினூடு வளர்ந்து நகர்ந்து வளர்ந்தவரில் ஒரு வடிவத்தை எடுக்கிறது. எடுத்த பின்னும் சிறு சிறு அளவுகளில் மாறுபட்டுக் கொண்டே வருகிறது.

இவ்வாறு வளர்ந்து வருகின்ற ஆளுமை விருத்தியைப் பாதிக்கும் காரணிகள் எவை என்று பார்த்தால் பாரம்பரியம் அதில் முக்கிய பங்கு வகிக்கும் .எது எது எந்தப் பெற்றோரிடமிருந்து வரும் என்று கூற முடியாவிட்டாலும், தாய் தந்தை ஆகிய இருவரின் நிறமூர்த்தங்களும் இங்கு செல்வாக்குச் செலுத்தும் என்பது நிச்சயம். நிறமூர்த்தங்களின் சிறு கூறுகளை மாற்றலாம் என்று நவீன விஞ்ஞானம் கூறினாலும் ஆளுமை விருத்தி என்ற விடயத்திலே அந்தச் செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட முடியாது என்பதே நிஜம்.

இதைத்தவிர ஆளுமை விருத்தியில் உயிரியற் காரணிகளும் செல்வாக்குச் செலுத்தும். பிள்ளை ஒன்று வளர்ந்து வரும் போதே அதன் வெளித்தோற்றம், உயரம், பருமன், தோலின் நிறம், தலைமயிரின் அமைப்பு வேறுபாடுகள் போன்ற பல்வேறு விடயங்களும் மற்றவர்கள் அந்தப்பிள்ளையைப் பார்க்கும் முறையிலும் ,அந்தப்பிள்ளை மற்றவர்களைப் பார்க்கும் முறையிலும் செல்வாக்குச் செலுத்தும். மற்றவர்களின் அபிப்பிராயங்கள் நாங்கள் எங்களைப் பார்க்கும் முறையில் சுற்றிச் சுழன்று செல்வாக்குச் செலுத்தவே செய்யும். எப்போதும் கோபத்தைக் காட்டும் முகத்தோற்றம் உள்ளவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் இல்லை என்று மற்றவர்கள் நினைப்பது வழமை. மாறாகக் குழந்தை முகம் கொண்டவர்களை மாந்தர்கள் ஏற்றுக்கொள்வது அவர்களுக்குச் சுலபமாய் இருக்கிறது.

உயரத்தில் ஒப்பீட்டளவில் குறைந்தவர்கள் தங்கள் பாதுகாப்பற்ற உணர்வை அல்லது போதாமையை மூடுவதற்காக சில நடத்தைக்கோலங்களை உருவாக்கிக்கொள்ளக்கூடும் என்றும் ஒரு கருதுநிலை இருக்கிறது. இதற்கு உளவியல் ரீதியில் போதிய ஆதாரம் இல்லாவிட்டாலும் இது பொதுவில் "நெப்போலியன் சிக்கல்" என அழைக்கப்படுகிறது. தனது உயரடுக்குப் பாதுகாவலர்களோடு நிற்கையில் அவர் மிகக் கட்டையாகவே தோன்றுவாராம். உண்மையில் அவர் 5 அடி 6அங்குலம் உயரமானவர் என்றும் பிரித்தானிய அரசியல் கார்ட்டூன்களில் அவர் வேண்டுமென்றே குள்ளமாகக் காண்பிக்கப்பட்டார் என்றும் கூறுவோருமுளர். எது எப்படி இருப்பினும் ஒருவரது புறத்தோற்றம் என்ற உயிரியல் காரணி அவரது ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் என்பது ஏற்கத்தக்கதே. பால்நிலை என்ற உயிரியற் காரணி ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவது பற்றி எங்கள் எல்லோருக்கும் நன்கு தெரியும். ஒருவரது சக்தி மட்டமும் வேலை செய்யும். வளர்ந்து வரும் பிள்ளையின் உடல் உள நலம், பிள்ளை எதிர்கொள்ளும் நெருக்கீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், பிள்ளைக்கு வழங்கப்படும் ஆரோக்கிய உணவின் தன்மை, நித்திரை செய்யும் நேரமும் முறையும் ஆகியவையும் சக்தி மட்டத்தில் உரிமை கோரும்.

மனிதரின் நரம்புத்தொகுதியின் அடிப்படை அமைப்பு எல்லோருக்கும் ஒரே மாதிரி இருந்தாலும் அமைப்பு ரீதியாகவும் தொழிற்பாட்டு ரீதியாகவும் ஆளுக்காள் காணப்படும் வேறுபாடுகள் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் மற்றோர் காரணியாகிறது. குறிப்பாக நுதல் சோணை திட்டமிடலுக்கும் தீர்மானம் எடுத்தலுக்கும் உணர்வு ரீதியான ஒழுங்கு படுத்தலுக்கும் பொறுப்பானது. மூளையின் தலைச் சோறு (limbic system )சமூக நடத்தைகள் ,மனக்கிளர்ச்சி அடையும் தன்மை, ஞாபகங்களை உருவாக்குதல் ,உந்தல்களையும் வெகுமதிகளையும் சீர்ப்படுத்தல் ஆகிய விடயங்களைக் கையில் எடுப்பது. மூளி தசைகளின் கட்டுப்பாட்டுக்கு மேலே சமூக அறிகை, உணர்வுகளைக் கிரமமாக்குதல் ஆகியவற்றையும் செய்கிறது. ஆகவே இப்பகுதிகளின் அமைப்பும் தொழிற்பாடும் ஆளுமை விருத்தியில் முக்கிய பங்களிப்பது தவிர்க்க முடியாதது.

அத்துடன் வெவ்வேறு மூளைப்பகுதிகள் எவ்வாறு தமக்குள் தொடர்புபட்டு, இணைந்து செயற்படுகின்றன, எவ்வாறு உள்ளே வரும் தகவல்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன ஆகிய விடயங்களும் ஒருவர் உலகில் காட்டும் எதிர் வினைகளைத் தீர்மானிக்கும். சூழலுக்கு ஏற்றபடி இயைபாக்கம் பெறும் பண்பு மூளைக்கு இருக்கிறது. அப்போது நரம்பிணைப்புப் பாதைகளும், தொடர்புகளும் மாறுகின்றன. இந்த மாறுதல்கள் எவ்வாறு, எவ்வளவு தூரம் நடக்கின்றன என்பதைப் பொறுத்தும் ஆளுமை விருத்தி மாற்றமடையும்.

ஆளுமை விருத்தியில் சூழல் காரணிகளின் பங்கு தவிர்க்க முடியாதது என்பது வெள்ளிடை மலை. அவற்றில் மிக மிக முக்கியமானது குடும்பச் சூழல். குடும்பத்தின் சமூகப் பொருளாதார நிலைக்கு மேலாக, அந்தக் குடும்பத்தின் இயக்கப்பாடு, அங்கு பிரயோகிக்கப்படும் பெற்றோரிய முறை ஆகியவை மிகுந்த முக்கியத்துவம் பெறும். மிகச் சிறிய வயதில் நோபல் பரிசை வென்றவர் மலாலா யூசப்ஸ்கி. பெண் கல்வி மீதான அவரது செயலூக்கம், போராட்டம் ஆகியவற்றுக்காக இந்தப் பாகிஸ்தானியப் பெண்ணுக்கு அவரது 17ஆவது வயதில் வழங்கப்பட்டது இப்பரிசு. இந்த நிலைக்கு அவரை உயர்த்தியது அவரது குடும்பச் சூழல். குறிப்பாக அவரது தந்தையார் கொடுத்த ஆதரவும் வழிகாட்டலும்.! நேரான குடும்பச் சூழல் ஆளுமை விருத்தியில் பெருத்த செல்வாக்குச் செலுத்தும் என்பதற்கு ஏராளமான உதாரணங்களைக் காட்டிட முடியும்.

தனி மனிதர்களை வடிவமைப்பதிலும் அவர்கள் எதிர்காலத்தில் பின்பற்றப்போகிற விழுமியங்கள், நம்பிக்கைகள், நடத்தைக்கோலங்கள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதிலும் கலாசாரம் அபரிமிதமான பங்கை வகிக்கும். பழக்க வழக்கங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடலாம். இவற்றில் எது சரி எது பிழை என்று கூற முடியாது. இந்து சமயப் பின்னணியில் ஆளுமை விருத்தி நடைபெறும் போது பசு என்ற விலங்கு புனிதமானதாகக் கருதப்படும். பசுவைக்கொலைசெய்தல் பெரும் பாவம் என்று நம்பப்படும். ஏனைய கலாசாரங்கள் அதை அப்படிப் பார்ப்பதில்லை.

தனி நபர்களையும் அவர்களது இலக்குகள், உரிமைகள், சாதனைகள் ஆகியவற்றையும் முக்கியத்துவப்படுத்தும் போக்கு அங்கிளோ குழும நாடுகளில் - அமெரிக்கா, பெரிய பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து - இருக்கிறது. அங்கு வளரும் பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் அது ஊறிவிடும் இலத்தின் அமெரிக்கா நாடுகளில் குடும்பம் என்ற அலகு முக்கியமானது என்பது ஒரு விழுமியமாகக் கொள்ளப்படும். மத்திய கிழக்கு நாடுகளில் பகிரங்கமான ஓர் இடத்தில் நின்று "கடவுளே" என்று சொன்னாலும் அது கடவுள் மீது சத்தியம் செய்வதாகவும் தவறான, பிழையான விடயம் என்றும் கருதப்படலாம். சீனாவிலும் அதற்கு அண்மையாக உள்ள பல நாடுகளிலும்-எங்கள் நாட்டிலும் -முன்னோருக்கு, தென்புலத்தாருக்கு ஏதோ வகையில் மதிப்புச் செய்யும் சடங்குகள் உள்ளன. ஆகவே கலாசார நியமங்கள் பிள்ளை வளரும் சூழலை ஒட்டி மாறுவது தவிர்க்கப்பட முடியாதது.

"நீங்கள் அதிகளவு நேரத்தைச் செலவிடுகின்ற சகபாடிக்குழுவிலுள்ள ஐந்து பேரின் சராசரிதான் நீங்கள்" என்ற ஜிம் ரோனுடைய(Jim Rohn) கூற்று மிகவும் சிந்திக்க வைப்பது. உண்மைதான். சகபாடிக் குழுவினுடைய செல்வாக்கு என்பது ஒருவருடைய ஆளுமை விருத்தியில் கணிசமான பங்கு வகிக்கும் சூழல் காரணிகளில் இன்னொன்று. சமூகத்திறன்களிலும் சுய எண்ணக்கரு உருவாக்கத்திலும் இது முக்கிய பங்கு வகிக்கும். ஒருவருடைய வாழ்வில் நடைபெறும் சம்பவங்கள் சில தவிர்க்க முடியாததாக இருக்கலாம். சில திட்டமிட்டுச் செய்யப்படுவதாக இருக்கலாம். எப்படித்தான் இருப்பினும்-அவை மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவங்களோ அல்லது சாதனைகளோ - ஆளுமை விருத்தியில் பங்கு பெறும் சூழல் காரணிகள்தான். மாயா ஏஞ்சலோ என்ற ஆபிரிக்க - அமெரிக்கக் கவிஞர் தனது பிள்ளைப் பருவத்தில் மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவத்தை எதிர்கொண்டவர். அது அவருடைய ஆளுமை விருத்தியில் மறையான செல்வாக்கைச் செலுத்தி யிருக்குமாயினும் அவருடைய எழுத்து புலிற்செர் பரிசை (Pulitzer)வெல்லுமளவு கனதி யைக் கொண்டிருந்தது. அவருடைய Phenomenal Woman என்ற கவிதை எமது நாட்டின் க.பொ. த .உ /த க்கான ஆங்கில இலக்கிய பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மனவடுவின் விளைவைச் சாதனையாக மாற்றக் கூடியவர்களும் இருக்கிறார்கள்தான்.

பாடசாலைக் கலாசாரம் ஆளுமை விருத்தியில் முகம் காட்டும் இன்னோர் விடயம். பாடசாலைச் சூழலும் அங்கு பெறு ம் அனுபவங்களும் எத்தகு விளைவுகளைப் பின்னாளில் ஏற்படுத்தும் என்பது கவனிப்புக்குரியது.

"இலட்சியப் பாடசாலை" என்ற தலைப்பிலான ரீன் வித்யாதில் (Rene Vithyathil )இன் கவிதை இது.

எங்கு,எந்தவித வலியுமின்றி ,வேதனையுமின்றி விழுமியங்களும் கல்வியும் பெறப்படுகிறதோ

எங்கு, இவருக்கும் அவருக்குமான வேறுபாடின்றிச் சம உரிமை மேடை வழங்கப்படுகிறதோ

எங்கு, பிள்ளைகள் சேர்த்தல், சேகரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றின் அர்த்தங்களைப் புரிந்து கொள்கிறார் களோ எங்கு, சாதனைப் பாதையில் முயற்சியும் கஷ்டமும் மனிதர்களை வடிவமைக்கிறதோ

எங்கு, கற்பனை ஒருபோதும் முடிவதில்லை என்பதுபோல் கல்வி முடிவுறாக்கடலாக ஓடுகிறதோ

எங்கு ஆசிரியர்களின் அன்பும் கூட்டுழைப்பும் சுய நலமின்றி அமைகிறதோ

அங்கு ஓர் இலட் சியப் பாடசாலை அமைதியாய் அமர்ந்திருக்கிறது

தமிழாக்கம் –கோகிலா மகேந்திரன்

பௌதிகச்சூழலும் ஆளுமை விருத்தியைப் பாதிக்கிற இன்னோர் காரணியாகலாம் .இயற்கையோடு அதிகம் தொடர்புபடும் பௌதிகச் சூழல் சிறப்பானது .கூர்ப்புக்கொள்கையை முன்வைத்த சார்ல்ஸ் டார்வினும், அல்பிரேட் ரஸ்ஸல் வலஸூம் இவ்வகுதி யில் மிகச் சிறந்த உதாரணங்கள். மனிதரும் அடிப் படையில் விலங்குகள்தான். அதனைப் புரிந்துகொண்டு முடிந்தவரை தாவர விலங்குகளுக்கு அண்மித்து அவற்றுடன் கூட்டுறவுடன் வாழும் வாழ்க்கை ஆளுமை விருத்தியில் சிறப்பான செல்வாக்குச் செலுத்தும். நவ நாகரிக உலகில் நாற்பதாவது மாடியில் குளிரூட்டி பொருத்தப்பட்ட தனி அறையில் வளரும் பிள்ளை, காரில் எல்லா இடமும் போய் வரும் பிள்ளை ஏனைய உயிரிகளைப் பார்ப்பதே அருந்தலாகி விடுகிறது .

இச் சந்தர்ப்பத்தில் சமூக உளவியல் காரணி கள் தொடர்பாகவும் சிந்திக்கவேண்டும்தானே!. வளர்ந்து வரும் காலங்களில் சமூகத்தில் ஒருவரின் வகிபங்கு என்ன என்பது கட்டாயம் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும். அதற்காகத்தான் பாடசாலை களில் சாரணர் இயக்கம், சிறு தோழியர் இயக்கம், இன்டராக்ட் கழகங்கள், வகுப்புத்தலைவர், மாணவர் தலைவர், விஞ்ஞான மன்றச் செயலர் என்று பல மன்றங் கள், பதவி நிலைகள் இருப்பதும் அவை பொருத்த மான மாணவருக்கு இடம் வழங்குவதும் நீண்டகால வழக் காக இருந்துவந்தது. எமது நாட்டில் இன்று அவையும் பொலிவிழந்து பிள்ளை டியூசனுக்குச் சரியாகப்போய் உச்சப் பெறுபேறு எடுத்தால் போதும், மிகுதி எல்லாம் தேவையற்ற வேலை என்ற எண்ணம் பெற்றோர் மத்தி யில் பரவுவதாகத் தெரிகிறது. இத்தகு வகி பங்குகள் பிள்ளையின் சுய எண்ணக்கருவில் அதீத வளர்ச்சியைக் காட்டக்கூடியன. ரொபேர்ட் பேடன் பவல்! இந்த பெயர் எல்லோரும் அறிந்தது. இன்று எல்லோரது வாயிலும் வரும் பில் கேட்ஸ் மாணவப் பருவத்தில் சாரணராக இருந்தவர் என்பது பலரும் அறியாதது .

குடும்ப உறுப்பினர் மத்தியிலும் நண்பர்கள் மத்தியிலும் காணப்படும் ஆளுக்காளான தொடர்பு களும் உறவுகளும் அவற்றின் தரமும் ஆளுமை விருத்தி யில் பெருத்த செல்வாக்கைச் செலுத்தும் வேறொரு சமூக உளவியல் காரணி. இவற்றைக் கருவாகக் கொண்டே ஏராளமான இலக்கியங்கள் உலகெங்கும் தோன்றியுள்ளன. இன்னும் தோன்ற இருக்கின்றன. ஒருவருடைய உணர்வு நுண்மதி தொடர்பாக முன்னர் விரிவாகப் பார்த்திருந்தோம். பிள்ளை வளர்ந்து வரும் போது உணர்வு நுண்மதியும் வளர்ந்து வரும். எதிர் காலத்தில் அது ஆளுமையில் பெருத்த செல்வாக்குச் செலுத்தும். ஒருவருடைய அறிகை முறைமைகள். சுய கட்டுப்பாடு ஆகியனவும் முக்கியமே.

நீண்டகால இலக்குகளை வெற்றிகரமாக அடைவதற்குச் சுய கட்டுப்பாடு முக்கியம். ஆசைகள், ஆடம்பரங்கள் போன்ற தற்காலிக திருப்தியைக் கடந்து செல்லத் தக்கவராலேயே இது முடியும். "உன்னை நீ வெற்றி கொள்வதே முதலாவதும் மிக உன்னதமானது மான வெற்றி" என்பார் பிளேற்றோ. "தி லொக்ட் டோர்" என்ற சிறுகதை சுய கட்டுப்பாடு என்ற கருப்பொருளைக் கொண்டு எழுத்தப்பட்டது.வாசிக்கலாம்.

வாழ்வின் மிக ஆரம்பகால அனுபவங்கள், சமூக பொருளாதாரப் பின்னணி ஆகிய பிற காரணிகளும் ஒருவருடைய ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தக்கூடியவைதான். ஆமர்த்தியா குமார் சென் என்ற இந்தியப் பொருளாதார நிபுணரும் தத்துவ வியலாளருமான மனிதர் இளமையில் மிகப் பாதிக்கப் பட்ட பொருளாதாரப் பின்னணியைக் கொண்டிருந்தும் 1998இல் பொருளாதார விஞ்ஞானத்துறையில் நோபல் ஞாபகார்த்தப் பரிசை வெல்லுமளவுக்கு உயர்ந்த ஆளுமையைக் கொண்டிருந்தார் என்பது போன்ற விடயங்கள் எப்போதுமே விதிவிலக்காக நிகழ்ந்து கொண்டே இருக்கும். இவர் வறுமை, சமத்துவமின்மை, சமூக நீதி, அபிவிருத்தி போன்ற பல் துறைகளில் பணியாற்றி வெற்றி கண்டார்.

ஊடகங்களின் செல்வாக்கு ஆளுமை விருத்தி யில் பாதிப்புச் செலுத்தும் பிற காரணிகளில் இன் னொன்று எனக்கருதலாம்.

பிள்ளை ஒன்றின் ஆளுமையை வடிவமைப்பதில் பெற்றோரின் பங்கு மிக முக்கியாயமானது என்பது தெட் டத் தெளிவானது. அவர்கள் தாங்கள் முன்னு தாரணமாய் இருப்பதோடு ஆதரவு கொடுத்து வழி நடத்திச் செல்லவேண்டும் அவ்வாறு செய்கின்றபோது வரும் சவால்களை வினைத்திறனுள்ள உத்திகளைக் கையாண்டு வெற்றி கொள்வதும் கவனிக்கப் பட வேண்டியதே.

ஒத்துணர்வு, வன்முறையற்ற தொடர்பாடல் முறை, முரண்பாட்டுத்தீர்வு, தீர்மானம் எடுத்தல் ஆகிய சமூக உணர்ச்சித் திறன்கள் மெல்ல வளர்ந்து வரு வதைக் கவனித்துக்கொள்ளவேண்டும். தனது சொந்தப் பலங்களையும் பலவீனங்களையும் பிள்ளை அறிந்து கொள்ளவும் அவை மற்றவர்கள் மீது எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை உணரவும் உதவ வேண்டும். பிள்ளை தனது சுய விம்பம் நன்றாக இருக்குமாறு பார்த்துக்கொள்வதை உறுதி செய்யவேண்டும். வளர்க்கக் கூடிய திறன்களைப் பிள்ளை வளர்த்துக் கொள்ளவும் உதவலாம். உணர்ச்சிகளைச் சமநிலை யில் வைத்திருக்கப் பயின்று கொள்ளுதல் மிக முக்கியம். பயன்தரு முறையில் உணர்ச்சிகள் வெளிவரும் வகையைக் கற்றுகொள்ள வேண்டும். பிள்ளை தன்னை முழுமையாக நம்புதலும், தனது பின்னடைவுகள், சவால்களில் இருந்து மீண்டெழும் ஆற்றலைப் பெற்று வரு தலும் நடைபெறுகிறதா என்றும் உன்னிப்பாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். அவ்வளவும் நடந்தால் எதிர்கால ஆளுமை அருமையாய் அமையும்.

(தொடர்ந்து பேசுவோம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2



காடுலாவு காதை பாகம் 2
நாவல் தொடர்

35

யாழ்ப்பாணத்தில் குளத்துமீன் சாப்பிடுவோர் குறைவாக இருந்தனர். அப்படி சாப்பிடுவோரும் குறைந்தவர்களாகவே மதிக்கப்பட்டனர். என்றாலும் வேலைகளுக்காகவோ வியாபாரத்திற்காகவோ யாழ்ப் பாணத்துக்கு வெளியே வந்த ஆண்கள் ஒரு அளவு குளத்து மீன், கோதுமைமாப்புட்டு என மாறியிருந்தனர். அதிலும் குறிப்பாக யப்பான் மீன் என கூறப்படும் திலாப்பியா மீன் விரும்பி உண்ணப்பட்டது. காரணம் அதிலுள்ள குறைவான முள் மற்றும் சுவை.

வரால் யப்பான் வாளை, கொக்கச்சான், பனையேறி, கெழிறு, மயறி, உழுவை, குறவை, மாங்கன் கச்சல், சுங்கான், பொட்டியன், கணையன், அயிரை இன்னும் ஏராளமான மீன்கள் வாழ்ந்த குளங்கள் வன்னிக் குளங்கள். ஒரு கிராமவாசியின் விவசாயத் தேவைகளை மட்டுமன்றி உணவுத் தேவைகளிலும் குளங்கள் கணிச மான பங்கைச் செய்யும். குளத்து நீரில் குளிப்பது அதி சுத்தமாக கருதப்பட்டது. தினமும் நீரில் நீச்சலடித்து குளிக்கும் காலமாக விவசாயத்தில் நெல் வேளாண்மைக் காலம் அமையும். தூண்டில் போட்டோ துலுசுக்கரை யில் சேலையால் வாரியோ மீன்பிடிக்கலாம், வியா பாரிகள் மட்டும் அனுமதி பெற்று வலை வீசுவார்கள். யப்பான்மீன் அதிவேகமாக இனப்பெருக்கலை செய்த துடன் பாரம்பரியமாக இருந்த மீன்களின் வளர்ச்சியை யும் மட்டுப்படுத்திவிட்டது. குளம் வற்றும் காலத்தில் சிறு சிறு துண்டுகளாக பிரியும். அது மோட்டை எனப்படும். அப்போது விவசாயப்பங்காளர்கள் கரப்புக் குத்தி பெருமளவு மீன்களை பிடிப்பார்கள். அப்போதும் ஊரிலுள்ள கால்நடைகளுக்கான குடிநீராக ஒரு பெரிய மோட்டை தவிர்த்து விடப்படும். லெச்சிமி குளங் களைப்பற்றி சொல்லச்சொல்ல சாம்பவிக்கு ஒரு தடவையாவது அந்த குளங்களைப்பார்க்க வேண்டும் என்ற அவா மேலோங்கியது.

“இனி குளத்திலதான் பொன்னாங்கண்ணி, ஒலுத்தண்டு வல்லாரை, ஆரைக்கீரை என்று கீரை வகையும் வளரும். தாமரையில் அடிமுதல் நுனிவரை அத்தனையும் மருந்து.” லெச்சிமியக்கா கதை சொல்லுறா என்றால் அதில் ஏராளமான தகவல் வரும். அந்தஸ்த்து பாராமல் சுருதியும் அமர்ந்து பேசினாள். அப்போது வோக்கிடோக்கியில் நின்ற சூரியகுமாரி வந்தாள். “அக்கா உங்களுக்கு மெசேஜ்சாம் வாங்க” என்றாள் சுருதி எழுந்து உள்ளே போனாள். சற்று நேரத்தில் திரும்பி வந்து,

“பிள்ளையள் ஜெயராஜில மீட்டிங்காம், புறப் பட தயாராகுங்க ரெண்டு நாள் காம்ப்” என்றாள். அனைவரும் தத்தமது உடைமைகளை தயார் செய்ய விரைந்தார்கள்.

ஆண் போராளிகளும் வந்திருந்தார்கள். சில அரசியல் அறிஞர்கள் பிள்ளைகளுக்கு வகுப்புகளை நடாத்தினார்கள். சமகால அரசியல் பற்றியும் போராட்ட வியூகங்களை அமைக்க வேண்டியது பற்றியும் விளக்கம் அளித்தார்கள். உங்களிலும் சிலர் சண்டைக்கு தேவைப் படும்” என்று சொன்ன போது “நாங்களும் நானும் நானும்” என்ற கோஷம் மண்டபத்தை அதிர வைத்தது. “சரி சரி போராட எல்லாரும் போனா புதிய போராளியள இணைக்கவும் வேணுந்தானே இயக்கத்தில முக்கியமில் லாத பணி எதுவுமே இல்லை. நீங்களும் இதை செய்தாத் தான் போராட்டம் நடத்த முடியும்.” என பலவாறு அவர்களது மனதை கிழறிவிட்டு கூட்டம் இனிதே முடிந்தது.

வாழ்க்கை ஒரு வட்டம், என்றால் அதன் கதவுகள் தென்படுவதில்லை. என்றாலும் ஒன்று போல ஒன்று இருப்பதில்லை. இதை ஜோதிடத்தில் சகடயோகம் என்பார்கள். இயக்கத்தின் மாபெரும் தாக்குதல் திட்டம் உருவாகிவிட்டது. அதற்காக நாட்டின் எல்லாப் பகுதி களிலும் வியாபித்திருந்த வேலைத்திட்டங்கள் முடக்கப் பட்டு சகல தமிழ்மாவட்ட போராளிகளும் இணைக்கப் பட்டனர். படையணியை சேர்ந்தவர்களுக்கான பயிற்சி கொடுக்கப்பட்டிருந்தது. அரசியற்றுறையிலிருந்தும் கணிசமான போராளிகள் சேர்க்கப்பட்டனர். இவர்கள் அடிப்படைப்பயிற்சியுடன் இருந்தவர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணி வழங்கல்தான். இயக்கத்தில் ஒரு சொலவடை உண்டு, “சப்ளைக்குப் போனவருக்கு சண்டைக்கு சான்ஸ்கிடைச்சமாதிரி” என்று.

சப்ளைக்கு செல்வது ஒரு தாழ்த்தப்பட்ட பணியாகத்தான் கருதுவார்கள். ஆனால் சப்ளைதான் சமரின் முக்கிய பணி என்பதை சொல்ல மாட்டார்கள். ஒரு சாக்கினுள் இருபுறமாக தடிகளை நுழைத்து முன்னும் பின்னுமாக இருவர் தூக்கிக் கொண்டு கள முனைவரை போகவர இருப்பார்கள் அதில் போகும் போது குறைவற ஆயுதவழங்கல், உலர் உணவு வழங்கல் என இருக்கும். வரும்போது களத்தில் காயமடைந்த வர்கள், வீரச்சாவடைந்தவர்கள் என சுமந்து வருவார்கள். எதிரியின் முக்கிய தாக்குதல்களும் வழங்கலை இலக்கு வைத்து நடக்கும். வழங்கலை தடுத்துவிட்டால் முன்னே சென்ற போராளிகள் பாடு அதோகதிதான். சப்ளை குழுவினரிடம் துப்பாக்கிகள் இருக்காது. அதேபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களமுனையில் சமரை படம்பிடிக்கச் செல்லும் படப் பிடிப்பாளருக்கும் ஆயுதம் இருக்காது. அவர் இலக்கி லுள்ள காட்சிகளை தனது புகைப்பட, ஒளிப்படக் கருவியில் சுட வேண்டியதுதான். ஏராளமான யுத்தகளக் காட்சிகள் அவர்களது முக்கியமான துணிகரமான முயற்சிதான் செயல்தான்.

போராளிகளில் பெருமளவினர் வன்னிக்கு கொண்டு செல்லப்பட்டு நிலைப்படுத்தப்பட்டனர். இப்போது போகிற வழியில் சாம்பவிக்கு இரணைமடு வைப்பார்க்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. எனினும் அது பொழுது கருகிய ஒரு மைம்மல் பொழுதுதான். இரணைமடு பெரிதாக தாவரங்களைக் கொண்ட குளம் இல்லையே. அவர்கள் வட்டக்கச்சியில் தங்க வைக்கப்பட்டார்கள். பெரிய தளபதிகள் இருவர் வந்து அவர்களது வழங்கல் பணிகளைப்பற்றி விளக்கம் அளித்தார்கள். அதன் சிறப்பு அவசியம் என்பவை பிரதானமாக விளக்கப்பட்டு அவர்களது பணிமீது அவர்களுக்கு ஒரு பற்று உருவாக்கப்பட்டது.

குறித்த நாளில் குறித்த வேளையில் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல் இரண்டு இரவுகளையும் ஒரு பகலையும் கொண்டு பெரும்போராக நடந்து முடிந்து அதற்கு "ஒப்பரேசன் தவளை" என பெயரும் சூட்டப்பட்டது. இருதரப்பிலும் நூற்றுக்கணக்கான வர்கள் கொல்லப்பட்டார்கள். வன்னியின் குளங்களை ரசிக்க ஆவலுடன் சென்ற சாம்பவி அந்த ஆசை நிறைவேறாமலே வீரச்சாவடைந்தாள். பலர் கை கால் கண் போன்ற உறுப்புகளை இழந்தனர். நளாயினி, தமிழ்ச்செல்வன் போன்றோர் படுகாயமடைந்தாலும் உயிர் பிழைத்தனர். கடற்புலிகள் மகளிர் அணியின் தளபதியொருவரான பாமா முதன்முதலில் ஒரு வாட்டர்ஜெட் படகை கைப்பற்றினார். இராணுவத் தினர் தங்களது வீரர்களின் இறந்த உடல்களை பொறுப்பேற்கவில்லை. தொடர்ந்து காயமடைந்திருந் தவர்களில் சிலரும் வீரச்சாவை அடைந்ததால் யாழ்ப்பாணம் கிளிநொச்சி போன்ற இடங்களில் சுமுக நிலை தோன்ற இரண்டு வாரங்களாயிற்று. ஆனாலும் விரைவில் பூநகரித்தளத்தை இராணுவத்தினருக்கு விட்டுவிட்டு புலிகள் வெளியேறினர். காரணம் பிடித்த இடங்களை தக்க வைக்க போராளிகள் போதவில்லை என்று கூறப்பட்டது. பெரும் அழிவை சந்தித்த போர் வெறுமனே எந்த சண்டையுமில்லாமல் இராணுவம் மீண்டும் நிலைகொண்ட தளமாகியது.

அப்படியே அடுத்த சமரை இராணுவம் "முன்னேறிப்பாய்தல்" என்ற பெயரில் ஆரம்பித்து யாழ்ப்பாணத்தை ஒரு கலக்கு கலக்கினாலும், அதை விடுதலைப்புலிகள் "புலிப்பாச்சல்" என்ற பதில் நடவடிக்கையால் பின்தள்ளினர். என்றாலும் பெருங் கடல் வழியாக முப்படைகளுடன் ஒரு தாக்குதலை இராணுவம் மேற்கொண்டால்... மக்களை தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டும் என்று புலிகளுக்கு தகவல் கிடைத்தது. சங்கானை சுழிபுரம் வழியாக தாக்குதல்கள் வரலாம். என்ற சாத்தியப்பாடு இருந்தது ஆனாலும் முதல் பெண் கரும்புலியின் தாக்குதல் காங்கேசன் துறையில் நடந்தது. அது ஒரு பெரிய வெற்றித்தாக்கு தலாக இல்லாது போனாலும் அடுத்த இலக்கு கற்பிட்டி முனையில் பெரும் தாக்குதலாகவும் அதில் அந்த கப்பலின் கப்டன் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டும் பெருமையாகக் கொள்ளப்பட்டது. இந்த தாக்குதலில் லெச்சிமியின் ஆரம்ப வழிகாட்டியும் நட்புமான வவுனியா மாவட்டத்தின் ஆரம்ப அரசியற்றுறை மகளிர் பொறுப்பாளராகவும் இருந்த நளாயினி தலைமை தாங்கிச் சென்று வெடித்திருந்தாள். அவளுடைய தாக்குதலுக்கு மதிப்பளித்து பட்டிதொட்டியெங்கும் அஞ்சலி நிகழ்ச்சிகள் நடந்தன. நளாயினியுடன் நெருங்கிப்பழகிய லெச்சிமி இந்த நிகழ்ச்சிகளில் முக்கியமான அஞ்சலி உரைகளை செய்தாள்.

இப்படி மேற்புறமாக நின்ற சகடத்தின் சக்கரம் உருளும் போது கீழ்ப்புறமாக உருளுவதற்கு தொடங்கி யது. தொடர்ந்து வெற்றித்தாக்குதல்களை தந்த இயக்கம் தோல்வித்தாக்குதலை மணலாறு மலையொன்றில் ஒழுங்கு செய்தது. மணலாறு சிங்களத்தில் வெலியோயா என அழைக்கப்படும் ஒரு மாவட்டமாக இப்போ துள்ளது. அது முன்னர் தூய கடற்கரையுடனான ஒரு தமிழர்கள் வாழ்ந்த ஒரு மாவட்டம் மட்டுமன்றி பருவ கால மீன்பிடிக்காக நீர்கொழும்புப் பகுதியிலிருந்தும் மீனவர்கள் வந்து "தாவடி" போட்டு தங்கி மீன்பிடிக்கும் பகுதியாகும். மணலாறு காடுகளின் கதை போராட்ட வரலாற்றில் முக்கியமானது.

*36*

தமிழர்கள் கரை நாட்டவர்கள். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் அவர்கள் வாழ்ந்த இடம்தான்.இலங்கையின் இந்த சின்ன நிலப்பரப்பில் பல ராச்சியங்கள் இருந்ததாக வரலாற்றில் அறிகிறோம். யாழ்ப்பாணம் மன்னாருடன் ஒரு அரசு கண்டி இன்னொரு அரசு. வன்னி ஒரு அரசு நடுவே ராஜரட்டை அடுத்து கோட்டைப்பகுதி என எல்லைகள் நிரந்தரமற்ற பல ராட்சியங்களை படித்திருக்கிறோம். என் தந்தை யிடம் நான் கேட்பதுண்டு இதெல்லாம் உண்மையா என்று. அவர் சொல்வார். "எனக்கும் தெரியாது சொல்லக்கேள்வி"என்று.ஏராளமான எமது பூர்வீக கதைகள் யாரும் நேரில் கண்டவர்களோ அதை எழுதி வைத்தவர்களோ இல்லை. எல்லாமே சொல்லக்கேள்வி தான்.

முற்கால மக்கள்(இன்றும்) கோவில்களுக்கும் வேறு ஊர்களுக்கும் கால்நடையாகவே பயணம் செய்தார்கள். அவர்களது பயணப்பாதைகள் பெரும் பாலும் தத்தமது அரசாங்கப்பிரதேசமாகவே அமையும் ஏனைய அரசுகளின் எல்லைகளை தவிர்த்தே வந்தனர். அப்படி அமைந்ததுதான் செல்வச்சந்நதியில் தொடங்கி வற்றாப்பளை கண்டு வற்றாப்பளையிலிருந்து கதிர் காமம் வரையான கால்நடை யாத்திரை. இந்தப்பயணம் கரையோரமாக முற்றுமுழுதாக தமிழ்மக்கள் அல்லது தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்தபகுதியூடாகவே நடந்தது.

முள்ளியவளை செம்மலை கடந்து வெலிஓயா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப்படும் மணலாறு வழியாகவே திருகோணமலை எல்லைக்குள் நடப்பார்கள். இந்த வெலிஓயா பதவியாக் குளத்தை முன்னதாக வைத்து சிங்களக்குடியேற்றம் நடந்த இடம். முன்னர் பருவகால மீன்பிடிக்காக நீர்கொழும்புப் பகுதிளிலிருந்து வரும் ஆதித்தமிழர் தொடர்ச்சியாக நீர்கொழும்பில் வசிக்க வசிக்க மூன்று நான்கு தலைமுறைகள் கடந்தபோது மொழியாலும். உறவுகளாலும் சிங்களவர்களாக மாறியிருந்தனர். இவர்கள் காலப்போக்கில் மணலாற்றிலும் தாவாடி போட்டுத்தங்கியிருப்பதை விடுத்து நிலங்களைப் பெற்று நிரந்தரமாக குடியிருக்க ஆரம்பித்தனர் அரசாங்கம் இவர்களின் நன்மை கருதி எனக்கூறி அவர்களது அலுவலகங்களை அனுராதபுரமாக்கு வதற்காக மணலாறு என்ற பிரதேசத்தை அனுராதபுரம் கச்சேரியுடன் இணைத்து பெரும்பான்மை இனங்களுக் கான பாதுகாப்பையும், அதேசமயம் கடலே இல்லாத அனுராதபுர மாவட்டத்திற்கு ஒரு கடலையும் இணைத்து வைத்தது.(தொடராக இருந்த வடக்கும் கிழக்கும் இந்த மாவட்ட நிலத்தாற் பிரிக்கப்பட்டது)

வெலிஓயா ஒரு மாவட்டமாக உருவான கதையில் ஏராளமான திகில் சம்பவங்கள் உண்டு. அப்பகுதியை சேர்ந்த விஜயன் என்ற எழுத்தாளர் மணலாறு என்ற பெயரில் இந்த வரலாற்றை புத்தகமாக எழுதியுள்ளார். எனவே இங்கு குறைத்துக் கொள்வோம்.

இப்போது லெச்சிமி மணலாற்றுக்காட்டுக்குள் போக வேண்டிய சூழல் ஒன்று ஏற்பட்டது. இந்திய ராணுவம் வந்தபோது, தலைவரையும் இருந்த கொஞ்ச நஞ்ச போராளிகளையும் காத்த பெருவனம் இது. இயக்கத்தில் வீரச்சாவடைந்த ஆரம்பகாலப் போராளிகள் நால்வருடைய புதைகுழிகள் இங்கே சாதாரண மண்மேடுகளாக இருந்தாலும் புனிதமாக பேணப்பட்டு வந்தன. இந்த வனத்தின் கதையை நாடு நன்கறியும் உலகின் பெரும் வல்லரசுகளில் ஒன்றான இந்தியப் படையை கதறடித்த மிதிவெடிகளின் வரலாறு, இரு நூற்று ஐம்பத்தாறு கிலோ எடையுள்ள குண்டு வானி லிருந்து வீசப்பட்டு அது தலைவரை நெருங்காமல் அருகாமையில் விழுந்து சேற்றில் புதைந்து வெடிக்கா மல் போனது. அந்த குண்டு பின்னர் பொதுமக்களின் காட்சிக்கும் வைக்கப்பட்டது. உணவுப் பொருட்கள் இல்லாதபோது வைத்த கஞ்சியும் நிலத்தில் கொட்டி விட தலைவர். அதை அப்படியே வாய்வைத்து உறிஞ்சியதும் இங்குதான். சில நூறு விரர்களையே பகிர்ந்துவிட்டு காட்டில் இருந்த புலிகளுக்கு இந்தியப் படையின் வரவு பெரும் சிம்ம சொப்பனமாக இருந்தது. அப்போதுதான் அதை தடுப்பதற்கான வழிகளை யோசிக்குமாறு தோழர்களிடம் கேட்டாராம். ஏங்கும் அரவமில்லாமலே ஆஜர் ஆகும் படையை தடுக்க மிதிவெடிகளை வைக்கலாம் என யோசித்த ஒரு இரவில் நித்திரையின்றி இருந்து யோசித்தபோது இந்தவகை மிதிவெடியை கண்டு பிடித்தாராம். அந்த ஜாமத்தில் தோழர்களை அழைத்து அதை செய்து காட்டினாராம். மறுதினமே வேகமாக தயாராகின மிதிவெடிகள் அதற்கு ஜொனி என்ற பெயர் சூட்டப்பட்டது. ஜொனி என்ற மாவீரன் நினைவாக ஒரு மிதிவெடி நின்றால் இருந்தால் களைத்து ஒருமரத்தில் சாய்ந்தால் எங்கும் வைக்கப்பட்ட வெடிகள் வெடித்தன. இதுபற்றி லெச்சிமி தலைவரே சொல்லக் கேட்டிருந்தாள். அதன்பிறகு நடந்தவை வரலாற்றில் வந்துவிட்டனவாயினும் போராளிகளின் அடுத்த கண்டுபிடிப்பும் ஒன்றிருந்தது அதுவும் ஒரு மாவீரனின் பெயரில்தான் "பசீலன்" இது மாங்குளம் தாக்குதலின்பின் கைவிடப்பட்டது.

இயக்கத்தின் மிக மோசமான பின்னடைவு "ரிவிரச" என்ற பெயரில் நடைபெற்ற பெருஞ்சமர். அக்டோபர் முப்பது, ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று நான்கு வலிகாமத்திலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர். தென்மராட்சியில் தங்கிய ஒரு சில வாரங்களுக்குள்ளாகவே பெருமளவு மக்களை வன்னிக்கு நகர்த்தினார்கள். பெரும் அவலங்களை சந்தித்த மக்கள் தென்மராட்சியில் போதிய வசதிகளின்றி இருந்தனர் அவர்களை வன்னிக்கு நகர்த்தியபோது ஒருசிலர் வடமராட்சியில் சென்று வாழ விரும்பினர் எனினும் அதிலுள்ள ஆபத்தை சொல்லி அவர்களை வன்னிக்கே அனுப்பினார்கள். கடுமையான எறிகணை வீச்சுகளுக்கு நடுவே மக்கள் கடலைக் கடந்தார்கள். இந்த மக்களுடன் லெச்சிமியும் முன்னதாகவே புறப்பட வேண்டியதாயிற்று. கடற்கரையில் நின்ற போது லெப். கேணல் தணிகைச்செல்வியும் வன்னிக்கு போக வந்திருந் தாள். அவளை கடுகதியாக செல்லும் படகில் ஏறப் பணித்தபோது வேறு பெண்கள் அங்கில்லாததால் லெச்சிமியை தன்னுடன் அழைத்துக்கொண்டு அந்தப் படகில் ஏறினாள், தணிகைச்செல்வி. சுமார் மூன்று மணிநேரம் எடுக்கும் பயணத்தை அந்தப்படகு முக்கால் மணி நேரத்தில் கடந்தது. கரையில் இறங்கியதுமே ஒரு உழவூர்தியில் அவர்களை வெளியே கரைக்கு அப்பால் அனுப்பினார்கள்.

பெரிய பெரிய பொறுப்பாளர்கள் கரையில் நின்று இறங்கிய எவரையும் குவிய விடாமல் உடனடி யாகவே வாகனங்களில் ஏற்றி அனுப்பினார்கள். மக்கள் பூநகரிச்சாலையில் பெருமளவில் இறக்கப்பட்டனர். அவர்களது உடைமைகள் மட்டுமல்ல யாழ்ப்பாணத்தி லிருந்து கொண்டுவரப்பட்ட அரிசி சீனி போன்ற கடைகளின் பொருட்கள் என தனித்தனி குவிக்கப்பட்டுக் கிடந்தன. அவற்றின் உரிமையாளர்கள் அங்கே ஓரமாக குந்தியிருந்தனர். உணவு தண்ணீர் என்பன தட்டுப் பாடாக இருந்தது. ஆனால் சிலர் தமது பொருட்களை வைத்து தேநீர் தயாரிக்கவோ கஞ்சி வைக்கவோ முயன்று கொண்டிருந்தனர்.

இருந்தவர்களில் ஏராளமானவர்களுக்கு வன்னியை தெரியாது. "பச்சைத்தாவரங்களே இல்லாத அந்த பாலைவனம்தான் வன்னியா இங்கே பெரிதாக வீடுகளையே காணவில்லையே என ஒரு முதியவர் அங்கலாய்த்தார். இதே சமயம் பார ஊர்திகளில் மக்களை ஏறக்கேட்டனர் போராளிகள் வாங்க கிளிநொச்சிக்க போய் மிச்சத்தை யோசிக்கலாம். என அவர்கள் அழைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது பலர் ஏறிக்கொண்டார்கள். தட்டிவான் முதல் பேருந்து சிற்றூர்தி வரை மக்களை ஏற்றிக் கொண்டு பயணித்தன. வீதிகள் குண்டும் குழியுமாக இருந்தது. சிறிதளவு மழையும் தூறிக் கொண்டிருந்தது. சினிமாவில் சோகக் காட்சிகள் வரும்போது வருமே ஒரு மழை அதுபோல. அரசியற்றுறைப் போராளிகள் மக்களுக் கான சேவையில் இருந்தனர். ஆனால் தணிகைச் செல்வியும் லெச்சிமியும் முதலாக கிழம்பிய வாகனத்தில் கிளிநொச்சிக்கு பயணமாகினர். அங்கிங்கெனாதபடி எங்கும் மக்கள்கூட்டம் நிரம்பி வழிந்தது. அங்கிருந்த பாடசாலைகள். தேவாலயங்கள், கோவில்கள் என மக்கள் தங்க வைக்கப்பட்டனர். தமக்கு தெரிந்தவர்கள் உறவினர்கள் என உதவி உள்ளவர் களாலும் போக முடிய வில்லை. வாகனம் எதுவும் இல்லை. சில உறவினர்கள் பாடசாலைகள் கோவில் களை முற்றுகையிட்டு உறவிரைத் தேடினார்கள். புலிகளின்குரல் தன் வேலையை மூன்றாவது நாள் கிளிநொச்சியில் தொடங்கியது. என்றாலும் அதற்கு முன்பே காணாமற் போன உறவுகளைத் தேடவும் தாமிருக்கும் இடங்களை அறிவிக்கவும் என மக்கள் கூடும் இடங்களில் ஒலிபெருக்கி சேவையை நடத்திக் கொண்டிருந்தார்கள். "ரிவிரச" நடந்த போதும் சாவகச் சேரி கொடிகாமம் மந்துவில் போன்ற இடங்களில் இந்த ஒலிபரப்பு நடந்தது. "நான் மட்டுவிலில் நிற்கிறேன்" என்று உறவினருக்கு தகவல் சொல்லும் ஒருவர், மறுநாளே பளைக்கு போயிருப்பார்.

இந்த தேடுதல்கள் பல மாதங்கள் நீடித்தது போதாமல், வன்னிக்கு வெளியே தலைநகரில் இயங்கிய பண்பலைவரிசை வானொலிகளும் இந்த சேவையில் தம்மை சேர்த்துக் கொண்டன. வன்னிப் பெருநிலம் தன்னை விஸ்தரித்துக் கொண்டு மக்களை தன்னுள் ஈர்த்துக் கொண்டது மல்லாவி, கந்தபுரம், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, விசுவமடு, வள்ளிபுனம் வட்டக்கச்சி தர்மபுரம் என பல பட்டினங்கள் உருவாகி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த முயன்றன.

(தொடரும்)

# பேசும் இதயங்கள்

ஜீவநதி பற்றி...

நெருக்கடிகள் சூழ
நிலை குலைந்து போக
நீர்த்துப் போனது மனது
நிம்மதிக்காய் வாசிக்கலாம்
என்று யோசித்த போது
கண்ணில் பட்டது ஜீவநதி
புரட்டினேன் பிடித்துப்போனது!

என் மனதைத் தொட்ட
முதல் விடயம்
காரைக்கதனின் "புழுதி" பற்றி
கெக்கிராவை சுலைகாவின்
எளிமையான விமர்சனம்!
வாசித்தேன்; ரசித்தேன்;
மீண்டும் மீண்டும்!
அழகாய் ஆழமாய் இலகுவாய்
எப்படி முடிகிறது இவர்களால்
இப்படி விமர்சனம் எழுத?

அன்னை கோகிலா மகேந்திரனின்
"ஆளுமையின் ஆட்சி"
"முடிவைத் தொடுவாய் முயன்று"
உளவியல் கட்டுரைகள்
நெருக்கீட்டைத் தவிர்த்து
உளமதை உரம்பெற வைக்கின்ற
ஊக்க நதி!

"நேற்றில் கரைந்தோடும் இன்று"
ந.ரவீந்திரனின் நகைச்சுவை
மணக்கும் அனுபவப் பகிர்வு சிறப்பு!
ஆக்கம் எதுவுமின்றி
செல்போன் செயலிகளாய்
நடைப்பிணங்களாய் திரியும்
இளையோர் வாசிக்க வேண்டிய
உற்சாக நதி!

"காடுலாவு காதை"
வாசிக்கும் போதெல்லாம்
நடக்கின்றோம்!
ஓடுகின்றோம்!
தேடி அலைகின்றோம்!
நாமே!
சொந்த அனுபவங்களை
கண்ணில் காட்சியாய்
படரவிடும்
உணர்வு நதி!

வியாக்ரன்!
சிறுவர் மனதைத் தொடும்
சித்திரங்கள் மட்டுமல்ல
நகைச்சுவைபட
நற்கருத்துக்களை பகிர்கின்ற
அறிவு நதி!

ஆக்கங்கள் யாவும்
உள்ளார்த்தம் புலப்படவே
புதுவகை ஓவியம்
தருகிறாள் கனிவுமதி! அது
ஜீவநதி ஆக்கங்கள்
ஜீவன் பெற வைக்கும்
வியப்பு நதி!

கல்லும் மலையும் குதித்து;
காடும் மேடும் கடந்து;
நீர் நிலைகளை நிரப்பி;
களனிகளை வளமாக்கு;
கடலைச் சேரும்
நதிபோல, தன்
இலக்கை அடைகிறது
ஜீவநதி!

ஜீவநதி! ஓய்வில்
என்னை உற்சாகம்
கொள்ள வைத்த
இன்பநதி!

–சாய்ரூபா
பரந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி வெளியீடுகள்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்










அருண்மொழிவர்மன்
கட்டுரைகள்
400.00

சிறுகதைகள்
700.00

கட்டுரைகள்
400.00










அ.யேசுராசா
பத்தி
500.00

கணபதி சர்வானந்தா
கதைகள்
600.00

வேதா. இலங்காதிலகம்
கவிதை
800.00

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org